
# கல்வேலி

## கலைமலர் 2014



நெடுந்தீவு ஒன்றியம் ( ஐக்கிய இராச்சியம் )

DELFT SOCIETY (UNITED KINGDOM)

RADAR news

அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதும் இல்லை



தாய் நாட்டு, உலக, விளையாட்டு, சினிமா செய்திகள்

கலை, கலாச்சார, அறிவியல் விபரங்கள்

காணொளி, விபரண படங்கள்

உடனுக்குடன் திரிபு படுத்தப்படாத முதற்கட்ட செய்திகள்

அகிலத்தின் அனைத்து முக்கிய நிகழ்வுகளையும்

அறிந்து கொள்ள சொடுக்குங்கள்.

# www. radarnews.com


"தொடர்ந்து புதுப்பித்து மேம்படுத்தப்படும் செய்தித் தொகுப்பு" | 24 Hours Updates on News

Printed @JR Print Tel: 020 8503 6643 www.jrprint.com



# சமர்ப்பணம்

எமது மண்ணின் நலனுக்காக
தமது இன்னுயிர்களை தியாகம் செய்த
தன்னலமற்ற நற்பிறவிகளுக்கும்,
இனப்போரினால்
தம் இன்னுயிர்களை இழந்த
அனைத்து மக்களுக்கும் குறிப்பாக
குமுதினிப்படகு அவலத்தில்
உயிர் நீத்தோர்க்கும் எமது
இதயம் நெகிழ்ந்த
கண்ணீர் அஞ்சலியைச்
சமர்ப்பிக்கின்றோம்.



இம்மலரில் வெளியிடப்பட்டுள்ள ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பாளராவர்.
மலர்க்குழுவோ நிர்வாகமோ பொறுப்பாளர்களாக மாட்டார்கள்.
நன்றி
மலர்க்குழு, நிர்வாகக்குழு – நெடுந்தீவு ஒன்றியம். (ஐக்கிய இராச்சியம்)

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 01 வாழிய நம் தீவு (வாழ்த்துப்பா) | 03 |
| 02 தலைவரிடமிருந்து | 04 |
| 03 வாழ்த்துரை பாராளுமன்ற உறுப்பினர் திரு சி.சிறீதரன் | 05 |
| 04 ஆசியுரை தியாகராஜாக்குருக்கள் கணேஸ் சுவாமிகள் | 06 |
| 05 ஆசியுரை திரு பிராங்லிங் | 07 |
| 06 ஆசியுரை திரு பா.வசந்தக்குருக்கள் | 08 |
| 07 கடல் கடந்த கல்வேலி...! கனடா மக்கள் ஒன்றியம் | 09 |
| 08 நெடுந்தீவு பாடசாலைகள் பழைய மாணவர்கள் மன்றம் கனடா | 10 |
| 09 செழுமை நமதே | 11 |
| 10 காரியம் யாவினும் கைகொடுப்போம் | 12 |
| 11 ஆசியுரை திரு வ.சுவாமிநாதன் | 13 |
| 12 வாழ்த்துரை திரு சிவ.சங்கரப்பிள்ளை | 14 |
| 13 வாழ்த்துரை திரு இ. கோவிந்தன் | 15 |
| 14 நெடுந்தீவு அன்னை | 16 |
| 15 பார்புகழ் கொண்டிடமைப் பெற்ற தீவே | 17-18 |
| 16 செயற்குழு | 19 |
| 17 நன்றாகத் தமிழ் செய்த தவத்திரு தனிநாயகம் அடிகள் | 20-23 |
| 18 பயனர்களின் உரம் வளர்த்த பசு மண் | 24-28 |
| 19 முதுமை அடைதலும், மூட்டு வாதமும் மருது கந்தப்பு | 29-35 |
| 20 நெடுந்தீவு Dr.K.E சந்திரபால் | 36-37 |
| 21 நெடுந்தீவும் அதன் சிறப்புக்களும் | 38-41 |
| 22 Delft West- Where I grewup | 42-44 |
| 23 நினைவுகளில் நீங்காத நெடுந்தீவு மயூரன் புண்ணியமூர்த்தி | 45-48 |
| 24 உன் நினைவே கலர் | 49 |
| 25 எனது நிலம்.... பிறர்க்கென்ன உரிமை? | 50-52 |
| 26 நீடு புகழ் நெடுந்தீவு | 53-55 |
| 27 தாயகம் | 56 |
| 28 Finding the Divine Wisdom of Our Eternal-Self in Silence. | 57-61 |
| 29 எமது இதயபூமி! | 62-64 |
| 30 நிமிர்ந்து நிற்போம் | 65 |
| 31 நெடுந்தீவின் இயற்கை வளங்களைப் பேணுதல் | 66-67 |
| 32 பூர்வீக நெடுந்தீவு | 68 |
| 33 நெடுந்தீவழகு | 69 |
| 34 குருதி கொப்பளித்த குமுதினி | 70 |
| 35 I, Miss Abbirhami Ratnarajah | 71-73 |
| 36 துறைமுகங்களில் | 74-75 |
| 37 தீவார் நாம் | 76 |
| 38 எமைப்பிரியா இசையவள் | 77 |
| 39 Tuberculosis Awareness | 78-79 |
| 40 இளவாலை அமுது | 80 |
| 41 ஒரு புனித கைலாய யாத்திரை | 81-84 |
| 42 மன அழுத்தம் (Psychotic Depression) | 85-86 |
| 43 மண்ணின் பெருமையில் விண்ணில் தாரகை | 87-88 |
| 44 தொடரும் என் அழகிய தீவின் கனவுகள் | 89-96 |
| 45 தமிழ் ஊற்று தனிநாயகம் அடிகளார் | 97 |
| 46 புலம்பெயர் தமிழரின் பரம்பரை இடைவெளி | 98-100 |
| 47 நெடுந்தீவே வாழி | 101-102 |
| 48 தனிநாயக அடிகள் பற்றி | 103-105 |
| 49 தாய் நிலத்துப் பிரசவம் | 106 |
| 50 என்னவர்களுக்கு | 107-108 |
| 51 நன்றியுரை | 109 |

# வாழிய நம் தீவு

வாழ்க வாழ்க நெடுந்தீவு வாழ்கவே
வானம் அளந்த வண்ணத்தமிழ் வாழ்கவே
ஏழிசையும் போற்றிடும் ஈழத்தாயும் வாழ்த்திடும்
எங்கள் நெடுந்தீவு அன்னை வாழ்கவே

கல்வியுடன் செல்வம் பல கலை வளர்க்கும் பள்ளி
நல்லறிவுக் கண்கள் பல நலமருளும் சான்றோர்
உள்ளத்திலே உறுதி கொண்டோர் நாங்களே – என்றும்
உயர்வு தாழ்வு இல்லை எங்கள் நெஞ்சிலே

கல்லின் கலை வண்ணம் பல கலைகளிலும் மின்னும்
வல்ல பனை தென்னை எங்கள் வாழ்விற்கொரு பாடம்
ஆடு மாடு குதிரை மேயும் அழகிலே – அரிய
தானியங்கள் விளையும் எங்கள் மண்ணிலே

பஞ்சம் பசி இல்லை இந்தப் பசிய பசுந்தீவில்
கெஞ்சுவதும் இல்லை நாம் செழித்திருக்கும் வாழ்வில்
அன்னை மண்ணின் அரவணைப்பில் வாழ்வோம் - நாம்
அனைவருமே ஒன்றுபட்டு எழுவோம்

முல்லை மலர் போல நல்ல முகம் மலரும் மக்கள்
அள்ளி விருந்துண்டு வரும் அயலவர்கள் கோடி
உள்ளமெலாம் மகிழ்வு கொள்ளும் நாடு – எங்கள்
உறவு கொண்டோர் மறந்திடாத வீடு

தெய்வமெலாம் வந்து எங்கள் தேசத்திலே நின்று
வையகத்தின் வாழ்வில் தனி நாயகத்தைத் தந்து
தெய்வத் தமிழ் வாழ வைத்த தீவு - இந்த
உலக மெலாம் எழுந்து நின்று பாடு

சாதி மதம் இல்லை எங்கள் சமரசத்தின் எல்லை
வாசமுடன் ஒன்றாய் நாம் வாழுகின்ற முல்லை
செல்வம் ஓங்கச் சீமையெலாம் செல்வோம் - மண்ணில்
சீர் நிறைந்த புதிய வாழ்வைப் படைப்போம்

வாழ்க வாழ்க நெடுந்தீவு வாழ்கவே
வானம் அளந்த வண்ணத் தமிழ் வாழ்கவே
ஏழிசையும் போற்றிடும் ஈழத்தாயும் வாழ்த்திடும்
எங்கள் நெடுந்தீவு அன்னை வாழ்கவே
அ.வேணுகோபால்

# தலைவரிடமிருந்து



என் அன்பு நெஞ்சங்களுக்கு வணக்கம்.
நெடுந்தீவு ஒன்றியத்தின் தலைவராக இருப்பதையிட்டு பெருமை அடைகின்றேன். திரு.கா.சாந்தலிங்கம் செயலாளராக இருப்பது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியது. அவர் என் பள்ளித் தோழன் நீண்ட நாள் நண்பன். செயற்குழு உறுப்பினர்கள் எல்லோரும் என்னுடன் கைகோர்த்து வந்தது எனது கடமைகளை எல்லாம் சுலபமாக்கியது.

நெடுந்தீவு ஒன்றியமும் எல்லா ஒன்றியங்கள் போல் நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவுவதுதான் முக்கிய நோக்கம் என்றாலும் அதற்கு அப்பால் இங்குள்ள தீவக உறவுகளையும் எம் தீவகம் சார்ந்த உறவுகளையும் ஒன்று சேர்த்து ஒரு கூரையின் கீழ் கொண்டு வந்து ஆடி பாடி கூடி ஒற்றுமையுடன் மகிழ்வதுவும் எல்லோரும் எல்லோரையும் தெரிந்து கொள்ளவும் இளம் சமுதாயத்தினர் தங்களது உறவுகளை அறிந்து கொள்ளவும் தெரியாததைத் தெரிந்து கொள்ளவும். ஒரு இணைப்புப் பாலமாக ஒன்றியம் செயற்படும்.

கல்வேலி கலைவிழாக்களை நடாத்துவதன் மூலம் இலைமறை காய்களாக இருக்கின்ற ஈழத்துச் சீர்காழிகளை, மாயாக்களை வேல்ஆனந்தன் களை இன்னும் ஒவ்வொரு துறைகளில் சிறந்து விளங்குபவர்களையும் அவர்களுடைய திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு ஒன்றியம் மேடை அமைத்துக் கொடுக்கும்.

கல்வேலி கலைவிழாக்கள் மூலம் கிடைக்கின்ற நிதியைக் கொண்டும், ஒன்றியத்திற்கு ஒரு நிரந்தர வருமானத்தைத் தேடிக்கொள்வதன் மூலமும் நல் மனம் கொண்டோரின் நன்கொடை மூலம் பெறப்படும் நிதியைக் கொண்டும் நெடுந்தீவினுடைய முக்கிய தேவையைப் பூர்த்தி செய்ய ஒன்றியம் தன்னாலான முயற்சியைச் செய்யும்.

கல்வேலி கலைவிழாவும் கல்வேலிமலரும் சிறப்புற ஒத்துழைத்த அனைவருக்கும் நெடுந்தீவு ஒன்றியம் நன்றி தெரிவித்து இருந்தாலும் குறிப்பாக திரு S. பிள்ளைநாயகம் அவர்களுக்கும் அவர் மூலம் அறிமுகமான லைக்கா மோபைல் நிறுவனத்தாருக்கும். எனது தனிப்பட்ட நன்றிகளைத் தெரிவிப்பதுடன் விளம்பரங்கள் தந்துதவிய எல்லா அன்பு நெஞ்சங்களுக்கும் எனது நன்றிகள்.

கல்வேலி கலைவிழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவன் துணை புரிய வேண்டுமென வேண்டுகின்றேன்.

*ந. இராசேந்திரன்*
*தலைவர்*
*நெடுந்தீவு ஒன்றியம், ஐக்கிய இராச்சியம்*
*01.03.2014*

# யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ. சிவஞானம் சிறீதரன் அவர்களின் வாழ்த்துச்செய்தி.

## கல்வேலி நாகரிகம் உலகெல்லாம் பரவட்டும்!



நீண்டு நெடிதான எமது பாரம்பரியம். திரைகடலோடித் திரவியம் தேடும் திண்ணிய செம்மையின் வளர்ச்சி, இன்று பனி படர்ந்த தேசத்தில் வியாபித்து தமிழுக்கும் தமிழருக்கும் தாங்கிப்பிடிக்கும் காலத்தொண்டை ஏற்று நிற்கின்றது. மாண்டு விடும் என்று காலம் காலமாய் எதிரிகள் நினைத்த போது ஈற்றில் எங்கிருந்தோ பற்றி எரியும் நெருப்பாக எழுந்து தமிழை தமிழரை நிமிர வைத்திருக்கின்றது. இன்று ஈற்றில் எரியும் தாகத்தை புலம்பெயர் தமிழ் சமூகம் தன் கையில் பலமாய் வைத்திருப்பதால் செல்நெறியின் ஊடாக நான் கல்வேலியின் கனவுகளைப் பார்க்கின்றேன்.

கடல் நடுவில் உறவிழையைப் பேணும் மண்ணாகிய, நெடுந்தீவு புயலும் மழையும் போல இன்று வரை அம்மண்ணுக்குத் தொடரும் இன்னல்கள் இடைஞ்சல்களைக் கடந்து தவிடு பொடியாக்கி அந்நிலத்தில் இருக்கும் ஆழமான பரந்த விரிந்த ஆச்சரியமான பெருக்கும் மரம் போல உறுதி கொண்ட பரந்த உலகத்தின் பல தேசங்களிலும் கல்வேலி கலாச்சாரம் கொண்ட நெடுந்தீவு மண்ணின் மைந்தர்கள் புகழ் பூத்தவர்களாக, தாய் மண்ணை நேசிப்பவர்களாகஇருப்பது கண்டு நான் மகிழ்வடைகின்றேன். நெடுந்தீவு ஒன்றியம் என்ற ஒரு ஒருங்கிணைந்த அமைப்பை உருவாக்கி மிகச்சிறந்த நோக்கங்களுக்காக செயற்பட்டு வருவது வாழ்த்தத்தக்கது.

எமது கலை கலாச்சாரம் பொருளாதாரம் வளர பேணப்பட, தாய்மண்ணில் எமது மக்கள் கையேந்தாத வாழ்வு பெற, நெடுந்தீவு ஒன்றியம் எடுக்கும் முயற்சிகளை வரவேற்போம். கல்வேலி கலை மாலையாகவும் கல்வேலி கலைமலராகும் எண்ணியதை ஈடேற்றும் கனவோடு உறவுகளின் உழைப்புக்கு எமது மக்கள் சார்பில் எனது வாழ்த்துக்கள். ஊரின் உயர்வுக்காய் உழைப்பதற்காக உந்துதல் கொள்வோம் என்ற மகுட வாசகத்தின் கீழ் அறைகூவல் விடும் புலம்பெயர் தமிழ் சொந்தத்தின் உணர்வு கண்டு எவரும் கை கொடுப்பார்கள்.

மணலில் கால் புதையப்புதைய நடந்து கல்வேலிகளுக்குள் வாழ்ந்து, கடலில் அலைகளையே நித்தமும் கண்டு, அலையின் சங்கீதத்தில், பனைகளின் மிடுக்கில், வாழ்வு காணும் நெடுந்தீவு எனும் எமது தாயத்தின் தனித்துவமான ஊரின் எண்ணங்கள் ஈடேறக் கை கொடுத்திடுவீர். நானும் அம்மண்ணின் வேரில் புதல்வன் என்ற வகையில் அம்மண் எப்போதும் தமிழ் நிலத்தின் புகழ் காக்கும் என உறுதி கூறுவேன். கல்வேலி மலரின் இதழ்கள் உலகின் விளிம்பு வரை உரசட்டும். கலைமாலை தமிழர் இதய ஓசையை ஒலிக்கட்டும்.

நன்றி.

*சிவஞானம் சிறீதரன் பா.உ.*

## Honours

Queen Elizabeth II Diamond Jubilee Medal recipient
*Canada - 2013*

Maha Guru
*Awarded by Maha Chandi Homam priests Group led by Achalpuram. A. Gnanaskantha Kurukkal*
*India - 2010*

Siva Kala Ratna
*Awarded by Pillaiyarpatti Veda Agama School and Temple*
*India - 2005*

International scholar of Hindu Theology
*Awarded by Tamil Cultural Centre of Toronto*
*Canada - 2005*

Sri Durga Karya Thurantharar
*Awarded by Nallai Thirugnana Sambandar Atheenam*
*Sri Lanka - 2001*

Saivagama Paripalana Sathana Thilakam
*Awarded by International Council of Hindu Priests*
*India - 2001*

Siva Darma Poosanam
*Awarded by International Hindu Guru Peedam*
*Australia - 2001*

Saiva Paripaalakar
*Awarded by Hindu Devasthana Saba*
*Malaysia - 1986*

Thiru Muruga Gurumani
*Awarded by Nallai Thirugnana Sambandar Atheenam*
*Sri Lanka - 1983*

Satyoyatha Sivachariyar
*Awarded by Sivasri .I. Kailasa natha Kurukkal, Hindu Matha Peedathipathi*
*Sri Lanka - 1978*

## Awards

Saiva Paripooranar *2001*
Sivaneri Kaavalar *2001*
Sivagama Kiriya Vitthakar *2001*

உ

Maha Guru

# Hindu Rev. Kanaswami Thiagarajah Kurukkal

**Senior Minister of Hinduism, Head of Canada Hindu Matha Peedam**
**Founder, president and Chief Priest of Thurkeswaram Sridurka Hindu Temple in Toronto, Canada**

**30 Carnforth road, Toronto, Ontario, CANADA. M4A 2K7**
**Phone : 416-759 9648 / 416-751 3545 / 416-751 5151**
**priest@durka.com**

உ

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"



என்றும் நித்தியமாக வாழவைக்கும் சஞ்சீவி என்ற ஔஷதம் நிறைந்த பூமி என நம்பப்படும் இடம் "மருந்துவமா மலைவனம்". அனுமான் சஞ்சீவி மலையில் இருந்து பெயர்த்து எடுத்து வந்த நிலத்தின் ஒரு பகுதி வழியில் வீழ்ந்து உருவாகிய இத் தீவுக்கு இக்காலப் பெயர் நெடுந்தீவு. பசுத்தீவும் இதுவே. பால்தீவும் இதுவே. தலைத்தீவும் இதுவே. அபிஷேகத் தீவும் இதுவே.

ஆன்மீகமும் அறிவும் தளைத்தோங்கிய இவ்வூர் மக்கள் உலகெலாம் பரந்து வாழ்ந்தாலும், அவர்களின் இதயத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் மண்வாசனை, கலைகளாகவும் விழாக்களாகவும் ஆங்காங்கு மலர்கின்றன. பண்பாடு காக்கும் நம்மவர்கள் அக்கரைச் சீமையிலே "நெடுந்தீவு ஒன்றியம்" என்ற குடையின் கீழ் அமர்ந்து அன்பினில் குழைத்த அறுசுவையாய் கல்வேலி கலைமாலையை படைப்பது அறிந்து மகிழ்வுறுகிறோம்.

நெழுவினி விநாயகர் கோவிலிலும் கரமத்தை கந்தசுவாமியார் கோவிலிலும் அன்று நான் குருக்களாய் பணிபுரிந்த போது, தினமும் தெய்வபக்தியோடு சந்தித்த அன்பு உள்ளங்கள் இன்று தம் ஊரை மறவாது, தம் பண்பாடு போற்றி விழாக் கொள்வது நம் எல்லாருக்கும் பெருமை. ஊர் ஒன்றுபட்டால் உலகு ஒன்றுபடும் என்பர் நம் முன்னோர். நமது ஊர்ப் பெருமை மூலம் நமது நாட்டுப் பெருமையையும் இதன் மூலம் நாம் நிலைக்கச் செய்கிறோம். ஊருக்கு சென்றறியா இளம்சந்திக்கும், அவர்களின் உள்ளத்துக்குள் ஒரு ஊரையே உருவாக்கிக் கொள்கிறோம்.

இதற்கெல்லாம் ஒரு அர்ப்பணிப்பு தேவை. இந்த அர்ப்பணிப்பு நெடுந்தீவு ஒன்றியத்திடம் இருப்பது கண்டு பெருமைப்படுகிறோம். கல்வேலிக் கலைமாலையில் உங்கள் கைகளில் தவழும் இம் மலர் முலம் உங்கள் இதயத்தோடு பேசி, எண்ணியதனைத்திலும் ஏற்றம் பெற்று நிறைவோடு வாழ்க என வாழ்த்தி, நெடுந்தீவு நெழுவினி பிள்ளையாரின் பேரருளும், கரமத்தை கந்தசுவாமியாரின் திருவருளும் சித்திக்கவும், கனடா துர்க்கேஸ்வரம் துர்க்காதேவி அம்பாளின் கருணகடாட்சம் என்றும் துணைநிற்கப் பிராத்திக்கிறோம்.

புதுமை வேகமும், பொதுநலநோக்கும், பொங்கிவரும் துடிப்பும் கரை புரண்டு ஓட பொலிந்திடுக கல்வேலிக் கலைமாலை விழா!

ஓம் சிவம்: ஓம் சக்தி

அன்புடன்
சிவஸ்ரீ தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள்
தலைவர், பிரதம குரு, ஸ்தாபகர்
துர்க்கேஸ்வரம், ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவில்
கனடா
9 February 2014

# ஆசியுரை

## நெடுந்தீவு ஒன்றியம் ஐக்கிய இராச்சியம்



இவ் ஒன்றியத்தின் வளர்ச்சியைக் காணும் போதும் அதன் ஐக்கியத்தின் வலுவையும் காணக்கூடியதாக உள்ளது. நடாத்தப் பட இருக்கும் கல்வேலி கலைவிழா நன்றாக நடைபெற எமது ஆதரவையும் ஆசியையும் வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்விழாவைச் சிறப்பாக நிகழ்வுற எம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும் இரக்கமும் கூட இருந்து இதில் பங்குபெறும் ஒவ்வொருவரையும் பலப்படுத்தி சிறப்பாக நடைபெற ஆண்டவரிடம் வேண்டி நிற்கின்றோம்.

Franklin
New Rivan Church



சைவப்புலவர் சைவசித்தாந்தப்பண்டிதர்
சிவஸ்ரீ பா வசந்தக்குருக்கள் (B.A Hons)
ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயம் வோல்தம்ஸ்ரோ, லண்டன்
Mob: 07903 707 878
Home: 020 8523 3802
Email: vasanthan@live.co.uk

# கல்வேலி கலை நிகழ்வு நல் நிகழ்வாக நிறைவடைக!

புலம் பெயர்ந்து வாழும் நாம் பல்வேறு வேலைச்சுமை உளவியல் மாற்றம் உடல் தளர்வு போன்ற பல காரணங்களால் நம் உறவுகளை, நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பு குறைவானவர்களாக அலைகின்றோம். மேலும் எமது ஊர் வாசனைகளை மக்களை நெருங்க நேரம் கிடைப்பதில்லை. இவ்வாறு எமக்கு இருக்கும் வேளைகளில் பல நண்பர்களை உறவுகளை கோவில்களில் சந்திக்கின்றோம். அதேபோல் அரங்கேற்றங்கள், திருமண வைபவங்கள் எல்லாவற்றிலும் சந்திக்கின்றோம். ஆனாலும் ஊர் போன்ற நினைவை ஏற்படுத்துவது ஊர் சார்ந்த ஒன்றுகூடல்கள் என்பது ஏற்றுக்கொள்ளகூடியது. மேலை நாடுகளில் ஊர் சார்ந்த சங்கங்கள் பாடசாலை நினைவைக் கொண்டு வரும்.

இந்த வகையில் நெடுந்தீவு ஒன்றியம் ஏறத்தாள பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக அவ்வூர் மக்களின் தொடர்பாடல் களமாக இயங்கி வருவது மிக்க மகிழ்ச்சியைத்தரும் செய்தியாகும். கல்வி, கலை என்பன ஒவ்வொரு ஊருக்கும் தனிச்சிறப்பு உடையது. நெடுந்தீவு பல சமய மக்களைக் கொண்டு விளங்கும் ஊர் எனினும் தமிழுக்குத் தொண்டாற்றிய தனிப்பெரும் தொண்டர் தனிநாயகம் அவர்களை பெற்ற ஊர் என்றால் அது ஒரு தனிச்சிறப்பு.

இவ்வொன்றியம் மேலும் பல காலம் நிலைபெற்று அவ்வூர் மக்களின் மகிழ்வோடு மற்றைய மக்களின் மனங்களையும் களிப்படையச் செய்வது மிக நன்று.

கல்வேலி என்ற கலை நிகழ்வு சிறப்புடன் நடைபெறவும் அனைத்து மக்களும் நீண்ட ஆயுளும் ஆரோக்கிய வாழ்வும் சகல செல்வ யோகங்களையும் பெற்று வாழ கற்பக விநாயகன் கழலடி பணிந்து வாழ்த்துகின்றோம்.

கற்பக விநாயக ஆலய சிவாச்சாரியார்கள்.

# கடல் கடந்த கல்வேலி...!



புலம்பெயர் நாடுகளில் மக்கள் அவர்களின் வாழ்வாதாரத்திற்காக அந்தந்த நாட்டு மொழி கலாச்சார பண்பாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டிய தேவையும் அவசியமும் ஏற்படுகின்றது. இதனால் பல்வேறு தேசிய இனங்களின் அடையாளங்கள் மாற்றப்பட்டு காலத்தால் அழிந்து போனதற்கான சான்றுகள் நிறையவே உள்ளன.

தாயக மண்ணில் சமகால நிகழ்வுகளை நோக்கு மிடத்து எமது மொழி கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் ஆங்காங்கே ஒதுக்கப்படுவதையும் அழிக்கப்படுவதையும் நிதர்சனமாக காணமுடிகின்றது.

இந்த வேளையில் புலம்பெயர் மக்கள் தாம் வாழும் நாடுகளில் பொருளாதார நெருக்கடிகளையும் இடர்பாடுகளையும் அவ்வப்போது சந்தித்து வரும் வேளையிலும். தொப்புள்கொடி உறவுகளையும் மக்களையும் துளியேனும் மறவாமல் அந்தந்த நாடுகளில் ஒன்றியம் அமைத்து பல ஆண்டுகளாக காத்திரமான பங்காற்றி வருவதை பார்க்கின்றபோது எமது மொழி கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் மேன்மேலும் விருட்சமாக வளரும் என்கின்ற நம்பிக்கையையும் சந்தோசத்தையும் தருகிறது.

அத்தோடு இவ்வாண்டு மக்கள் ஆதரவோடு பிரித்தானியாவில் கல்வேலி கலைமாலை விழா எடுத்து உலகமெலாம் தமிழ் வளர்க்கத் தொண்டாற்றிய தீவக மைந்தன் தவத்திரு தனிநாயகம் அடிகளார் அரங்கம் அமைத்து எம் தீவகத்திற்கு பெருமை சேர்க்கும் நெடுந்தீவு ஒன்றிய ஐக்கிய இராச்சியத்தை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றது நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா.

அத்தோடு உங்கள் ஒன்றியம் தாயக உறவுகளுக்கு தொடர் சேவைகளையும் உதவிகளையும் செய்யும் என்ற நம்பிக்கையோடும் வாழ்த்துக்களோடும்..!

நன்றி வணக்கம்

*தவக்குமார் கிருஸ்ணராசா*
*தலைவர்*
*நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா*

# நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா
## OLD STUDENTS ASSOCIATION OF DELFT SCHOOLS - CANADA
## Reg: 1585865



தலைவர், செயலாளர், பொருளாளர்,
நிர்வாக உறுப்பினர்கள்
நெடுந்தீவு ஒன்றியம் - ஐக்கிய இராச்சியம்

வாழ்த்துச் செய்தி

ஐக்கிய இராச்சியத்தில் (U.K) இயங்கி வரும் நெடுந்தீவு ஒன்றியத்தினால் வெளியிடப்படும் "கல்வேலி" மலருக்கும், ஒன்றுகூடல் விழாவுக்கும் வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

"கல்வேலி" மலர் நெடுந்தீவு பாரம்பரியங்களையும், மக்களின் பண்பாட்டையும் உலகிற்கு வெளிக் கொணர்வதுடன் வருங்காலங்களில் அங்குள்ள தேவைகளை அறிந்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும் என நம்புகின்றோம். மேலும் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள், மற்றும் ஒன்றியத்திற்கு ஆதரவு கொடுக்கின்ற எம் ஊர் உறவுகளுக்கும் எனது சார்பாகவும், எம் மன்றத்தின் சார்பாகவும் மனம் நிறைந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மலர் சிறக்க எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி.

நெடுந்தீவு சு. நடராசா
தலைவர்
நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய
மாணவர் மன்றம் - கனடா

15.2.2014

# செழுமை நமதே!



'பைன் ஆட்ஸ்' என்ற கலைகள், தமிழில் 'நுண்கலைகள்' என்று அழைக்கப்படுகையில், 'கவின் கலைகள்' என்று, அவற்றைத் தமிழ்ச் சிறப்போடு சொல்லியவர் தனிநாயக அடிகள். இது அவர் பெற்றிருந்த அறிவின் அடிப்படையைச் செப்பும்.

கலைகளும், புலமையும் அவற்றின் அடிப்படை சார்ந்து பரிமளிப்பவை. நல்ல ஆதாரத்துடனான கலை வெளிப்பாடு, சிறந்து மிளிர்கிறது.

வாழ்க்கைக்கலையும் அப்படியே, அக்கலையின் ஆதாரத்தைக் கற்றவர்கள், தெரிந்தவர்கள் நாம். நம் ஊர் கற்பிக்கும் மகத்தான பாடம் அது. அந்த வலுவான ஆதாரத்தில் காண்கின்ற செழுமை அது நம்முடையது.

ஒன்றியத்தின் கலைவிழா இனிதே சிறக்கட்டும்.

*க. மகாலிங்கம்*
*முன்னாள் தலைவர்*
*நெடுந்தீவு ஒன்றியம்,*
*ஐக்கிய இராச்சியம்*

# காரியம் யாவினும் கைகொடுப்போம்



உலகில் ஓர் முனையில் வேர் விட்டு இன்னொரு முனையில் தழைத்து நின்றாலும், தம் வேரடி மறவாமல் தாம் வாழும் தேசங்களில் எல்லாம் தமது தீவக மக்களை ஒருங்கிணைத்து அவர்களுக்குள் ஓர் அறிமுகத்தையும் பரஸ்பர நட்புறவையும் ஏற்படுத்தி கொடுப்பது மட்டுமல்லாது, தாம் பிறந்த தாய் மண்ணிற்கும் தம்மாலான சேவைகளை புலம் பெயர் நெடுந்தீவு ஒன்றியங்கள் புரிந்து வருவது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரிய விடயமாகும்.

அந்த வகையில் நெடுந்தீவு ஒன்றியம் (ஐக்கிய இராச்சியம்) காலம் காலமாக கலை விழாக்களை நடத்துவதன் மூலம் ஒவ்வொரு திசையிலும் வாழும் பிரித்தானிய மக்களை இணைத்து எமது கலை கலாச்சாரம், உறவு, பண்பாடு ஆகியவை அழிந்து விடாமல் பேணி க்காத்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எம்மை நோக்கி பலவேறு பணிகள் விரிந்து கிடக்கிறன. எமது வருங்கால சந்ததியினரை இணைப்பதன் மூலம் வாழையடி வாழையாக நாம் பேணி காத்து வந்த நட்பும், உறவும், நேசமும் தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்லப்படல், போரால் பாதிக்கப்பட்டு இன்றும் நிர்க்கதியாக நிற்கும் உறவுகளை கைகொடுத்து தூக்கிவிடல், போக்குவரத்து, குடிநீர் போன்ற அடிப்படை பிரச்சினைகளில் எந்தவித முன்னேற்ற மும் அடையாத எமது தீவகத்தை கட்டி எழுப்புதல் என பலவேறுபட்ட நிலைமைகளை சீர் செய்வது புலம்பெயர் ஒன்றியங்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

நாம் ஒன்றுபட்டு செயலாற்றுவதன் மூலமே நமது மண்ணையும் மக்களையும் வளப்படுத்தலாம். மேலும் நீங்கள் எடுக்கும் இப்பெருவிழா வெற்றி அடையவும் உங்கள் மலர் சிறப்புறவும் மனதார வாழ்த்துகிறேன்.

நன்றி

*செல்வரத்தினம் சுரேஷ்,*
*தலைவர்(2006-2007)*
*நெடுந்தீவு ஒன்றியம் (ஐக்கிய இராச்சியம்)*

# ஆசியுரை...



கல்வேலி கலைவிழா ஒன்று லண்டனில் நடைபெற இருப்பதாகவும் அதற்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்புமாறும் அதன் தலைவர் திரு. ந. இராசேந்திரன் அவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டார். இத்தலைப்பு புதுமையானதாகவும், வியப்பூட்டுவதாகவும், ஆச்சரியப்படத் தக்கதாக வும் இருந்தது. கல்வேலி எமது ஊருக்கு மட்டும் சொந்தமானது. அன்று தொட்டு இன்று வரையும் எமது மக்கள் கல்லினால் வேலி அடைக்கிறார்கள். எமது ஊர் மக்கள் மாத்திரமின்றி அங்கு படை கொண்டுள்ள படையினர் கூட கல்லினால் மிகச் சிறப்பாக வேலி அடைத்து மாவிலி துறைமுகச் சுற்றாடலை வியப்பூட்டும் வண்ணம் பனை ஓலையில் அலங்கரித்து அழகாக வைத்துள்ளார்கள். எனவே அங்கு நடைபெறும் கலைவிழாவுக்கு கல்வேலி கலைவிழா என்று பெயர் வைத்தது மிகவும் பொருத்தமானதும் எமது தனித்தன்மையை பேணுவதாகவும் உள்ளது.

கோவில்கள் கலையின் கூடமாகட்டும், கடவுளைக் காண்பது கலையின் நோக்கம், ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விற்கும் என் அம்மை சரஸ்வதிதேவி, கோவில்கள், கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெறும் உற்சவங்கள் கலைகள் சிறப்பாக பேணப்படுகின்றன.

கோவில்கள் நடைபெறும் உற்சவ காலங்களில், பேச்சுக்கலை, மேள வாத்தியக் கச்சேரிகள், நாட்டிய நடன நிகழ்ச்சிகள் நாட்டுக் கூத்துக்கள் போன்றவை கலை விழாக்களாகவே காணப்படுகின்றன.

சமண, பௌத்த மதங்கள் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் பிறன் மாதர் உறுவது பெருகிய துன்பம் பிறவாள் உறுவது பெரும் பேரின்பம் என்று கூறி மக்களை கலை நிகழ்ச்சிகளில் இருந்து ஒதுக்கி வைத்தார்கள். ஆனால் அவர்களுக்கு பின் வந்த நாயன்மார்கள், ஆழ்வார்கள் தமது மதவாத திவ்விய பிரபந்தங்கள் மூலமும் சோழர் கால காப்பியங்கள் மூலமும், இயல், இசை, நாடகக் கலைகளை வளர்த்தார்கள். கோயில்கள், கலையின் கூடங்களாயின.

இலண்டனில் நடைபெறும் கலைவிழா எமது கலைகளை அங்குள்ள மக்கள் மறவாது பேணிப் பாதுகாக்க பெரும் பணி ஆற்றும் என்று மனப்பூர்வமாக எண்ணுகின்றேன்.

விழா சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

*வ.சுவாமிநாதன் (B.A போராதனை)*
*ஓய்வு நிலை உதவித் தொழில் ஆணையாளர்.*

# வாழ்த்துரை



தமிழ்ப் பற்றும் மண் பாசமும் மிக்க நெடுந்தீவு மக்கள் வாழாத இடமே இல்லை என்று கூறும் அளவுக்கு பூமிப்பந்தின் பட்டிதொட்டி எல்லாம் பரந்து சிறப்பாக வாழ்கின்றார்கள். தன் வாழிவிலும் ஏனையோர் வாழ்விற்காக தம்மை அர்ப்பணிக்கும் இயல்பான குணம் கொண்ட எம்மக்கள் எங்கு வாழ்ந்தாலும் தாய்மண் பற்றும், விடுதலை உணர்வும், ஊர்ப்பற்றும் கொண்டு அளப்பரிய பணிகள் ஆற்றி வருகின்றார்கள்.

தமிழ்ப்பண்பாடு, கலாச்சார விழுமியங் களை மிகவும் இறுக்கமாக எங்கிருந்தாலும் பின்பற்றும் எமது மக்கள், தாம் வாழும் இடங்களில் ஓர் அணியாக ஒன்றித்துப் பெருமையைப் பறை சாற்றுவதோடு ஊரின் வளர்ச்சிக்கும் ஊருணியாக உதவி வருகின்றார்கள். அந்த வகையில் இலண்டன் வாழ் எமது தீவக மக்கள் நெடுந்தீவு ஒன்றியம் ஐக்கிய இராச்சியம் என்ற அமைப்பை உருவாக்கி ஒன்றிணைந்து செய்றபட்டு வருவது மனநிறைவைத் தருகின்றது.


அவர்கள் கல்வேலி கலைவிழா மாலை விழாவை ஏற்பாடு செய்து நடாத்த இருக்கும் செய்தி இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. தமிழர் தம் தனிக்கலைகளை எம் தீவின் வாரிசுகள் உலக அரங்கில் அரங்கேற்றுவது சாதனைச் செயற்பாடாக அமைகின்றது. விழாவின் நிறைவாக கல்வேலி என்னும் மலர் வெளியிடப்படுவது மிகவும் பொருத்தமானது. எமது மக்களின் கலை கலாச்சார பண்பாடு விழுமியங்களையும் உள்ளக்கிடக்கைகளையும் வெளிக்கொணரும் ஊடகமாக அம்மலர் அமையும் எனலாம்.

இவ்வகையில் ஐக்கிய இராச்சிய நெடுந்தீவு ஒன்றியத்தினரின் முயற்சி பாராட்டத்தக்கதும், பயனுடையதுமாகும். அவர்கள் ஏற்பாடு செய்துள்ள விழாவும் மலர் வெளியீடும் சிறப்புறவும் நெடுந்தீவின் பெருமை உலகெங்கும் பறை சாற்றிடவும் மனமார வாழ்த்துகின்றேன்.

சி.வ.சங்கர்ப்பிள்ளை J.P (சிபாரத்தினம்)
முன்னாள் C.R.I
யாழ் மாநகரசபை,
முன்னாள் தலைவர்
நெடுந்தீவு பிரதேசசபை

நெடுந்தீவு மேற்கு,
நெடுந்தீவு.
05.02.2014

# வாழ்த்துரை



மூலிகைத்தீவு, பால்தீவு, பசுந்தீவு பசுத்தீவு DELFT எனும் வரலாற்றுப் பெயர்களைக் கொண்டு விளங்கிய நெடுந்தீவுக்குத் தனி ஒரு வரலாறு உண்டு என்றால் அந்த ஊரைப் பற்றி தெரிந்த எவரும் மறுக்க மாட்டார்கள். அனுமனின் கரம்பட்ட மண், விக்கிரமாதித்தனின் கால்பட்ட மண், விசுவாமித்திர முனிவரின் ஆசீர்வாதம் பெற்ற மண் நெடுந்தீவாகும்.

அதனாலோ என்னவோ இத்தீவு மக்களுக்கு ஒரு தனித்தன்மை உண்டு. இவர்கள் பராக்கிரமசாலிகள். இவர்கள் தமது பராக்கிரமத்தை யாழ்ப்பாண குடாநாட்டில் மட்டுமல்ல வன்னியில் மட்டுமல்ல புலம் பெயர் நாடுகளிலும் நிலை நாட்டி வந்துள்ளனர். இன்றும் நிலை நாட்டி வருகின்றனர். பராக்கிரமம் என்பது இவர்களின் பிறப்பிலேயே வந்தது.

நெடுந்தீவைச் சேர்ந்த ஐக்கிய இராச்சியத்தில் வாழும் மக்கள் நெடுந்தீவு ஒன்றியம் என்ற அமைப்பை உருவாக்கி அதன் மூலம் தமது விழுமியங்களைப் பேணி வருகின்றனர் என்பதை அறியும் பொழுது பெரும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இவ்வமைப்பு சிறப்புடன் வளர்ந்து நெடுந்தீவுக்கு பெருமை தேடிக் கொடுப்பதுடன் அவர்கள் நடாத்தும் கல்வேலி கலை மாலை நிகழ்ச்சி சிறப்புறவும் நெழுவினி விநாயகரின் துணைகொண்டு வாழ்த்துகிறேன்!

வணக்கம்

அன்புடன்

*இ.கோவிந்தன் BA (Hons) Economics*

*(ஓய்வு பெற்ற வங்கியாளர் – கனடா)*

# நெடுந்தீவு அன்னை



இந்து சமுத்திரச் சந்தத் திலகமாய் என்றும் மணம் கமழும் எழில்
பொங்கும் இயற்கையின் பூஞ்சரச் சோலையோ பொற் பதம் பாடி மகிழ்-திகழ்
சிங்களத் தீவென செந்தமிழ் அன்னையும் சிங்களமும் ஒன்றி மகிழ் புகழ்
மண்டிக் கிடக்கும் நம் ஈழத் திரு நாட்டின் மா நெடுந்தீவு அன்னை!

அன்பு அருள் அறம் செந்தமிழப் பண்புடன் ஆற்றல் மிகுந்து தவழ் அன்னை
சென்ற இடமெல்லாம் செல்வமும் பேர் புகழ் சிந்தி ஒளிர் எங்கள் தாய்- கலை
கல்வி விருந்தோம்பல் காவியத்தொன்மையும் காத்திடும் காருண்யத்தாய் - அலை
துள்ளி வரும் எழில் வண்ண வண்ணச்சோலை சூழ அரண் மிகு தாய்!

காலம் முழுவதும் கனிப்பொருள் நல்கிடும் கற்பகதருவுடன் - குறு
சோலை வயல்களும் பச்சிலைத் தோட்டங்கள் சூழ நடம் செய்யும் தாய் - நாளும்
சூடை சுறாவொடு சொட்டு ஒடியற் கூழ் மேலும் அளித்திடும் தாய் - மற்றும்
தூய அமுதாய சாறாப் பிட்டித் தண்ணீர் சுகந்து வரம் நல்கும் தாய்!

வள்ளுவர் கூறிய மாண்பு மனை மாட்சி இல்லற நல்லறமாய் - வாழ்வின்
மா உயர் உச்சியை எட்டும் வகை காட்டி வாழ்விக்கும் எம் அன்புத் தாய் - குலம்
சாதி மத பேதம் செல்வம் வறுமை சமத்துவத்தின் மகிமை - காட்டிய
தூய பதம் பெற நீ அருள்வாய் அம்மா தொல் நெடுந்தீவு அன்னை – எங்கள்
தொல் நெடுந்தீவு அன்னை

*சோமசுந்தரம். லோகராசா*

# பார்புகழ் கொண்டமைப் பெற்றதீவே
# பணிந்தோம் நின்பதம் வாழியவே!!!

நாற்புறமும் அலையெழுந்து தாலாட்டுப் பாடி
நறுந்தமிழில் சரஞ்தொடுத்து மாலைகளாய் சூட்டி
பூக்களுடன் பாற்குடங்கள் பூ முனையில் ஏற்றி
பூசை செய்து இராமேஸ்வரம் ஈசன் கழல் சாற்றி
நோற்பிருந்து புகழ் களித்த நூலோர்கள் வாழ்ந்து
நூற்றிருந்த தவத்திலொரு தனிநாயகம் தோன்ற
பூத்தமலர் முகம்செழிக்கும் மாவிலியின் முகப்பில்
புகழ்கொழித்துப் பெருமை கொள்ளும் நெடுந்தீவே வாழி

தென்னையுடன் பனைமரங்கள் தேன்சுரக்கும் இளநீரும்
தினைவரகு சாமையுடன் வரகு மொண்டி விளையும் நிலம்
ஆவோடு கன்று துள்ள அடல் ஏறும் குதிரை மேய
அருமருந்தாம் மூலிகைகள் நிறைந்திருக்கும் திருநாடே
அன்னியர்கள் ஆண்டிருந்த அழகுமிகும் கோட்டையும்
அரியபல புறாவினங்கள் இன்றும் அமைந்திருக்கும் கூட்டையும்
பொன்னின் நதி ஊற்றெடுக்கும் மணற்கேணி அருகில்
பொது மருத்துவ மனையமர்ந்த புகழ் கொண்ட எம்நாடே

தூண்காலை குதிரைலாயம் தூயலோறஞ்சியார் கோவில்
காண் பல வரலாற்றினோடு கச்சதீவின் அருகமர்ந்து
வான்மழை பொழிந்த அமிழ்தில் வற்றாத சாறாப்பிட்டி
பூதம்பொழி கிணற்றினோடு புதுமைபல கொண்ட தீவே
ஆதிமனிதன் கால்பதித்த அடையாளம் அழியாதின்றும்
வீகாமன் வெடியரன் வெற்றிக்கொடி நாட்டி நின்றோன்
நீதி கொண்ட பூதத் தம்பி நீண்டபெரும் சரித்திரத்தை
ஓதி ஓதி ஒன்றுபட்டே ஒற்றுமையாய் வாழும் நாடே

வாடாத இயற்கையுடன் வளம் குறையா தெங்கள் பூமி
ஓடுகின்ற கால்நடையின் உறைவிடங்கள் தரவையெல்லாம்
பாடும்மீன்கள் துள்ளுகின்ற பரந்த மணல் வெல்லைத்துறை
ஆடும்பெரு நாகங்களும் அணிதிரளும் முல்லை வனம்
கூடிமுயல் கூட்டம் வைக்கும் குயிந்தாவடி காட்டினிலே
ஆதி சிவனார் லிங்கமாகி அமைந்தவிடம் பூவரசம் காடு
ஆலமா வனம் அமர்ந்த ஆனைமுகனின் பெரும் பதியை
கோலமுடன் வணங்கிடுவோர் குறையகற்றும் தீர்தக்கரை

மேடுகளும் பள்ளங்களும் மிடுக்கான கல்வேலிகளும்
ஆட்டுநிரை மேய்ந்து செல்ல அழகான பெருக்குமரமும்
கொத்தி இரவதையும் குண்டு குளம் தாமிளாப்பும்
வெட்டுக் களிகடந்தால் விளைச்சல் கொண்ட ஊர்மனையும்
நெட்ட நெடு நெழுவினியான் நீண்ட பனஞ்சோலையாங்கே
மொட்டரிசி நெல்விளையும் முன்று தமிழ் பாட்டெடுக்கும்

அட்டதிக்கும் அதிர்ந்திடவே அழகன் கரமத்தைக் கந்தன்
கொட்டி முரசாடுகின்ற சூரன்போர் கூடிநின்று பார்த்திடுவோம்

ஐந்து வட்டுப்பனை அழகும் அடர்ந்த புகுகாட்டு வையிரவரும்
ஏரி சுனைகள் கடந்து வந்து ஏறும் குருக்கள் மடத்தடியில்
நீடுபுகழ் பெரியபுலம் நெஞ்சு நிறை ஐயனாரைக் கண்டு
ஆடிஅமாவாசையிலே காளியம்பாள் அடிதொழுவார் வினையகலுமாமே
கண்ணகி வாழ்ந்த வரலாற்றைக் காலங்கள் தோறும் அரங்கேற்றும்
பொன்னகர் தெக்காட்டு மாரியம்மன் பொங்கல் திருவிழா காண்போமே
வண்ண வண்ணக் கொடிகள் பல கட்டி வருகின்ற கடற்கலங்கள்
கண்ணில் ஒற்றிக்கொள்ளும் யூதாதேயு கடற்கரையின் காவல்
தெய்வமம்மா

கீழத்திசையில் அந்தோனியார் சற்றுக் கிழக்கே முருகன் திருத்தலமும்
முறுக்கன் கறுவல் ஆலடியும் செந்நெல்விளையும் நெய்க்குளமும்
மாவிலிக் கோட்டையில் சவேரியாரும் மறுமுனையாங்கே பிடாரியம்பாளும்
மாதா சூசையப்பர் சஞ்சுவானியார் சந்தியேகுமையர் பவனிகளும்
நீடுபுகழ் கொண்டிலங்கும் எங்கள் நெடுந்தீவு மாவித்தியாலயமும்
கோடு கரத்திடை கொண்டிருக்கும் குஞ்சரத்தான் புகழ் கொண்டதீவே
பாடசாலைகளும் கோவில்களும் பக்குவமாய் எம்மை வழிநடத்த
பார்புகழ் கொண்டெமைப் பெற்றதீவே பணிந்தோம் நின்பதம் வாழியவே!!!

ஆக்கம்
*தீவகன்*

## செயற்குழு / Committee

| | |
|---|---|
| President:<br>தலைவர்: | Mr. N Rajenthiran<br>திரு ந. இராசேந்திரன் |
| Secretary:<br>செயலாளர்: | Mr. K. Santhalingam<br>திரு கா.சாந்தலிங்கம் |
| Treasurer:<br>பொருளாளர்: | Mr.T.Christhuthananthan<br>திரு.து. கிறிஸ்த்துதானந்தன் |
| Vice President:<br>உப தலைவர்: | Mr.T.Gangatharan<br>திரு தி. கங்காதரன் |
| Asst. Secretary:<br>உப செயலாளர்: | Mrs Ambihai Mahalingasivam<br>திருமதி அம்பிகை மகாலிங்கசிவம் |

## செயற்குழு உறுப்பினர்கள் / Committee Members:

Mr. Danial Jeevah Haran
திரு டானியல் ஜீவாகரன்

Mrs Jeyawathy Ganeshan
திருமதி ஜெயவதி கணேசன்

Mr. Veerasingam Pathmasingam
திரு. வீரசிங்கம் பத்மசிங்கம்

Mr.Ponniah Ketheeswaran
திரு பொன்னையா கேதீஸ்வரன்

Mr Tharmalingam Manipallavan
திரு தர்மலிங்கம் மணிபல்லவன்

Miss.Subramaniam Kayaani
செல்வி சுப்பிரமணியம் கஜானி

Mrs.Manoranjine Pathmanathan
திருமதி மனோரஞ்சினி பத்மநாதன்

Mr.Velayuthapillai Nanthakumar
திரு. வேலாயுதபிள்ளை நந்தகுமார்

Mr. Murugesu Selvarupan
திரு. முருகேசு செல்வரூபன்

# நன்றாகத் தமிழ் செய்த தவத்திரு தனிநாயகம் அடிகள்

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்ற திருமந்திரவாக்கைத் தன் மந்திரமாகக் கொண்டு தமிழ்த் தொண்டையே மறைப்பணிக்காகக் கொண்டவர். பன்மொழி ஒப்பாய்வுகள் மூலம் தமிழை சர்வதேச நிலைப்படுத்தி, தமிழ் ஆய்வு மன்றங்களை உருவாக்குவதில் மூலசக்தியாய்த் திகழ்ந்தவர். தமிழர் தொன்மை, தமிழர் மானிடம், தமிழ் பண்பாட்டு வேர்களை இனங்கண்டு உலகப் பெருநோக்கிற்கு தனது துறைசார் ஆய்வுகளால் தமிழை பழமை வாய்ந்த பண்பாட்டு மொழிகளுடன் புகுத்தியவர். இச்சிறப்புரிமை தவத்திரு தனிநாயகம் அடிகளைச்சாரும்.

பன்மொழி புலமையினால் பன் மொழிகளின் வளங்களை ஆய்வு செய்ததில் தமிழில் பொதிந்துள்ள மானிடப் பண்புகளையும் ஆன்மிக வளங்களையும் தானும் உள்வாங்கி ஆய்வு மன்றங்கள் மூலமாக உலகிற்கும் தமிழர்களுக்கும் பரம்பல் செய்ய முனைந்தவர். அதை சர்வதேச மயப்படுத்திய உரிமை தனிநாயக அடிகளைச்சாரும்.

வியக்கத்தக்க இத்தமிழ் ஆர்வத்திற்கு வித்திட்டவர் நிச்சயமாக அவருடைய தந்தை. "தந்தையர் நாடென்னும் போதினிலே.." என்று பாரதியின் கூற்றுக்கமைய.. தான் பிறந்து வளர்ந்து தனக்கு தாய் மொழிப்பற்று ஊட்டிய நெடுந்தீவில் வாழும் ஒரு குழுமத்திற்குச் சொந்தமானதும் தந்தைவழி மரபுப் பெயருமான "தனிநாயகம்" என்ற பெயரை சேவியர் என்ற தன் பெயரோடு இணைத்துக் கொண்டார். கடும் காற்றோடும் அலை மோதும் கடலோடும் நெடுந்தீவில் தனது போராட்டப் பயணத்தை தொடங்கியவர் தமிழிற்காக, தமிழர் வளர்ச்சிக்காக பல நெடிய யாத்திரைகளை மேற்கொண்டார். தனது ஆறுவயதில் கட்டுமரத்தில் நெடுந்தீவுப் பயணத்தை தனது பயண இலக்கியத்தில் அடிகளார் குறிப்பிடுகிறார். பல தோல்விகள் ஊடாக இறுதி வரையும் துணிவுடன் போராடி தான் கொண்ட இலட்சியத்தை அடைந்தவர். தனது வாழ்வு அனுபவத்தில் ஒரு குறளை நினைவுபடுத்திக்கொள்வார்:

*"உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல், மற்ற அது*
*தள்ளாமை நீர்த்து" (596)*

*(உயர்ந்த குறிக்கோள்களை எண்ண எண்ண வாழ்வு உயரும், தோல்வி வந்தாலும் முயற்சியே வெற்றி)*

## நன்றாகத் தமிழ் செய்த அடிகளார்

தமிழ்த் தொண்டையே சமயப்பணியாக கருதினவர். தமிழ்ப் பணியை இறை பணியாக மேற்கொண்டு, தமிழ்த் தளத்தை ஒரு ஆன்மீகத் தளமாக்கி அதில் இறைவனைக் காண விரும்பினவர். தமிழ் ஆத்மாவை வரிந்து கொண்டு தமிழ் ஆன்மீகத்தை வாஞ்சையோடு தேடியவர்.

கிறித்தவம் தமிழுக்காற்றிய தொண்டுகளில் ஒன்றாக (ஒருவராக) தனிநாயகம் அடிகளைக் கொள்வதோ, தமிழால் கிறித்துவத்தை

வளர்த்தவர் என்று அடிகளைக்கொள்வதோ தவறானது என்பது எல்லோருமம தெரிந்த உண்மையே. "உலகின் ஒருமைப்பாட்டிற்கும முழுமைக்கும் தமிழ் இலக்கியம், ஆன்மீகம் எவ்வளவு உதவியுள்ளது என்று ஆய்வுவழி உறுதிப்படுத்தி எந்நாட்டிற்கும் பொதுவான தென்நாட்டுப் பண்புகள் எவையென்றும் இனங்கண்டார்."

இது தமிழ் இலக்கியத்திலுள்ள சர்வதேசப்பொதுமையை இனம் காண உதவியது.

'இந்து மத முனிவர்களும் புலவர்களும் இல்லாமலிருந்தால் தமிழ் மொழி என்றோ மறைந்து போயிருக்கும்" என அடிகள் குறிப்பிட்டது அவர் தமிழ் மொழி, பண்பாடு மீது கொண்ட பற்றுறுதியை வெளிப்படுத்தியது மட்டுமல்ல சமயம் கடந்த ஆன்மீகப்பார்வை கொண்டிருந்தார். இவ்வாறான ஆய் விற்கு பெரும் உந்தலாகவிருந்தது அவர் சார்ந்த கத்தோலிக்க மறையின் பொதுமைப்பண்பு. இதைபற்றி பேராசிரியர் சிவத்தம்பி கூறுகையில்: "இவரை தமிழரின் தொற்றமாமக் கண்டார்கள். இது கத்தோலிக்கத்தின் உலகப்பொதுமையான நிலைக்கும் (கத்தோலிக்கோஸ் என்ற கிரேக்க சொற்றொடரின் பொதுமைப்பண்பை உள்ளடக்கியது) சிந்தனை வளத்தின் சர்வதேச வியாபகச் சாதியப்பாட்டிற்கும் கிடைத்த வெற்றியாகும்." (க சிவத்தம்பி, 1993) இது தமிழ் இலக்கியத்திலுள்ள சர்வதேசப் பொதுமையை இனம் காண உதவியது.

மண்ணில் எவ்வாறு தமிழ் செய்வோம். தமிழ்ப்பற்றை மக்கள் மத்தியில் வளர்ப்பதற்கான தேவையுண்டு. ஒரு இனத்தின் இருப்பு பெரும்பாலும் மொழியைச் சார்ந்துள்ளதால் மொழியின் இழப்பு இனத்தையும் கேள்வி குறியாக்கும். அயல்மொழிகளைப் பயின்று அதன் மூலம் தமிழை வளம் படுத்தியவர் தனிநாயகம் அடிகள்.

'யாதுமூரே யாவருங் கேளிர்' என்னும் புறநானூற்று அடியை தமிழரின் சிந்தனை வரண் முறையை சென்ற இடமெல்லாம் எடுத்துக் கூறிய அடிகளார். சமத்துவதத்தின் அடிப்படையில் என்றோ ஒருநாள் ஒரே உலகம் சாத்தியப்படும் என முழங்கினார். ஒன்றே குலம் என்ற தொனிப்பொருளை தமிழ் இலக்கியங்களில் துளாவி ஆராய்ந்து உலகப்பொதுமைக் கண்ணோட்டத்துடன் தமிழரின் ஒருமைப்பாட்டை உணர்த்தி நின்றார். (Think globally – act locally). சாதி மத அடையாளங்களை பின்பற்ற வற்புறுத்திய அளவுக்கு சமூகநீதி, சமூக அறம், மனித நீதி, மனித அறம் பின்பற்றப் பெறவேண்டும் என்ற கோட்பாடு வளர்க்கப் பெறவில்லை!

தொடர்ச்சியான தமிழ் மொழியின் ஆய்வு பாரம்பரியத்தைத்தக்க வைத்தவர் தனிநாயகம் அடிகள். சமகாலத்தில் தமிழ்ப்பற்றுக்கொண்ட புலமைசார் நிபுணர்கள் உதயமாக வேண்டும். திறமான புலமையெனில் பிறநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும். அதனைப் பாரதியாருக்கு முன்னரே செயல்படுத்த முற்பட்டோர் கிறித்தவத் திருமறைத் தொண்டர்கள். 17ம் நூற்றாண்டு தொடக்கத்தில் கென்றிக் அடிகளார், தத்துவ போதகர் (றொபேர்ட்

டிநொபிலி), வீரமாமுனிவர் (பெஸ்கி) போன்றோர் தொடக்கி வைத்தார்கள். மேற்குலகு தொடர்பு காரணமாக தமிழ் சர்வதேசிய நிலைப்படுத்தப்பட்டது. ஈழத்தில் அப்பணியில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தாவிது அடிகள் தம்மை ஈடுபடுத்திக்கொண்டவர்கள். இப்பாரம்பரியத்தை மேலும் அழகுபடுத்தி சர்வதேசிய நிலைப்படுத்தியவர் தனிநாயகம் அடிகள். சர்வதேச அரங்கில் தமிழை இருப்புச் செய்வதற்கு நெடிய யாத்திரைகளை (Pilgrimage) மேற்கொண்டவர். அவரது அடிச்சுவட்டைப் பின்பற்ற தமிழ் பெருங்கடலில் குதித்து தமிழ் வளங்களை வெளிக்கொணர தமிழ் ஆய்வாளர்கள் முன்வரவேண்டும்.

பண்பாட்டில் எவ்விதம் தமிழ் செய்வோம்.ஆரிய கோட்பாட்டின் மேலாண்மை காரணமாக தமிழின் தனித்துவத்தை கண்டுகொள்வதற்கு தமிழ் தூது தனிநாயகம் அடிகள் தொடக்கிவைத்த தமிழ் ஆய்வு மன்றங்கள் பல உசாவல்களைச்செய்து தமிழ் பண்பாட்டின் ஆணிவேர்களாக தமிழ் இலக்கிய பாரம்பரியத்தின் சமயச்சார்பின்மை (secularism) திருக்குறளின் சமயப்பொதுமை (universality of religion) சிலப்பதிகாரத்தின் தமிழகப் பொதுமை (Catholicity of Tamils) உறுதிப்படுத்தியுள்ளது. இவைகள் பிரபஞ்ச மதிப்பீடுகளிற்கு (Universal values) உலகப் பெருநோக்கிற்கும் பொருத்தப்பாடாகியுள்ளது எமது கவனத்திற்கு உரியது.

## மறைகள் தமிழ் செய்துள்ளது

மறைகளால் தமிழ் கொண்டதும் கொடுத்ததும் உண்டு. மறைகளால் தமிழ் வளர்ந்ததும், மறைகளை தமிழ் வளர்த்ததுமுண்டு:- சைவம், சமணம், பௌத்தம், கிறித்தவம், இசுலாம் அனைத்தும் தமிழ் செய்துள்ளது. ஒருமொழிப்பண்பாட்டு வட்டத்தினுள் பல்வேறு மதப்பண்பாடுகள் தத்தம் மதத்தனித்துவத்தைப் பேணுகின்ற அதே வேளையில் எவ்வாறு ஒரு பொதுவான பண்பாட்டுக் கோலத்தைப் பகிர்ந்து கொள்கிறது என்பது பற்றிய ஆய்வுகளுக்கு தமிழும், தமிழ்ப் பண்பாடும் களமாக அமைந்துள்ளது. தமிழ் பக்திமொழி என்று அடிகளார் கூறியிருந்தும் ஆலய வழிபாடுகளில் இன்னும் தமிழ்மொழி பூரண பயன்பாட்டில் இல்லை.

நவீனத்துவ தமிழன் தமிழிச்சி எவ்விதமாக தமிழ் செய்யமுடியம்?
எவ்விதமாக நவீனகாலத்தின் தமிழ் செய்வோம்:-

தமிழ் இலக்கியத்திலுள்ள சர்வதேசியப் பொதுமை, திருக்குறளின் அரச இலக்கணங்கள், சனநாயப் பண்பு, மேற்குலகத்தின் மானுடவாதம் தமிழ் இலக்கியத்தில் தமிழ் சிந்தனையில் (சங்க இலக்கிய மரபு) பொதிந்துள்ளது. தமிழரின் சுயமரியாதை, பகுத்தறிவு வாதம், சமூக சமத்துவம், மூட நம்பிக்கையிலிருந்து விடுபடல் நவீன இலக்கியத்தின் மனிதபிமான பெறுமானங்களாக உள்ளதும் நோக்கற்பாலது.

புலத்தில் எவ்விதம் நன்றாய் தமிழ் செய்ய முடியும்?

அயல்மொழி ஒப்பாய்வுகளால் தமிழ் சர்வதேசிய நிலைபடுத்தப் பட்டதுபோல், பல்மறைகளினால் தமிழ் வளம் கண்டதுபோல், புலப்பெயர்வினால் தமிழரின் அயல்பண்பாட்டுக் கலப்பு, தமிழர் பண்பாட்டை மெருகூட்டுவதற்கான வாய்ப்புகளை அதிகரித்துள்ளது.

தமிழ் நிலங்களில் 6வது நிலமாக (திணையாக) புலம்பெயர் நிலம் (Tamil Diaspora) உதயமாகியுள்ளது. பிரித்தானிய ஆட்சியில் இந்தியாவிலிருந்து தேயிலை, இறப்பர், கரும்பு தோட்டங்களிற்கு 18ம் நூற்றாண்டில் கொண்டு செல்லப்பட்ட தமிழ்த் தொழிலாளர் தற்பொழுது வாழும் மொறிசியஸ், மலேசியா, தென் ஆபிரிக்கா நாடுகளைத் தரிசித்ததை அடிகளார் தனது பயண இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ளார். எவ்விதமாக இருக்கிறார்கள் என்ற கேள்விக்கு அவர்கள் சமூக சாதிய வேறுபாடுகளைத் தவிர்த்து மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் என்பதையும் அடிகளார் குறிப்பிடத்தவறவில்லை.

எண்பதுகளில் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து ஈழ அகதிகளும் இவ்வெண்ணம் கொண்டவர்களாகயிருக்கிறார்கள், அத்துடன் தொழிலின் மகத்துவம் தாம் புலம் பெயர்ந்த நாடுகளில் மதிக்கப்படுகிறது. தொழில்ரீதியாக வேறுபாடுகள் காட்டப்படுவதில்லை என்பது அவர்கள் கூற்று. 6ம் நிலமாகிய புலத்தில் பின்பற்றப்படும் இவ்விரு பண்புகள் தமிழ்ப் பண்பாட்டிற்கு உயிர்கொடுக்கும் நெறியாக அமைகிறது.

7வது நிலமாக அகண்ட தமிழ் உலகை ஒரு குடும்பமாக இணைக்கும் மின் ஊடகம் (electronic pan-Tamil world) எமது கவனத்திற்கு உட்பட்டது.

தமிழ் மொழிப்பற்றை எம்மத்தியல் வளர்க்க, அதில் விழிப்பைக் கொணர இவ்விழா பேருதவியாயிருக்கும்!

தவத்திரு தனிநாயகம் அடிகள் தமிழை நன்றாகச் செய்தார்! புனிதமாகச் செய்தார்! நவீனமாகச் செய்தார்!

*அருள் கலாநிதி அ. பி. ெயயசேகரம்*

# பயனர்களின் உரம் வளர்த்த பசு மண்.......



நுண்ணுயிரினங்கள், தாவரங்கள், விலங்குகள் எனும் அத்தனை தோற்றப்பாடுகளும் மண்ணின் மூலப் பொருட்களாலேயே கட்டமைக்கப்பட்டவை. அதே போல் வாழும் மண் சார்ந்த வாய்ப்புகளும் வளங்கல்களும் மனிதனின் உள வளத்தையும் திடத்தையும் கட்டமைக்கின்றன. இவ்வகையில் பசும்தீவின் மண் பயனர்களின் பண்பையும் உடலையும் காட்டிய விதம்பற்றி உங்களிடம் அறிந்துகொள்ள ஒரு உரையாடலாகவே இவ் எத்தனிப்பு . . . . .

இந்தியாவின் கரையை அண்டிய தமிழ், கேரளப் பகுதிகளிலிருந்து ஏற்பட்ட குடிப்பரம்பலால் உருவானதா நெடுந்தீவு? அண்மித்தவர்கள், பேச்சு உணவு முறைகளும் உறுதி செய்வதோடு, நெடுந்தீவின் தென் மேற்கிலுள்ள இறங்குதுறையொன்றின் பெயர் புகுமுனை! இது புகுந்தவரிட்ட காரணப் பெயராகயிருக்கலாம். புகுந்த காலங்கள் அறியப்படவில்லை என்றாலும் தமிழ் நாட்டினர் வாழ்ந்த ஆதாரங்கள் இருந்தன. திரு. நாகமுத்தர் (வட்டாரம் 12) அவர்களிடம் நன்கு பழமையான நான்கு ஏட்டுச் சுவடிகள்! இதில் இரு நாடக வடிவக் கதைகளும் இரு பிரதிகள் தமிழ் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்தவரின் பரம்பரை பற்றிய விபரங்களாகவும் இருந்தன. இவற்றை யாழ் பொது நூலகத்துக்குக் கையளித்திருந்தோம். அதையும் சேர்த்தே நெருப்பு பசியாறி விட்டது.
எது எப்படியோ? புகுந்தவர் யாவருமே தங்கி விட்டார் என்றிருக்காது வாய்த்ததை வைத்து வாழிடமாக்கி உழைப்பால் மண்ணுக்குச் சிறப்புச்சேர்த்த நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமிக்க எம் மூதாதையரை நினைவு கூரும் சந்தர்ப்பங்கள் வியப்பாகவும் விருந்தாகவும் அமைகிறது!

கற்களின் வெகுப்பு வரமானது. இலங்கையின் வடமுனைத் தீவுகள் அனைத்துமே வலுவான அடித்தளப் பாறைகளில் அமைந்தவை. வங்காள விரிகுடா, அந்தமான், இந்து சமுத்திரம், அரபிக் கடல் என்ற ஆழமும் அகலமும் நிறைந்த முத்திசைக் கடற் பரப்புகளிலிருந்து தள்ளி வரப்படும் வேகமான அலைக ளுக்கு முகம்கொடுத்தபடி இதுவரை தம் இருப்பைப் பேணிக் கொண்டிருகின்றன.

அடித்தளப் பாறைத்தட்டின் அகலம் வலுவான கரைகட்டுமானம் என்பன மற்றத்தீவுகளை விட நெடுந்தீவிற்குச் சிறப்பாக அமைந்துள்ளது. நாற்கரையும் 500-700 மீட்டருக்குக் குறை யாத இறைவட்டம். இதன் விளிம்புகளில் அலைகளைத் தணிக்கும் பாரிய இயற்கைப்பாறைகள். இப்புற அமைவுகள் சாதகமானவை என்றாலும் நெடுந்தீவின் தரைப்பரப்பின் மேலும் கல் வேய்ந்த பாகங்களே அதிகமாயிருந்தன. கல்லு நிலத்தை வைத்துக் கட்டியழுவதா? என்று விட்டுப் போகாமல் கல்லையும் கரைத்து மண்ணுக்குப் பசும் போர்வை போர்த்திய நெஞ்சுரமும் உடலுரமும் ஒருசேர வாழ்ந்தவர்கள்.

பாரிய, பரந்த கற்களைக் கிளப்பி எடுத்தார்கள். கருமுருகை, மாமுருகை,

கோளான், பாசிக்கோளான். கிறவல் எனச் சில வகைகளே இனம் காணப்பட்டன. முருகை என்பது சுண்ணக் கல் வகை, கோளான் என்பது தீப்பாறைகள் வகையைச் சார்ந்தது. இது மிகப் பாரமானது, கடினமாது, வெளிறிய மர நிறமானது. பகிர்கள், கட்டிடங்கள், வீதிகள் தந்தவை.

கற்களைக் கிளப்பிய காணிகளில் விடுவிக்கப்பட்ட மண்பரப்பு வேளாண்மைக்கு நிலமாகியது. கிளப்பியெடுத்த கற்கள் காணியெல்லையில் வேலிகளாயின. சிதறிக் கிடந்த சிறு கற்க (கைக்கடக்க மான)ளைக் கொண்டு கல்வேலிக்கான அத்திவாரம் (சரைப்பகிர்) அடுக்கப்பட்டது. இது ஏறத்தாழ 50 செ.மீ அகலம் 20-40 செ.மீ உயரமும் கொண்டதாயிருக்கும். சரைப் பகிரின் இறுக்கம் காணிகளுக்குள் தேங்கும் மழை நீரை தாமதித்து வடிய விடும்! வண்டல்களும் எருவும் தங்கி நிற்கும். இதனால் நிலக்கீழ் நீர் சேரவும், மண்ணில் மயிர்த்துளைகள் தொடர்பாகி உவர் மேலெழாதிருக்கவும் எவ்வளவு அருமையான விவசாயத் தொழில்நுட்பம்!!!. சரையின் மேல் பாரிய பெருங்கற்கள், நடுத்தரம், நுனியில் ஓரளவு சிறியவை எனக் கருமுருகைக் கற்களால் வேலி அடுக்கப்பட்டு நுனிக்கற்கள் விழாமல் இரு புறமும் மிதித்த பனை ஓலை கட்டுவார்கள். கட்டுபவர் கட்டினால் கல்வேலியும் கலைத்துவமே!. ஒரு தடவை அமைத்த கல்வேலி பல பரம்பரைக்கு மாற்றத் தேவையற்றது.
மாமுருகைக் கற்களைச் சிறு சிராய்களாக உடைத்து பனம் கொட்டு, ஓலை இவைகளால் நடுவில் எரியூட்டும் யாகத் தளமமைத்து, சுற்றிவர காட்டுப்பூவரசு, மஞ்சவண்ணா மரங்களின் பச்சை விறகு (தாமதித் தெரிவதற்கு)களைப் படையாக அடுக்கி அதன் மேல் ஒரு படை சுண்ணக்கற் சல்லி களை அடுக்குவார்கள்! இப்படி 8-10 படைகளடுக்கி முடிவில் கூம்பு போன்ற வடிவத்தில் கல் மலையொன்றாய் காட்சி தரும். இதன் நுனியில் தீ மூட்டப்படும். தீ அடுக்குகளுக்கும் தாவி எரிந்து கற்சிராய்கள் நீர்த்து வெள்ளை வெளேரென்ற ஒரு சுண்ணக்குவிலாகும். சூளை எனும் இவ்வுற்பத்திச் செயற்பாடு ஒரு தடவையில் 80-100 தொன் வரையான சுண்ணாம்பைத் தரலாம். சீமெந்து தொழிற்சாலை வருமுன் கட்டிடங்கள் கட்டவும், வெள்ளையடிக்கவும் சுண்ணாம்பு யாழ் பகுதிகளுக்கு ஏற்றுமதியானது.

சாறாப்பிட்டி தொட்டாரம் போன்ற பகுதிகளில் படர்ந்தும், மத்திய பகுதிகளில் தொட்டம் தொட்டமாகவும் காணப்பட்டன கெட்டியான கோளான் கற்கள். இவை கையாழ முடியாத பாரமானவை என்பதால் அகழுமிடங்களில் வைத்தே உடைத்து சல்லிகளாக்கி சீமெந்துக் கற்கள், தார்வதிகள், கல்வீட்டுக்கான அத்திவாரங்கள் அமைப்பதற்காக விற்பனையானது. கல் உடைப்பது வாழ்நாள் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த சிலருமுண்டு. உளியையே உடைக்கும் கோளான்படர்பாறைகளின் ஆழத்தின் கீழ் நன்னீருற்று உள்ளதையறிந்து அந்தப்பாறைகளில் கேக் வெட்டியது போலக் கிணறுகள் கேணிகள் பொழிந்திருக் கிறார்கள். கோளானையே கனிய வைத்த வேளாண் விரல்களுக்குரியவர் நம்மவர். நம்பமுடிகிறதா?

"பனையின் பயன் பகிர வேறிடமுண்டா? தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாய் கொள்வார் பயன்" — *திருக்குறள்-*
பயனுக்குப் பனை தான் உச்ச உதாரணம் என்கிறது குறட்பாவே. பனை இல்லாத காணிகளே நம்தீவில் இல்லை! பங்குனி, சித்திரை ஆண்பனைகளிற் பாளை வந்து விடும். மிளகு, சீரகம் போட்டு

பதநீரை இறுகக்காச்சி அதில் ஊறவிடும் பனாட்டு பாணிப் பனாட்டு அரிய வகை மருந்து. ஆடி வரை ஆடி வருவார் ஆண்கள் சிலர். ஆடி, ஐப்பசி பனங்காய் காலம். மனிதர்கள் மட்டுமல்ல மாடுகளுக்கோ அலாதி விருப்பம். பனையின் பயன்களைப் பட்டியலிட்டாலே பல புத்தகங்கள் பிறந்து விடும். தலை வணங்காது நிமிர்ந்து நிற்கும் கற்பக தருவிற்கு வயசு ஏறத்தாழ100. உயரம் ஏறத்தாழ 30 மீட்டர்.!.

பிள்ளைப்பெறுவுக்கு உள்ளி வாங்கப்போனவர் அடுத்த பிள்ளைக்கு வீடு திரும்பியதாக எம்மூர் பற்றி பழைய ஏளனக் கதை ஒன்றுண்டு. புகைக்குட்டான்களின் உபயோகம் இதை உடைத்தது. உள்ளிப்பூடுகள் முளைதிறன் அழுகல் அணுகாமல் ஒரு வருடத்துக்கு மேல் அசையாதிருக்கும் என்ற அனுபவத் தயாரிப்பு புகைக்குட்டான்கள். வெட்ட வேண்டிய பனையை சுண்டிப்பார்த்து சோத்தியா வைரமா எனச் சொல்வார்கள் தொழிலாளர்கள் என்றால் பனையுடனான ஈடுபாடு எப்படி? பனம்பழம், ஓலை, நொங்குக் கோம்பை, பனாட்டு, குரும்பல், இளம்பாளை அனைத்துமே மாடு, ஆடுகளின் விருப்பத்துக்குரிய விலங்குணவு. 24:1, 48:1 என்று காணிப் பங்கு இருந்தாலும் விழுகின்ற பனம் கொட்டைகளைப் பங்குக்கேற்ப பங்கிடும் செயலில் இருந்த நல்லிணக்கம் கூடப் பனை அளித்த சந்தர்ப்பமே? நீரிழிவு நெடுந்தீவில் அன்று அறியப்படாததும் பனையுணவின் பயனே.

சிறு தானியங்கள், பணப் பயிர்கள் செய்திருந்தோம்? மொண்டி, வரகு, கேள்வரகு, சாமை, தினைச்சாமி, குரக்கன் இவை உமல்களில் பயிராளர் வீட்டுக் கோர்காலிகளில் அடுக்கப்பட்டிருக்கும். மொண்டித்தறை, சாமிப்புலவு, சாமித்தொம்பு, குரக்கன் தொம்பு, நெல்வரை, வரகாவெளி என்று தானியப் பெயரால் காணிகள் இன்றும் அழைக்கப்படுகின்றன. யாழ். வண்ணார்பண்ணை சிவன் கோவில் முதல் கும்பாபிஷேகத்திற்கான கோபுரக் கலச வரகும் தற்பை போடத் தகுதியானவரும் நெடுந்தீவிலிருந்தே தருவித்ததாக பேசக் கேட்டிருக்கிறேன். மாவட்ட ரீதியாக விளைபொருட்கள் காட்சிப்படுத்தியபோதெல்லாம் நெடுந்தீவு பீற்றூட், சின்ன வெங்காயம் என்பன தொடர்ந்து முதலிடம் பெற்றன.

பெற்றவைகள் அத்தனையும் தனித்துவமே. தென்னைகள், நவிரி, புளி, வீடு தோறும் வேம்புகள், ஒல்லாந்து முருங்கை, செந்நிறப்பப்பாசி, விளாத்திகள், சப்பொதில்லா, மாதுளை, இலந்தை எனப் பழ மரங்கள்! ஈஞ்சு, கிளா போன்ற காட்டுச் செடிகளும் அத்தனையிலும் தனித்துவம்!. ஒரு உரப்பை கூட இறங்காத மாவலித் துறையைச் சூழ நக்கில்ஸ் மலைத் தொடர் போல ஏற்றுமதிக்காக எருக்குவிந்திருக்கும். குழை, மட்டை, கிடுகுக் கட்டுகளும் கூடவே ஏற்றினார்கள்.

## மூலிகைகளின் மூலவனம்!

மூலிகைத் தீவு என்ற பெயருமுண்டு. முல்லை, முசிட்டை, கொவ்வை, சீந்தில், குறிஞ்சா, பிரண்டை, திற்பலி, காத்தோட்டி, தும்பை, தூதுவளை, மொசுமொசுக்கை எனப் பல கொடிவகைகள். காண்டை, இயங்கு, முடக்கொத்தான், ஆவரசு, பொன்னாவரசு, நொச்சி, பொன்னொச்சி, கடைச்சி, விடத்தல், கருக்குவாச்சி போன்ற பற்றை, சிறுமர வகைகளும். சாரணை, நன்னாரி, மூக்கறைச்சி, நரிப்பயற்றை, பூனைமயங்கி, பழம்பாசி, காணாவாழை,

கழககாய மநலல, வடடுக கததா, கணடங கததா, அவா, மகாடடணை எனும் படர் பூண்டுகளும், வினாலை, அல்லை, சாயணை எனும் நிலக்கீழ்க்கிழங்குகளும் இன்னும் அறியப்படாத பலவும் பொக்கிசங்கள் இவற்றின் மருத்துவத்தனம் காற்றில் கலந்தாலே அது போதும் ஆரோக்கியத்துக்கு! ஆவரசம் குழையும், ஊர்க் களிமண்ணும் கடல் நீரிலும் நுரைக்கும், செவ்வரத்தை பழம்பாசி சிறுவருக்கென தலைக்கு தேய்த்துக் குளிப்பதுண்டு!

## மந்தை வளர்ப்பு

தீவின் தென் பகுதி புல்வெளியாகவும், வெளியின் ஓரங்களில் ஆங்காங்கே காற்றமுத்தத்தால் குறுகி வளர்ந்த செறிவான பூவரசுகள் அடர்ந்த காடுகளும் மந்தை வளப்பிற்கு பொருத்தமாக அமைந்திருந்தன. காற்றின் வெடுவெடுப்பற்ற சிறு காடுகளுக்குள் ஓய்வெடுத்து, மேய்ச்சல் வெளிகளில் சுதந்திரமாக மேய்ந்து கட்டோ, அடைப்போ அறியாது வளரும் சுதந்திர மந்தைகளை உலகில் வேறெங்கும் பார்க்க முடியாது! அது தவிர இந்த மேய்ச்சல் நிலங்களில் சிறிய பயறுவகை (நரிப்பயற்றை) புற்களோடு கலந்து விதைக்கப்பட்டிருந்தன. பாலிடும் விலங்குணவு பற்றிய அறிவு அறியப்பட்டிருந்தது. பால் ஏற்றியது, நாம்பன்கள், ஆடுகளை ஏற்றியதால் ஒரு கால் கணிசமான வருமானம் இருந்தது. இன்று குறைவு. நெடுந்தீவுக் காளை மாடுகள் காங்கேயன், கிளாரி போன்ற இந்திய இனக் காளைவிடப் பார இழுவை, உழவு, இரும்புக் கலப்பை பாவனைக்கும் விரும்பி வாங்கப்பட்டன. முடியவில்லை என்றால் முழங்கால் குத்தியாவது இழுத்துப் பார்க்கும் நெடுந்தீவுக் காளைகள் என்ற பாராட்டு வன்னியிலிருந்தது அதோடு குறைந்த தீவனத்தில் நிறைந்த பயன் கொடுத்தன.

## நீர்கள் அழித்தநு நீரேரிகள் மட்டுமல்ல ...

வெட்டுக்கழி, வெல்லைக்கழி, பெரியகழி, ராமன்விழாப்பு இரவதை என்ற சிறிய நீரேரிகளுடன் இதிலும் சிறிய ஏரிகள் சிலவும் ஆங்காங்கே உண்டு. ஒல்லாந்தர் வரும் வரை இவை அத்தனையும் நன்னீர் ஏரிகள்!!! ஓரங்களில் தோட்ட அடைப்புகள்! இறைப்பிற் பயிர் செய்ய இவற்றின் நீர் பயன்பட்டது. ஒல்லாந்தரின் உல்லாசப் படகோட்டத்துக்காக தீவின் குறுக்காக மூன்று ஏரிகள் கடலுடன் தொடர்புபடுத்தப்பட்டன. இவற்றில் பெரிதான வெட்டுக்கழி நீர் மட்டம் குறையும் போது அண்மையிலுள்ள ஓடையூடாகக் கடல் நீர் உட்புகும் சந்தர்ப்பங்களும் இருந்திருக்கின்றன. துரவை எனும் தீவின் தென்வெளியில் மாரிகாலம் ஒரே வெள்ளக்காடாக மாதக்கணக்கில் நிற்கும் போது அத்தனை நீரேரிகளும் தண்ணீர் மட்டத்தில் தாழ்ந்து விடும். தண்ணீர் வடிய வடியத் தங்கள் கொள்ளளவை மட்டும் தாங்கிக்கொள்ளும். அப்போது எல்லா ஏரி நீரிலும் உப்பின் செறிவு ஒரே அளவாக இருக்கும். அதோடு முற்றாக வற்றிப்போகும் இவ் ஏரிகள் இயல்பாகவே உவரை மேற்கொண்டு வருபவை. இந்த செயற்பாடுகளால் ஆரம்ப நன்னீரேரிகள் இன்று உப்பளங்களாகி உவர் புழுதியாய் காற்றில் பறக்கின்றன.

## ஆரோக்கியத்தின் ஆதிமூலம் மீனுணவு.

பாரம்பரிய மீனவர் கட்டுமரங்கள் இன்று காணாமற் போய்விட்டன. வருத்தமென்றில்லை. வாழியலில் நவனீ த்துவம் வரவேற்புக்குரியதே. தூண்டில் மீனைக் கழற்றிப் பனை ஓலைப் பறியில் போட்டு நீரிற்கட்டி

உயிரோடு வரும் மீன்கள். பண்டமாற்றாகவே பல காலம் தொடர்ந்தது. அப்போதிருந்த மக்களைக்கியமும், நேசமும் கட்டுமரத்தோடு காணாமற் போய்விட்டது. இதுதவிர சூழ்பந்தம் (முழுநீளத் தென்னை ஓலைக்குள் ஓலைத் தார்களைத் திரட்டிக் கட்டுவது), அடிவலை என்று தமது தேவைக்கான மீனைத் தாமே பிடித்து வரும் ஒரு கடல் வேட்டை சூழலும் கூட இருந்ததால் மீன் தேவைப் பூர்த்தி மிகையானதே. கழிகள் எனும் நீரேரிகளும் கூடப் புரதச் சுரங்கங்கள். குறவை (மூன்று சென்ரி மீட்டரிலும் குறைவான நீளம்) பருவகாலத்தில் இரண்டு மாதங்கள் களிப்பான மீனுணவு. சேலைகளால் ஓலைகளால் வடித்து எடுப்பது. பிட்டு, குழம்பு, வறுவல், கூழ் செய்வார்கள். இதோடு கூனி றால், குள நத்தை (ஐரோப்பிய உணவு விடுதிகளில் 5 போட்ட தட்டு 30 Euro) அங்கு இதைப் பயன் படுத்துவதில்லை. கடலட்டை, குளநத்தை பெறுமதி மிக்கவை. சந்தை வாய்ப்பின்மை அதைச் சாதாரணமாவே தூக்கிப்போட்டு விட்டது. கழிகளில் நெய்முறுகித் திரண்ட ஓரளவு பெரிய மீன்களைக் கரப்பு, அடிவலை, கொண்டு பிடிப்பார்கள். நிறைந்த கல்சியமும் பாதகமற்ற கொழுப்புமுள்ள இம் மீன்களை சுதந்திமாக மிதந்து சுவைக்கவென்று பல காத தூரமிருந்து பறந்து வரும் சைபீரிய வாத்துக்களும் மாரிகால ஏரிகளுக்குத் தனியழகே.
உணவிலும் விருந்திலும் அட்சய பாத்திரமே!

பனம் பண்டங்கள், சிறு தானியங்கள் அரிய கிழங்கு வகைகள், தரமான மீனுணவு, மூலிகை மேவிய ஆட்டிறைச்சி, செறிவான பால், சுத்தமான காற்று, இரசாயனம் கலவாத விளைபொருட்கள்! இன்னும் என்னவேண்டும்.?

வந்த விருந்தை நிறைத்து வருவிருந்து வராதா என ஏங்குவார்கள் என்பது நாம் சொல்வதல்ல நமைப் பற்றி நாடெல்லாம் சொல்லும் புகழ்!

எம் வாயிலாக இவற்றைக் கேள்வியுறும் நாளைய சந்ததியும் இந்த வாழ்வுக்காக ஏங்கும்! வன்னியில் பிறந்த இளசுகள் பலரிடம் இந்த ஏக்கம் பார்த்ததுண்டு! இது தான் நமது மா மண்ணின் மகிமை!.

*வை. லோகநாதன்,*
*நெடுந்தீவு.*



**SIR. MARUTHU CANTHABOO,** PhD, FRSPH UK.
**Visiting Professor - IHMA (Ind) & IOUCM (SL)**
**Discoverer and Author CNT**
Email: iusr_uk@yahoo.co.uk

# முதுமை அடைதலும், மூட்டு வாதமும்
# AGEING PROCESS AND ARTHRITIS

முதுமையடையும் போது மூட்டுகளில் ஏற்படும் நோவு, வலி, வீக்கம், அசைக்க முடியாமை ஆகிய உபாதைகள் முள்ளெலும்புத் தொகுதியில் ஏற்படும் மாற்றத்தால் ஏற்படுபவையாகும். மூட்டு வியாதிகள் எல்லாவற்றிலும் தாபிதம் (inflammation) இருப்பதில்லை. முதுமை அடையும்போது ஏற்படும் இயற்கையான மாற்றங்களால் மூட்டுகள் மட்டுமல்லாமல் உடலின் சகல உதிரப் பாகங்களும், ஏன் உள் உறுப்புகளும் கூடப் பாதிக்கப்படுகின்றன. முதுமை அடைந்து கொண்டு போகும் போது எலும்புகள் குருத்தெலும்புகள் தேய்வடைகின்றன. தேய்வடையும் போது மூட்டெலும்புகளில் 'முனைவளர்ச்சி' (osteophytes), ஒன்றோடொன்று உரசல் (friction), சொருகல் (penitration), ஒருங்கிணைதல் (fusion) ஆகிய தொல்லைகள் ஏற்படும். இவை காரணமாக மூட்டுவாதம் - ஆத்றைற்றிஸ் (osteo-arthritis) ஏற்படுகின்றது. இக்கால கட்டத்தில் தாபிதம் (inflammation) ஏற்பட வாய்ப்புண்டு. முதுமையடையும் போது முள்ளெலும்புத் தொகுதியில் பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றது. இதன் வெளிப்பாடாக மூட்டுகளில் மாற்றங்கள் உண்டாகிப் பலருக்கு ஆத்றைற்றிஸ் ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படும் ஆத்றைற்றிஸ் சிலருக்கு ஒரு சில கிழமைகளிலும், சிலருக்கு ஒரு சில மாதங்களிலும், பலருக்கு வருடக்கணக்கிலும் நீடித்திருக்கும். ஆனால் எம்மில் அதிகமானோர் நோவு, வலி, வீக்கம் ஏற்பட்டு அது சில வருடங்களுக்கோ அல்லது மாதங்களுக்கோ நீடித்தால் உடனேயும் சத்திரசிகிச்சைக்கோ அல்லது நீடித்த ஹோமோன் சிகிச்சைக்கோ அல்லது மூட்டுப்பை நீரை (synovial fluid) உறிஞ்சி எடுப்பதற்கோ அனுமதிக்கிறார்கள். இவ்வாறான சிகிச்சை களில் இறங்குமுன் மூட்டுகளின் சரியான நிலைப்பாட்டை அறிந்து கொள்ள வேண்டும். அனாவசியமான சத்திர சிகிச்சைகள் பல விரும்பத்தகாத விளைவுகளை உண்டாக்கி நோயாளியை நிரந்தர ஊனவாளியாக்கி விடுகின்றன. ஆகையால் இவ்வாறான சிகிச்சைகளை முற்று முழுதாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் முதுமை என்பது இயற்கையானது. அதனால் ஏற்படும் உபாதைகள் தானாகத் தணியக்கூடியவை. ஆயினும் இவற்றின் உபாதைகள் அவரவர் உடம்பின் தார்ப்பரியத்தைப் பொறுத்து நீடித்துச் செல்லும். முதுமையின் ஆரம்பம் சராசரியாக 35 – 45 வயதுக் காலகட்டத்தில் தொடங்கி விடும். இதுவும் அவரவர் உடம்பைப் பொறுத்து மாறுபடலாம்.

முதுமைப் பரிமாணம் இரம்மியமானது. முதுமையின் ஆரம்ப மாற்றம் 35 – 45 வயதுக்கிடைப்பட்ட காலத்தில் கழுத்தெலும்புகளில் ஆரம்பிக்கும். இவ்வயதுக்குட்பட்ட காலத்தில்தான் தங்கள் வாழ்க்கையின் திட்டங்களையும், குறிக்கோள்களையும் நிறை வேற்றிக்

கொள்கிறார்கள். இக்காலத்தில் மனிதர்கள் மிகச் சுறு சுறுப்பாகவும், பாரிய திட்டங்களைச் சிந்தித்துச் செயல்வடிவம் கொடுப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இதனால் பலர் தமது உணவையும், நித்திரையையும் இழப்பதோடு, அதிக அளவில் மது அருந்துதல், புகை பிடித்தல், ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருத்தல் போன்ற வாழ்க்கைத் துஷ்ப்பிரயோகங்களைச் செய்கிறார்கள். முடிவில் மன அழுத்தத்தாலும், உடல் ஊறுகளாலும் பாதிக்கப் படுகிறார்கள்.

மன அழுத்தம் முதலில் மூளைக்கு அண்மையிலுள்ள நெற்றி, முகம், மண்டை ஓடு, கழுத்து ஆகியவற்றில் உள்ள சிறிய தசைகளைத் தாக்கி அவற்றை இறுக்கிச் சுருக்கும். நெற்றித் தசைகள், முகத்தசைகள், மண்டைத் தசைகள் ஆகியவை இறுக்கமாகிச் சுருங்குவதால் தலையிடி, கோபம், கண்சிவத்தல் ஆகிய உபாதைகள் தோன்றும். மேலதிக வேலைப்பழுக் காரணமாக தலையிடியை கவனத்தில் கொள்ளாவிட்டால் தலையிடி நீடித்துக்கொண்டே போகும். இதைத் தொடர்ந்து கழுத்துத் தசைகள் இறுக்கமடைந்து சுருங்கிக் கொள்வதால் கழுத்து முள்ளெலும்புகளில் மாற்றங்கள் தோன்ற ஆரம்பிக்கும். கழுத்தெலும்புத் தசைகளும், நார்களும் இறுகிச் சுருங்குவதால் கழுத்தெலும்பு களுக்கிடையில் உள்ள இடைவெளி குறுக்கப்படும். இக்காலகட்டத்தில் அதாவது, பிந்திய முப்பதுகளிலும், முந்திய நாற்பதுகளிலும் கழுத்து நோவு, வலி மற்றும் தோள்பட்டை வலி ஆகிய உபாதைகள் தோன்றும். இவ்வாறு தோன்றிய நோவு, வலி ஆகியவை ஏன் ஏற்பட்டன என யாரும் அறிந்திலர். உண்மையில் இவ் உபாதைகளின் தோற்றுவாய் அதீதமான மன அழுத்தத்தால் ஏற்பட்ட தசைச் சுருக்கமும், அதனால் ஏற்பட்ட கழுத்தெலும்புகளின் மாறுபாடுமாகும்..

ஏன் மன அழுத்தம் ஏற்படுகிறது? ஏராளமான திட்டங்களையும், எண்ணங்களையும், சிந்தனை களையும் மூளையின் கவனத்தற்குத் திணித்து அவற்றை நிறைவேற்ற வேண்டி நிற்பதால் மூளையால் இவற்றை நெறிப்படுத்தி நிறைவேற்ற முடிவதில்லை. அவற்றை நிறைவேற்றி முடிக்கும் வரை மன அழுத்தம் நீங்காது. அதனால் சிந்தனை அதிகரித்துக்கொண்டே போகும். மூளை முற்றிலும் வெளி வேலைகளில் ஈடுபடுவதால் உடம்பின் உள் வேலைகளில் நாட்டமின்றியிருக்கும்.

கழுத்துத் தசைகள் சிறியவையாகவும், மாறுநிலை (crisscross) கொண்டவையாகவும் அமைந்திருப்பதால் மன அழுத்தம் அதிகரிக்கும்போது வேகமாக இறுகிச் சுருங்கிக் (constrict) கொள்ளும். ஆனால் அவை அழுத்தம் காரணமாக இலகுவில் இளகிப் பழைய நிலைக்கு வந்து (retract) விடாது. தசைகள் இறுகிச் சுருங்கும்போது கழுத்தெலும்புத் தொகுதியில் (cervical vertebral column) மாற்றம் ஏற்படும். எலும்புகளின் இடைவெளி குறுகும் அல்லது அவை பக்கவாட்டிலோ அல்லது முன் பின்னாகவோ விலகிச் செல்லும் (vertebral shift). இவ்வாறான மாற்றம் நாளாந்தம் நமக்குத் தெரியாமலே நடந்து கொண்டிருக்கும். ஒரு கால கட்டத்தில் எலும்புகளினூடாகச் செல்லும் நரம்புப் பாதைகளில் தடைகள், அழுத்தங்கள், கடிபடல் ஆகிய சம்பவங்கள் ஏற்படும். இதன் விளைவாக கைகளில் மின்சாரம் பாய்வது போன்ற உணர்வும், விறைப்பு, முள்ளுக்குத்துவது போன்ற

உணர்வும், வலி, தொட்டால் வலி, வீக்கம், அசைவு குறைதல் போன்ற குணங்குறிகளும் தோன்றும். நாளடைவில் இவை அதிகரித்து கைவிரல்கள் மரத்துப்போதல், ஊசியால் குத்துவது போன்ற உணர்வு அதிகரித்தல், முழங்கை வலி, மணிக்கட்டு வலி, விரல் மூட்டு வலி, தோள்பட்டை வலி, மூட்டுகளை அசைக்க முடியாத அளவுக்கு வலி ஆகியவை நீடித்து நிலைத்து நிற்கும்.

இவ்வகையான நோயாளிகள் வைத்தியரை நோக்கி ஓடுவார்கள். அங்கு என்ன நடக்கும்? முதலில் இரத்தப்பரிசோதனை, அதைத்தொடர்ந்து கதிரியக்கப்படம் (X Ray) நடாத்தப்படும். இப்பொழுது பல நோய்களைப் பெயரிடுவார்கள். அதாவது அங்கைலோசிங் ஸ்பொன்டிலைற்றிஸ் (ankylosing spondylitis), தோள்பட்டை உறைவு (frozen shoulder), காப்பல் ரனல் சின்றோம் (carpel tunnel syndrome), ரெனிஸ் எல்போ (tennis elbow) எனப் பல.

இவற்றை எவ்வாறு குணப்படுத்துவது? வலி அகற்றி மாத்திரைகள் (pain killers), ஹோமோன் ஊசிமருந்துகள் (cortizone injections), வலி அகற்றிக் களிம்புகள் (analgesic ointments), தெளிப்புகள் (sprays) ஆகியவற்றைக்கொண்டு கட்டுப்படுத்துவதோடு பிசியோதெரப்பி (physiotherapy) யையும் கூடவே சேர்த்துக் கொள்வார்கள். இயற்கையாக ஏற்படுகின்ற முதுமையின் முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்தாதவரைக்கும் மேற்கூறிய குணங்குறிகளான நோவு, வலி, வீக்கம், அசைக்க முடியாமை ஆகியவற்றை அகற்ற முடியாது. உள் மருந்துகளால் நிரந்தர நிவாரணம் பெறுவது கஷ்டமான விடயம்.

மேற்படி உபாதைகளை உதாசீனம் செய்தால் முதுமையின் வேகம் ஆதிகரித்து ஏறத்தாள 50 வது வயதிலிருந்து நடு முள்ளெலும்புத் தொகுதிக்கும் (thorasic vertebral column), தொடர்ந்து மேல் நாரி முள்ளெலும்பகளுக்கும் (upper lumbar vertebral column) பரவும். இது முதுமையின் இடைக்காலமாகும். இந்த வயது எல்லை அவரவர் உடலுக்கேற்ப மாறுபடலாம். இந்த முதுகு முள்ளெலும்புகளில் ஏற்படும் மாற்றங்களால் நெஞ்சறை உறுப்புகளான இருதயம், சுவாசப்பை மற்றும் வயிற்றறை உறுப்புகளான இரைப்பை, சிறுகுடல் பெரங்குடல், கல்லீரல், மண்ணீரல், பித்தப்பை, சதையம், சிறுநீரகங்கள் ஆகியவற்றின் தொழிற்பாடுகளில் மாற்றங்களை அவதானிக்கலாம்.

கழுத்தெலும்புகளிலிருந்து ஆரம்பித்த முதுமை மாற்றம் படிப்படியாக நடுமுள்ளெலும்புகளுக்குத் தாவி பின் நாரி முள்ளெலும்புகளை வந்தடையும். கீழ்நாரி முள்ளெலும்புத்தொகுதியில் மாற்றங்கள் (degeneration) ஏற்படும். இக்கால கட்டத்தில் முழு முதுகு எலும்புத் தொகுதியும் தனது தற்பலத்தை இழந்து நிற்கும். அதே வேளை நாரி முள்ளெலும்புத்தொகுதி முழு முள்ளெலும்புத்தொகுதியின் பாரத்தையும் தாங்கி நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் படுகிறது. இதனால் பாரிய அழுத்தம் நாரிக்கு ஏற்படும். நாரி முள்ளெலும்புத் தொகுதி கழுத்து முள்ளெலும்புத்தொகுதியைப்போல் பிற எலும்புகளின் ஆதரவு அற்ற பகுதி.

நடுமுதுகு முள்ளெலும்புகளுக்கு விலா எலும்புகளும், நெஞ்செலும்பும் துணை நிற்பதால் அவற்றில் ஏற்படும் முதமை மாற்றங்கள் பெரிதும் பாதிப்பதில்லை. ஆனால் கீழ் நாரி முள்ளெலும்புகள் பாதிப்படையும் போது மனிதன் பாடாய்ப்படுகிறான். எழும்ப முடியாது, இருக்க முடியாது, படுக்க முடியாது. இவ் முள்ளெலும்புகளுக்கூடாகச் செல்லும் நரம்புகள் கடிபடும் போதும், அழுத்தப்படும் போதும், அவை செல்லும் பாதைகளிலுள்ள உறுப்புகள் யாவும் பாதிக்கப்பட்டு அந்தந்த உறுப்புகளுக்குரிய உபாதைகளைக் கொடுக்கும். உதாரணமாக கூவகமெனப்படும் பெல்விஸ்ஸில் (pelvis) உள்ள உறுப்புகளான இனவிருத்தி உறுப்புகள், மூத்தரப்பை, மலக்குடல், இடுப்புமூட்டு, (hip joint) சக்றோஇலியக் மூட்டு (sacro-iliac joint) ஆகியவற்றிற்கான குணங்குறிகளும், மற்றும் முழங்கால் மூட்டு, கணைக்கால் மூட்டு, கால்விரல் மூட்டுகள் எனப் பல்வேறு பாகங்களில் அவற்றிற்குரிய குணங்குறிகள் தோன்றும்.

60 வயதுக்கு மேற்பட்ட ஏராளமானோர் முழங்கால் மூட்டு வருத்தத்தால் அவதியுறுகிறார்கள். அனேமானவர்களால் சௌகரியமாக நடக்கவோ இருக்கவோ முடிவதில்லை. பிஷ்டபாகத்தின் தசைகள் மிகவும் இறக்கமாகவும் அதிக வலி கொண்டதாகவும் காணப்படும். இதன்காரணமாக கீழ்முதுகு வலி (low back pain) ஏற்படும். அத்தோடு பெண்களுக்கு அவர்களின் சக்றோஇலியக் மூட்டில் (sacro-iliac joint) நோவும், இறுக்கமும் காணப்படும். பொதுவாக கால்களின் நீண்ட தசைகள் கடினமாகி அவற்றின் நெகிழ்வுத்தன்மை குறுகி மூட்டுக்களை நெருக்குவாரத்துக்குள் தள்ளிவிடும் முதுமைக் காலமிது. வலி, வீக்கம் காரணமாக கணைக்கால் மூட்டையும், கால் விரல் மூட்டுகளையும் அசைக்க முடியாதிருக்கும்.

## CNT சிகிச்சை

இனி மூளை நரம்பியல் சிகிச்சை (CNT) முறை பற்றி சிறிய விளக்கம் தருவது அவசியமாகிறது. CNT சிகிச்சை மூலம் முதுமையின் முன்னேற்றத்தை பெருமளவு கட்டுப்படுத்தலாம். எப்படி முடியும் எனக் கேட்கிறீர்களா? முதலில் நாம் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டியது, எமது உடம்பைப் படைத்தவன் யார் என்பதை ஐயந்திரிபறத் தெரிந்து கொள்ள வேண்டும். நமது உடம்மை உண்டாக்கியவர் எமது மூளையே! நாம் எப்போதாவது இந்த உண்மையை உணர்ந்து எமது உடம்பின் உள்வேலைகளை மூளையோடு சம்பந்தப்படுத்திப் பார்த்திருக்கிறோமா? இல்லை! முதலில் இந்த மறுக்கமுடியாத தத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன்பின் எதற்கும் நாம் நம்மைப் படைத்த மூளையிடம் (மூளையைப் படைத்தவன்தான் கடவுள்) சரணடைந்து, பணிந்து எதையும் பெற்றுக்கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும். மூளையைக் கொண்டு வெளி வேலைகளை 50% மாகவும், உடம்பின் உள் வேலைகளை 50% மாகவும் செயற்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்.

CNT யைப் பரிபூரண விதிமுறைகளோடு செய்ய வேண்டுமானால் சனசந்தடி சத்தம் இல்லாத அமைதியான இடத்தில் தரையிலோ அல்லது சமாந்திரமான கட்டிலிலோ படுத்தவாறு கண்களை மூடிக்கொள்ளவதோடு ஏனைய பொறிகளின் செயற்பாடுகளையும் இடைநிறுத்திக் கொள்ள வேண்டும். காதுகளைப் பஞ்சினால் அடைத்துக் கொள்ள வேண்டும். அடுத்து வெளிச் சிந்தனைகளை மட்டுப்படுத்திக் கட்டுப்படுத்த வேண்டும். இதன்பின் உள் உறுப்புகளான இரைப்பை, பெருங்குடல், சிறுகுடல், சுவாசப்பை, கல்ஈரல், மண்ணீரல், இதயம், சதையம், சிறுநீரகங்கள், பாலியல் உறுப்புகள், தசைகள், கொழுப்புப்படிவங்கள், தோல் ஆகியவற்றை முழுமையாகத் தளர்த்திக் (relax) கொள்ள வேண்டும். அதாவது ஒருவர் நித்திரையில் எவ்வாறு தளதளப்பாகவும், சோர்வாகவும் கிடப்பாரோ அதே போல் உடலை ஆக்கிக் கொள்ள வேண்டும். இப்பொழுது நீங்கள் விரும்பிய ஒரு பொருளையோ, கடவுளையோ, மனிதரையோ நினைவு கூருங்கள். அந்தப் பொருள் மனக்கண் முன் வந்ததும் மனதை மூளைக்கும் அந்தப் பொருளுக்கும் மாறி மாறி ஓடவிட்டுக் கொண்டிருக்க வேண்டும். இப்போது அந்தப் பொருளின் சகல அம்சங்களையும் நினைவில் எடுத்துக் கொள்ளுங்கள். இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து செய்து வர உங்களுக்கு ஆன்மீக சக்தி வளரத்தொடங்கும். இப்பயிற்சியில் ஈடுபட்டிருக்கும்போது வேறு சிந்தனைக்குரிய அலைகள் வந்து கவனத்தைத் திசைதிருப்பும். அவற்றைக் கவனத்தில் எடுக்கக்கூடாது. நீங்கள் தேர்ந்தெடுத்த உருவத்தின் சகல வடிவங்களையும் மனக்கண்ணால் பார்க்க முடிந்தால் நீங்கள் தேறிவிட்டீர்கள் என்றாகும். இனி அந்த உருவத்தின் மொத்த வடிவத்தையும் (all demensions) பார்க்கத் தெண்டிக்க வேண்டும். உதாரணத்துக்கு நீங்கள் ஒரு குவளையைத் (cup) தேர்ந்தெடுத்திருந்தால் அதன் உள்ப்பகுதியையும் பின் பகுதியையும் ஒரே நேரத்தில் பார்க்கவேண்டும். இப்படி நீங்கள் பக்குவப் பட்டீர்களானால் ஆன்மீக சக்தியை நீங்கள் முழுமையாப் பெற்றுவிட்டீர்கள என்பது உறுதியாகிவிடும். இவ்வாறனவர்கள் மூளையை வளைத்துப்போட்டு தாங்கள் விரும்பியவாறு உங்களின் திட்டங்கள் வெளி வேலையாகட்டும் அல்லது உடற்தொழிற்பாடாக இருக்கட்டும் இலகுவில் செயற் படுத்துவீர்கள். இவர்களால் மனதை உடம்பினுள் எங்கு வேண்டுமானாலும் நகர்த்திக் கொள்ள முடியும். அப்போது மூளை தானாகவே தனது நரம்புப் பாதையூடாக மனதைப் பயணிக்க வைக்கும். மனதால் வெளியிலுள்ள பொருளைத் தொட எண்ணும்போது கம்பியில்லா அலைகள் மூலமும், உடலில் உள்ள உறுப்பைத் தொட எண்ணும்போது நரம்புகளூடாகவும் மூளையோடு இணைத்துக் கொள்ளப்படுகிறது. இவர்களால் ஊவேு யை இலகுவில் பிரயோகிக்க முடியும்.

## முதுமையின் முன்னேற்றத்தைத் தடுத்தல்

முதுமை எனும்போது நமது உடம்பில் உள்ள வெவ்வேறுபட்ட ஒவ்வொரு கலங்களும் முதுமை அடைகின்றன. அதாவது எலும்பிலுள்ள கலங்கள், சாதாரண தசைகளில் உள்ள கலங்கள், உறுப்புகளின் கலங்கள், நரம்புகளின் கலங்கள், சுரோதஸ்களின் (vessels) கலங்கள் எனப் பலவாறானவை. முதுமை இயற்கையின் அம்சம். ஆனால் அதன் முன்னேற்றத்தை பின்னடையச்செய்யலாம். அதாவது எமது கலங்களைப் பலப் படுத்த வேண்டும். அதற்கு மானசீகமான பசளை தேவை. இரத்தமும்

முதுமையடைகிறபடியால் இரத்தத்தை முதலில் புத்துயிர் பெறச் செய்ய வேண்டும். இரத்தத்தைத் தாயரிக்கும் உறுப்பான மண்ணீரலை முதலில் புத்துயிர் ஊட்டி அதன் பின் இரத்தக்கலங்களைப் புத்துயிரூட்டி அவற்றை உடலெங்கும் கொண்டு சென்று சகல கலங்களுக்கும் வினியோகிக்க வேண்டும். மனக்கண் பார்வை கலங்களை நோக்கவேண்டும். குறிப்பிட்ட உறுப்புகளையோ அல்லது பாகங்களையோ குறிவைத்து அவற்றின் கலங்களை மனக்கண்ணால் பார்ாத்து அவற்றுக்கு சக்தியூட்டப்பட்ட இரத்தம் வனியோகிக்கப் படுவதாகக் கற்பனை செய்து அதை உறுதிப்டுத்த வேண்டும். சிந்தனையின் உறுதிப்பாடும், மூளையின் அனுசரணையும் அவசியம் தேவை.

மூட்டுகளைப் பழுது பார்த்தல் CNT சிகிச்சையால் எவ்வாறு மூட்டு வியாதிகளைக் குணப்படுத்தலாம் எனப் பார்ப்போம். நோயாளிக்கு எந்த மூட்டில் ஆத்றைற்றஸ் ஏற்பட்டுள்ளதென அறிந்த பின் அந்த மூட்டுப்பற்றிய பூரண விளக்கத்தை அதன் வடிவமைப்புக் கொண்ட தெளிவான படத்தின் மூலம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மூட்டும் வித்தியாசமானவை என்பதைக் கருத்தில் கொள்ளவும். எலும்புகளின் வடிவம் அவற்றில் பதிந்துள்ள தசைகள், நார்கள், நார்க்கட்டுகள், மூட்டுப்பையும் திரவமும், குருத்தெலும்புகள், மூட்டின் இடைவெளி ஆகிய விபரங்களை நோயாளிக்குத் தெரியப் படுத்தி அவற்றை மனதில் நிலை நிறுத்திக்கொள்ளச் செய்யவும். மூட்டு மாதிரிகளையும் (model) நோயாளிக்குக் காட்டி விளங்கப்படுத்துவதும் விசேடமாகும்.

நோயாளி நிமிர்ந்து படுத்தவண்ணம் கண்களை மூடி உடல் முழுவதையும் தளர்த்திக் கொள்ள வேண்டும். அதாவது நித்திரையில் உடல் எவ்வாறு தளர்ந்திருக்குமோ அவ்வாறான நிலையில் உடம்பு இருக்கவேண்டும். இப்போது மனக்கண்ணை உபயோகித்துத் தாக்கப்பட்டுள்ள மூட்டைப் பார்க்க (visualise) வேண்டும். அப்படிப்பார்க்கும் போது அந்த மூட்டில் எந்தப் பகுதி பாதிக்கப் பட்டுள்ளது என்பதைத் துல்லியமாக அறிந்து அதைச் சூழவுள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள இரத்த ஓட்டத் தடையை உக்கிரமான மனவலிமையைப் பிரயோகித்து அகற்றி சிறிய, மிக நுண்ணிய இரத்தக் குழாய்களின் முனைகள் தாக்கப்பட்ட பகுதிகளை ஊடறுத்துச் சென்று இரத்த வினியோகத்தில் ஈடுபடச் செய்தல் வேண்டும். உங்கள் மனோ திடமும், சிந்தனை வலிமையும், மூளையின் மேற்பார்வையும் ஒருங்கிணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். மனக்கண்ணை ஒரு தொடுகுறியாக நினைத்து மூளைக்கும் தாக்கப்பட்ட மூட்டின் ஆகக் கூடிய வலியுள்ள மையத்திற்கும் மாறி மாறி தொடுத்தபடியே மேற்கூறிய செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். வேறு சிந்தனைகளில் ஈடுபடாமல் பரிசுத்தமான ஒருங்கிணைப்புடன் செயலாற்ற வேண்டும். அதேவேளை சுற்றவுள்ள நரம்புகளின் தொடர்பையும் ஏற்படுத்திக்கொள்வதோடு அங்கு வெளியேறும் கழிவுகளையும் அகற்ற வேண்டும். சகல தொழிற்பாடுகளையும் துரிதப்படுத்துவதே CNT யின் பிரதான வேலையாகும்.

CNT சிகிச்சையோடு SMAT எனப்படும் தசை எலும்பு அதிர்வுச் சிகிச்சை அல்லது ஒஸ்ரியோபதி, விசியோதெரப்பி ஆகிய சிகிச்சை முறைகளையும் கையாளலாம்.இவை இறுக்கமாகியுள்ள தசைகளையும்,


நெருக்கமாகியுள்ள மூட்டு களையும் தளரச்செய்து அங்கு தேவையான இரத்த வினியோகத்தை அதிகரிக்கச் செய்வதோடு நரம்புப் பாதைகளையும் திறக்கச் செய்யும். தேவையேற்படின் பாதிக்கப்பட்ட இடத்தைச் சுற்றி ஐந்து நிமிடத்துக்கு குளிர் நீர்ப் (cold pack) பற்றிடலாம்.

மேற்படி செயற்பாடுகள் கற்பனையாகத் தோன்றினாலும் உள்ளே நடைபெற்றுக் கொண்டிருக்கும் தொழிலை சிந்தனை வேகத்தால் உண்மை நிலையடையச் செய்கிறோம். வெளி வேலைகளை எவ்வாறு சிந்தனை வேகத்தால் ஊக்கப்படுத்துகிறோமோ அதே போல் உள் வேலைகளையும் சிந்தனை வேகத்தால் நரம்புகளினூடாக தேவைக்கேற்ப ஊக்கப்படுத்துகிறோம். அவ்வளவு தான்! உதாரணமாக, நாம் ஒரு இடத்தைக் குறிப்பிட்ட நேரத்துக்குள் அடைய வேண்டுமானால் நமது காலின் நடை வேகத்தையோ அல்லது மோட்டார் வாகனத்தின் வேகத்தையோ அதிகரிக்கிறோம். அதே போல் உள் வேலைகளையும் மூளையால் அதிகரிக்க முடியும். இச்சிகிச்சை முறையைப் பல தடவைகள் செய்து மூளையில் பதிய வைக்க வேண்டும். CNT சிகிச்சையை ஒரு மாதம் வரை ஒழுங்கு முறைப்படி நாளொன்றுக்கு இருதடவைகள் செய்து வர மூட்டுகள் வலிமை பெற்று புத்துயிர் பெறும். வலி, வேதனை அகன்றுவிடும்.

குறிப்பு:

CNT எனப்படும் மூளை நரம்பியல் சிகிச்சை முறையைக் கண்டறிந்து உலகிற்கு அறிமுகம் செய்தவர் நெடுந்தீவு மருது கந்தப்பு அவர்கள் என்பதை அறித்தருகிறேம்.

# நெடுந்தீவு



ஆழ்கடல் மத்தியில் அலைகள் மோதிட
அமர்ந்திருக்கும் நெடுந்தீவே
பண்டைக் காலத்தில் இராமேஸ்வரத்திற்கு
பசுப்பால் ஏற்றிய நெடுந்தீவே!

பண்புடன் மக்கள் பரம்பரையாக
வாழ்ந்து வந்த நெடுந்தீவே
பார்க்கும் இடமெல்லாம் பனைமரங்கள்
பரவி நிற்கும் நெடுந்தீவே

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் எல்லாம்
போற்றி மகிழ்ந்த நெடுந்தீவே
காணிகள் பலவும் கல்வேலியினால்
கட்டப்பட்ட நெடுந்தீவே

பட்டப் பகலில் வெட்ட வெளியில்
பாய்ந்தோடும் குதிரைகள் பல உண்டு
காலையும் மாலையும் கதிரவன் கடலுடன்
கலப்பதும் கண்கொள்ளாக் காட்சியாகும்

உன் மண்ணில் உதித்த ஊர்மக்கள் சென்று
வன்னியை வளம்பெறச் செய்தார்கள்
கல்வியே முக்கியம் என்று கருதி
கலைகள் பலவும் கற்றார்கள்

திரைகடல் ஓடியும் திரவியம் தேடென
முதியோர் சொன்னதைக் கேட்டார்கள்
தேசங்கள் பலவும் நம்முடை நாடென
பறந்து வந்து சேர்ந்தார்கள்

வளமுள்ள கிறிஸ்தவ நாடுகள் பலவும்
வந்தோர்க்கு வசதிகள் செய்தார்கள்
வந்தோர்கள் பலரும் வசதியை ஏற்று
வாழ்க்கையில் முன்னேறிக் கொண்டார்கள்

வாழும் நாடெல்லாம் நமதே என்று
வளம் பெறச் செய்வது நம் கடமை
தாயகத் தீவை முன்னேறச் செய்வது
தம்பிமாரின் பெருங் கடமை

பெருங்குடி மக்களை பெற்றுத் தந்து
பேணவைத்தது நெடுந்தீவே!
தமிழ்த்தூது தனிநாயக அடிகளை
தமிழருக்குத் தந்ததும் நெடுந்தீவே!

முதல் முதல் பெண்மணி கிராமத் தலைவி
செல்லம்மாவும் நெடுந்தீவே
கணபதிப்பிள்ளை உடையாரின் மகள் இவர்
உடுவிலில் படித்த குணவதியே

சுதந்திரம் பெற்ற பின் இலங்கையின் முதன் முதல்
ஸ்பீக்கர் ஆனார் சேர் துரைச்சாமி
அன்னாரின் பரம்பரை தலைமுறையாக
பிறந்து வாழ்ந்ததும் நெடுந்தீவே

ஆங்கில வைத்தியத் துறையில் பலரும்
ஆயுள் வேதத்திலும் உள்ளார்கள்
பல்வேறு துறைகளில் திறமை படைத்தோர்
தேசங்கள் பலதிற்கும் சென்றார்கள்

புலவர்கள் பலரில் அமுது அவர்களும்
அரியநாயகமும் புகழ் பெற்றோர்
கொடைக்கோர் வள்ளல் யோகேந்திரனும்
நாட்டிற்கும் நன்மை செய்துள்ளார்

பாடகர் பலரில் ஈழத்துச் சீர்காழி
என்பவர் யோகேஸ்வரனாவார்
மாயா என்னும் புரட்சி பாடகப்
பெண்ணும் நமது நாட்டவளே

விந்தன் கனகரட்ணமும் சிறீதரன் எம்.பி என்பவரும்
தமிழருக்காக பாடுபடும் தன்நலமற்ற ஊரவர்கள்
ஈழத்துக்காகப் பாடுபட்டு இறுதியில் உயிரை இழந்த
இசைப்பிரியாவும் எம இனத்தவளே!

வேதாகமத்தை கவிதையாக்கி
வெளியிட்டார் மாஸ்டர் திசைராஜா
பல படங்கள் வரைந்து அவுஸ்திரேலியாவில்
பதக்கம் பெற்றவரும் அவரே

லோகன் கணபதி டொறொன்டோவில்
பல ஆண்டுகள் கவுன்சிலராகியுள்ளார்
சேவைகள் பலவும் நாட்டிற்குச் செய்து
ஓர் வீதிக்கு வன்னிப்பேர் சூட்டியுள்ளார்

ஆடுகளத்தில் தனுஷ் உடன் நடித்து
கௌரவம் பெற்றுள்ளார் ஜெயபாலன்
ஜீசஸ் எனும் ஆங்கிலப் படத்தின்
கதாநாயகன் செல்வா ராசலிங்கம்

Dr. கோமளேஸ்வரிக்கும் ஓர் புதல்வன்
திரைப்பட நடிகர் Dr. பிரசன்னா
ஷேக்ஸ்பியர் நாடகம் பல நடித்து
தொலைக் காட்சியிலும் இடம்பெற்றுக்கொண்டார்

கனேடியன் எனும் தமிழ்ப் படத்தில்
கதாநாயகி சிந்து ரவிச்சுலோசன்
ஈழப் படங்களில் பாடி நடித்தது
கலைச் செல்வி சோபா தர்மராஜன்

மன்னார் ஆயர் இராசப்பு யோசப்
அஞ்சா நெஞ்சம் படைத்த மன்னன்
எங்கள் தீவின் இலட்சியச் சின்னம்
என்பதில் எமக்கு பெருமைகள் அதிகம்

வாழ்க நம் நெடுந்தீவு வளமுடன் நன்றாய்!
***Dr. K.E. Chandrapal***

# நெடுந்தீவும் அதன் சிறப்புக்களும்



யாழ்க்குடாநாட்டின் வடபால் அமைந்துள்ள சப்த தீவு களில் ஒன்றாக விளங்குவதும், நீண்ட சரித்திர வரலாறு களைக் கொண்டதுமான தீவே நெடுந்தீவாகும். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு களுக்கு மேற்பட்ட வரலாறுகளைக் கொண்ட இத்தீவானது பல பெயர்களால் காரணம் நோக்கி அழைக்கப்பட்டு வந்துள்ளது. பசுக்கள் நிறைந்து காணப்பட்டதால் பசுத்தீவென்றும், அபிசேகத் திற்காக இளநீர் பால் தேன் என்பன தென் இந்தியாவில் உள்ள இராமேஸ்வரர் ஆலயத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதால் அபிசேகத்தீவு என்றும் நோய் தீர்க்கும் மூலிகைகள் பல அங்கு காணப்பட்டதால் மூலிகைத்தீவென்றும், புராண காலத்தில் புட்கரம் என்றும், ஒல்லாந்து நாட்டிலுள்ள டெல்வ்ற் என்னும் புல்வெளியைப் போல் காணப்பட்டதால் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் டெலவ்ற்(Delft) என்றும், நீளமானதாகவும், யாழ்க்குடா நாட்டிலிருந்து நீண்ட தூரத்தில் அமைந்துள்ளதாலும், நெடுந்தீவென்றும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. தற்பொழுது அதனை ஆங்கிலத்தில் "டெல்வ்ற்" என்றும் தமிழில் நெடுந்தீவென்றுமே அழைத்து வருகிறார்கள்..

இத்தீவானது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலிருப்பதால் மன்னர் ஆட்சி தொடக்கம் அந்நியர் ஆட்சிக்காலங்கள் வரை ஒரு கேந்திர முக்கியத்துவமுடைய நிலையமாகவே கருதப்பட்டு, ஆட்சியாளர்களால் கோட்டைகள் அமைக்கப்பட்டு ஆட்சி செலுத்தப்பட்டே வந்துள்ளது. இன்றைய ஆட்சியாளர்களும் அதன் முக்கியத்துவம் உணர்ந்து தங்கள் படை முகாங்களையும் அங்கு அமைத்தே ஆட்சி செய்கின்றனர். இது கிட்டத்தட்ட எட்டு கிலோ மீற்றர் நீளமும், ஆறு கிலோமீற்றர் அகலமும் உடையதாகவும், கரை ஓரங்கள் உயர்ந்தும் மத்தியபகுதி தாழ்ந்தும் ஒரு பேசின் வடிவமாகவே காட்சியளிக்கிறது.

இத்தீவை தமிழரசனான வெடியரசன் கோட்டை கட்டி ஆண்டு வந்துள்ளான். இன்றும் இவனது கோட்டை நெடுந்தீவின் மேற்கே அழிந்த நிலையில் காணப்படுகிறது. இவன் பல நாகரத்தினங்களைத் தன்னிடத்தே வைத்திருந்தான் என்றும் அவற்றைப் பெற்றுச் செல்ல இந்தியாவிலிருந்து வந்த மீகாமனுடன் யுத்தம் செய்தானென்றும் வரலாறுகள் கூறுகின்றன. இவனது சகோதரர்களும் இவனுக்குக்கீழிருந்து ஏனைய தீவுகளை ஆட்சி செய்தனர் என்றும் கூறப்படுகிறது. இவன் மக்களின் விவசாய நன்மை கருதிப் பல குளங்களை வெட்டுவித்தான். அவை இன்றும் ஆங்காங்கே காணப்படுகின்றன. அக்காலந் தொடக்கம் நெடுந்தீவிலே பல அறிஞர்களும், பெரியார்களும் வாழ்ந்து வந்துள்ளார் களெனினும் அவர்களின் வரலாறுகள் எழுதப்படாத கர்ண பரம்பரையாகவேயிருந்து வந்துள் ளது. இத்தீவை ஆட்சி செய்த போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் போன்றவர்களும் நெடுந்தீவிலே கோட்டைகளையும், தமது நிர்வாகக் கட்டிடங்களையும் கட்டி ஆட்சி செய்து வந்துள்ளனர். இவற்றுக்குச்சான்றாக மேற்கிலும், மத்தியிலும் போர்த்துக் கீசரினதும், ஒல்லாந்தரினதும் கோட்டைகள் இன்றும் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. ஒல்லாந்தரின்

"குவிந்தா" என்றழைக்கப்படும் வெளிச்ச வீட்டுக் கோபுரம் கிழக்கிலும், குதிரைகள் வளர்ப்பதற்காகக் கட்டப்பட்ட குதிரை லாயங்களும், கேணிகளும் மேற்கில் சாறாப்பிட்டி என்ற இடத்திலும் காணப்படுகின்றன. போர்த்துக்கேயரும், ஒல்லாந் தரும் தமது சமயங்களான கத்தோலிக்கம், கிறீஸ்துவம் ஆகிய சமயங்களைப் பரப்பி வந்தார் கள். இதனால் அவர்களின் ஆட்சிக்காலங்களில் அவர்கள் மக்களைக் கட்டாயப்படுத்தியும் சில சலுகைகளை வழங்கியும் நெடுந்தீவு கிழக்கிலும் நெடுந்தீவின் மத்தியிலும் சிலரைத் தம்சமயங்களுக்கு மாற்றினர். போர்த்துக்கீசர் காலத்தில் சைவசமய மக்கள் மறைவாகவே தங்கள் சமயத்தை அனுசரிக்க வேண்டியிருந்தது. இதனால் பல சைவசமய ஆலயங்கள் தேடுவாரற்று அழிந்து போயின. அத்துடன் ஆட்சியிலிருந்த போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் சைவசமய மக்களுடன் கடுமையாகவே நடந்து கொண்டனர். அவர்கள் தம் சமயத்திற்கென மத்தியிலும், கிழக்கிலும் கத்தோலிக்க தேவாலயங்களைக் கட்டியதோடு சில கோயிற்பற்றுப் பாடசாலைகளையும் அமைத்தனர்.

அத்துடன் தமிழ் மொழி மூலம் தமது சமயத்தைப் பரப்பினர். ஒல்லாந்தரும் தமது ஆட்சிக்காலத்தில் நெடுந்தீவின் மத்தியிலும் மேற்கிலு மாக இரு கிறீஸ்தவ ஆலயங்களையும் கோயிற்பற்றுப் பாடசாலைகளையும் அமைத்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் நெடுந்தீவை தனி அலகாகவே ஆட்சி செய்தனர். அவர்கள் காலத்தில் நெடுந்தீவில் கத்தோலிக்க திருச்சபையினராலும், சைவ பரிபாலன சபையினாலும், பல சைவ கத்தோலிக்கப் பாடசாலைகள் அமைக்கப்பட்டதோடு, பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை அவை அரசாங்க மானியங்களோடு சிறப்பாக இயங்கின. இக்காலத்தில் வைத்தியசாலை, தபால்கந்தோர், அரசாங்க அதிபர் காரியாலயம் என்பனவும் தனியாக அமைக்கப்பட்டுச் சிறப்பாக இயங்கின

இலங்கை சுதந்திரம் அடைந்த பிற்பாடு நெடுந்தீவு மத்தியில் அமைந் மகா வித்தியாலயம் அங்குள்ள மாணவர்களின் கல்விநிலை உயர ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. அதன் முதல் அதிபர் திரு எட்வேட் நவரட்ணசிங்கம் அவர்களும் அவருடன் சேவையாற்றிய உடன் ஆசிரியர்களும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பெரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றினர். அவர்களைத் தொடர்ந்து பின்னர் வந்த பல அதிபர்களும் ஆசிரியர்களும் சிறப்பாகக் கடமையாற்றி வந்ததோடு, இன்றுள்ளவர்களும் சிறப்பாகக் கடமையாற்றி வருகின்றனர். இன்று நெடுந்தீவின் மக்கள் பலர் இலங்கையிலும், புலம் பெயர்ந்த நாடுகளிலும் வைத்தியர்களாகவும், சட்டத்தரணிகளாகவும், கணக்காளர்களாகவும், கல்வி நிர்வாகிகளாகவும், பேராசிரியர்களாகவும், அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் சேவையாற்றி வருகிறார்கள். அத்தோடு இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் நெடுந்தீவு மக்களிற் பலர் பல துறைகளிலும் சேவையாற்றி வருகிறார்கள். அரசியலிலும் ஆன்மீகத் துறைகளிலும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். இன்று உள்ளூரிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் பல எழுத்தாளர்களும், கவிஞர்களும் வளர்ச்சி பெற்று வீறுநடை போட்டு வருகிறார்கள். இவற்றோடு எம்தாயகத்தின் வளர்ச்சிக்கும் சிறப்புக்களுக்கும் எடுத்துக்காட்டாகப் பல பெரியார்கள் வாழ்ந்துள்ளார்கள். வாழ்ந்தும் வருகிறார்கள். இலங்கைப் பாராளுமன்றத்தில் முதல் சபாநாயகராக விளங்கிய சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்களும் நெடுந்தீவைச் சேர்ந்தவரே. இன்று உலகெலாம் விழாக் கொண்டாடப்படும் பேரறிஞர் வண.

தனிநாயக அடிகளாரும் நெடுந்தீவைச் சேர்ந்தவரே. இவர்களோடு தமிழ் மக்களுக்காகத் தன்னுயிரையும் துச்சமென மதித்து குரல் கொடுத்து வரும் மன்னார் ஆயர் வண இராயப்பு யோசப் அடிகளாரும் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரே. ஆடுகளம் படத்தில் விருது பெற்ற சிறந்த கவிஞராகத் திகழும் ஐயம்பிள்ளை ஜெயபாலன் அவர்களும் நெடுந்தீவைச் சேர்ந்த கவிஞரே. கவிஞர்களுக்கெல்லாம் மகுடம் வைத்தது போன்று அதி உயர் செவாலியர் விருதுபெற்ற கவிஞர் அடைக்கலமுத்து (புலவர் அமுது) அவர்களும் நெடுந்தீவைச் சேர்ந்தவரே. இக்கவிஞர்கள் வரிசையில் பண்டிதர். ஞானப்பிரகாசம், வரகவி. அதிபர் நெடுந்தொம்பு சுப்பிரமணியம், ஆசிரியர் அமிர்தரட்ணராசா போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்களாவர். புலம் பெயர்நத நாடுகளிலும், பல இளங்கவிஞர்களும் சிறந்து விளங்குகிறார்கள். அரசியலில் புலம் பெயர் நாடான கனடாவில் முதல் முதல் கால் பதித்த மார்க்கம் மாநகரசபை உறுப்பினர் திரு லோகன் கணபதி அவர்களும், கனடா தேசீய ஜனநாயகக் கட்சியின்(NDP) கட்சியின் ஒன்ராறியோ மாகாணத் தலைவராக விளங்கும் நீதன் சண்முகராசா அவர்களும் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களே. கனடாவில் கத்தோலிக்க மதத்தில் ஒரு சிறந்த குருவாகவும் பேராசிரியராகவும் விளங்கும் வண சந்திரகாந்தன் அடிகளாரும், சைவ சமயத்திலே கனடாவில் ஒரு அழகான அம்மன் ஆலயத்தை அமைத்து சிறப்பாக நடாத்தி வரும் பிரதம குருக்களான சிவஸ்ரீ.கணேஸ்சுவாமி தியாகராசா குருக்கள் அவர்களும் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களே.

நெடுந்தீவின் கிராமசபைத் தலைவியாகக் கடமையாற்றிய தோடு இலங்கையின் முதல் பெண் கிராமசபைத்தலைவி என்ற புகழைப் பெற்றவர் திருமதி. செல்லம்மா நாகேந்திரர் அவர்களே. இவற்றோடு நெடுந்தீவின் கிராமசபைத் தவைர்களாகவிருந்து நெடுந்தீவின் வளர்ச்சிக்காகப் பணியாற்றிய, விதானையார் திரு. நாகேந்திரர், உடையார் திரு குமாரசுவாமி, ஆசிரியர். திரு. ஜேமிஸ் சுப்பையா, அரசியல் பிரமுகராக விளங்கிய திரு. கணபதிப்பிள்ளை, இளம் வயதிலேயே கிராமசபைத் தலைவரான திரு. த. அம்பலம், பிரதேச சபைத்தலைவராகப் பணியாற்றிய புலவர் அரியநாயகம் போன்றவர்களும் நெடுந்தீவின் வரலாற்றில் முக்கியமாக விளங்குபவர்களே. நெடுந்தீவின் கல்வி வரலாற்றில் அங்குள்ள எல்லாப் பாடசாலைகளிலும் பிரயாணக் கஷ்டமான காலங்களிலும் சிறப்பாகக் கடமையாற்றிய உள்ளூர் வெளியூர் அதிபர்கள் ஆசிரியர்களும் நினைவு கூரப்பட வேண்டியவர்களே. இவற்றுடன் நெடுந்தீவின் ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக அரும்பணியாற்றிய, ஆற்றி வரும் மதகுருமார்களும் போற்றப்பட வேண்டியவர்களே. நெடுந்தீவில் ஏழுக்கு மேற்பட்ட கத்தோலிக் ஆலயங்களும் பத்துக்கு மேற்பட்ட சைவ ஆலயங்களும் உள்ளன. இவற்றின் விழாக்கள், பூசைகள் யுத்தகாலங்களில் சிறிது தடைப்பட்ட போதும் இன்று சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இங்குவாழும் கத்தோலிக்க மக்களுக்கும், சைவ சமயமக்களுக்குமிடையில் எந்தவிதமான மதச்சண்டைகளோ மன வேறுபாடுகளோ ஏற்பட்டது கிடையாது. நெடுந்தீவில் சுற்றுலாப் பயணிகளுக்குக் கண்ணுக்கு விருந்தளிக்கும் பல சரித்திர வரலாறுகளை எடுத்துக்காட்டுகின்ற புராதனச்சின்னங்கள் பல காணப்படுகின்றன. அவற்றில் மேற்கே காணப்படும் வெடியரசன் கோட்டை, வரலாறு படைத்த பெரியதுறைத் துறைமுகம், ஒல்லாந்தர் கால குதிரை லாயங்கள், பூதம் பொழிந்த கிணறுகள் என்றழைக்கப்படும் கோளாங்கற் பாறைகளின் மத்தியில் காணப்படும் நந்நீர்க்

கிணறுகள், அவற்றின் அண்மையில் காணப்படும் நாற்பதடி மனிதனின் கால்ப் பாதம், நூறாண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு படைத்த மூன்று ஏக்கர் வரை பரந்துள்ள அரசனைய அரசமரம், நெடுந்தீவு மத்தியில் காணப்படும் குளக்கோட்ட மன்னனால் வெட்டுவிக்கப்பட்ட வெட்டுக்கழி என்றழைக்கப்படும் பெரிய குளம், தெற்கில் காணப்படும் குதிரைக்கூட்டங்கள், மத்தியில் காணப்படும் மணற்கடற்கரை, புற்தரைகள் நிறைந்த வெல்லைவெளி, வெல்லை மணற்கடற்கரை, ஆஸ்பத்திரியின் அருகே கூரைகள் அழிந்த நிலையில் காணப்படும் டச்சுக் கோட்டை, கிழக்கிலே காணப்படும் உயரமான ஒல்லாந்தரால் கட்டப்பெற்று குவிந்தா என்றழைக்கப்படும் வெளிச்சவீடு, நூறாண்டுகளுக்கு மேற்பட்டதும் அரை மைல்களுக்குமேல் விசாலமாகப் படர்ந்துள்ளதுமான ஆலமாவனம் என்றழைக்கப்படும் ஆலமரம், அராபிய வர்த்தகர்களால் நாட்டப்பெற்ற நூறாண்டுகளுக்கு மேற்பட்ட விசாலமான பெருக்கமரம், மாவிலித் துறைமுகம், காணிகளின் எல்லைகளை அலங்கரிக்கும் கல்வேலிகள் போன்றவை குறிப்பிடத் தக்கவையாகும்.

இங்குள்ள மக்களின் வாழ்க்கை முறைகளில் ஒற்றுமையும் கூட்டுறவும் சிறந்து விளங்கியது. விருந்தோம்பல் என்பது நெடுந்தீவு மக்களின் சிறப்பான குணங்களில் ஒன்றாகும். கூட்டுக்குடும்ப வாழ்க்கையும், பிரிவினையற்ற திருமண வாழ்க்கையும் அவர்களது வாழ்வின் இலட்சியங்களாக விளங்கின. இன்று குடியேற்றங்கள் காரணமாகவும் உள்நாட்டு யுத்தங்கள் காரணமாகவும் நெடுந்தீவு மக்கள் இடம் பெயர்ந்து, புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் தாயகப்பற்றும், மொழிப்பற்று முடையவர்களாகவே வாழுகின்றனர். தாயக விடுதலைக்காகப் பல இளைஞர்களும், யுவதிகளும் தம் அரிய உயிர்களையே தியாகம் செய்துள்ளனர். நெடுந்தீவு மக்கள் தம் தாயகத்தை மறவாமல் தாம் சென்ற நாடுகளிலெல்லாம் தாயகமாம் நெடுந்தீவின் பெயரில் ஒன்றியங்களமைத்து தாம் வாழும் நாட்டிலுள்ள மக்களுக்கும், தாயகமாம் நெடுந்தீவு மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகிறார்கள். இன்று கனடா, ஐக்கிய இராட்சியம் போன்ற நாடுகளில் வாழும் பெருந்தொகையான நெடுந்தீவு மக்கள் இவ்வொன்றியங்களின் மூலம் ஆற்றிவரும் சேவைகள் மகத்தானவையாகும்.இதேவேளை ஐக்கிய இராட்சியமான இங்கிலாந்தில் அமைந்துள்ள நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் ஆண்டுவிழா சிறப்பாக நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு அதைத் தற்பொழுது தலைமை தாங்கி நடாத்தும் அதன் தலைவர் திரு.நடராசா இராசேந்திரன் அவர்கட்கும் ஏனைய ஒன்றிய உறுப்பினர்களுக்கும், அதற்கு ஆதரவு வழங்கும் பெற்றோருக்கும் எனது வாழ்த்தையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வாழ்க ஐக்கிய இராட்சிய நெடுந்தீவு மக்கள் ஒன்றியம்!
வளர்க அதன் மகத்தான சேவைகள்!

*கலாநிதி. எஸ்.சிவநாயகமூர்த்தி*
*முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்*

# Delft West- Where I grew up



I was born in 1947. I lived in Delft West till I was 10years old. My mother, two sisters and my brother just elder to me were living together. My father died when I was 3 years old. My other brothers were married and lived elsewhere.

My mother was a Post-mistress. She was in her early 50's then. I was studying in a Hindu school nearby. I was a studious student. My two sisters were very keen in educating me so that I reach a high level in the society and earn respect in the society. They were very watchful on my behaviour as well. I too understood their expectations, studied and behaved well. The teachers too liked me for I was a serious with my studies. I respected elders, a behaviour expected of any youngster. On the whole I was a good boy.

I was very chubby. I cannot run and play like other boys though I was healthy and strong. My legs were rather short which made my steps short and in a crowd I was the last person to reach any place.

Most of the people lived there were farmers and peasants. Most of them had lands where they cultivated grains such as varagu, samai and kurakkan. They were grouped as 'small grains'. The land was not very suitable for rice ( the main staple food) as most of the lands were rocky with certain type of corals and rice (paddy) which needed much deeper clay soil could not be cultivated in large scale. There were palmyrah trees everywhere. Its fruits were eaten as breakfast in most households. The germinated siblings from the seeds were used to make a kind of flour like rice flour. People at leisure time weaved mats and bags to store onion which was exported and the long strong timber was used to build houses. Palmyrahs played an important role in the lively hood of many families.

During this period Government offered forest plots in lots of 5 acres in the mainland for people to clear and build their own houses. The Government offered modest fund to support them. In later stages water was stored in large tanks and fields were irrigated by canals. They are called 'Vaikals'. Many ambitious people grabbed this opportunity and moved out of Delft West. This was the start of 'colonization'. And we now call these areas generally as Vanni from where many LTTE warriors come from.

Other provider of livelihood was cattle, lambs and goats. There were many ponds and built up reservoirs for them to drink water while grazing. One such grazing land was 'Neluvini'. Our house where the Post office was at the North West edge of Neluvini. Extent of this land could be ten football grounds. There were about ten public wells, a large very old banyan tree and some paddy fields. There were hundreds of Palmyrah trees. At south east corner there is a Pillaiyar Temple and Saivapragasa School where I Studied.

During rainy season, usually between October to December, this open space is water clogged. It will be there for months, mostly till the end of April. The roads on all sides will be filled with knee deepwater. You can see the whole metamorphosis *of* frog during this period from tadpoles to full-fledged frog. Only way to move about is walking and definitely you will meet another boy of same age on your way. As an eight year old this environment was heavenly and you never wanted to leave the water. We swam, caught butterflies and another insect called 'thumbi' (dragonfly) which was beautiful with long tail. There were few plants and mushrooms which come up when the soil is wet in otherwise sun baked soil. They were multi coloured, beautiful and fresh. It was a great pleasure to be so close to nature. I almost forget home and the awaiting punishment from my sisters. It was mesmerising and I forget everything else. We went home daily late and beaten by the sisters for playing and swimming in the pool for they feared I could be drowned in deep water accidentally.

In our house one room was occupied by the Post office where my mother worked. Delft West was much populated then. Because of the initial stages of colonisation, wives were left at home and husbands were in Vanni. Husbands sent money through post office. I am reminded of the present day where still some of us support our families in Sri-Lanka. So the Post office was busy. Most of the old mothers were illiterate. My grade 4 Tamil was enough to read the letters they got from their husbands and to write replies on post cards which were then in frequent use and cheap. You needed an ink well and a pen with a nip (not a ball point which came in use much later) and I was in much demand. At times I was passionately offered with eggs and pulukodiyal (again a palmyrah product) for my service.

We had everything in Delft West. Before colonisation started it was a thickly populated area. There were many schools, temples, churches, shops and a dispensary. These are the signs of a developed village and civilised people. There were dedicated teachers and head masters. There were many temples and two Brahmin families. They were well respected and cared by the local people.

Everyone contributed to the temples by their labour and the money they earned. People who owed lands and the businesses donated profusely and regularly serviced and repaired the temples.

The cattle were almost stray. If you want to cultivate or grow anything in your garden you have to fence your premises. These fences were made with loose stones fitted to another in such a way that one can cross it by climbing over it. It is called 'Pakir' or 'Kalveli'. The Magazine you are reading now is named after it and it is a unique symbol of Delft. It is done by few skilled persons and you don't see such fences in any other part of Sri Lanka. Such fences are also said to be existing in Ireland even today. This is a different set up from Vanni where the cultivation is done in large scale. In Vanni the fields are open and cattle are penned.

Another identity of Delft is the horses. They breed in Delft for centuries. For many tourists from mainland they are a great attraction.

In Delft West the lanes were smaller and cattle include young bulls and cows with new born calves. If you come across them on your way to school and when you are all alone, there is no way you can pass them. You have to turn back and hide till they go away or you have to choose a long winding path. I was really scared of them because as I told you earlier I was quite chubby and can't climb the stony fences to hide from them. On several occasions I was late to school for this reason.

I had to leave this beautiful village at the age of 10 for my secondary education. For some years I was a seldom visitor. I haven't visited my village for nearly 25 years. However, my nostalgic memories have not faded yet.

I have shared with you some exciting moments of my life through 'Kalveli' and my thanks are to organisers for this opportunity. I believe this will be of interest to the youngsters who left Delft at their young age and those who never had a chance to visit Delft and their children who were born here to remind them of the pleasant and happy times their grandpas and grandmas had in this small distant village.

**Somasundaram Sivarajah**
Retired Manager (Bank of Ceylon)

# நினைவுகளில் நீங்காத நெடுந்தீவு



"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சங்கப்பாடலின் வரிகளை நம்மில் பலர் அறிந்திருப்பார்கள். பழந்தமிழரின் பரந்துபட்ட உள்ளத்திற்கும் உலகளாவிய நோக்கத்திற்கும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் அற்புதமான பாடல் வரிகள் அவை. அதை எழுதிய புலவரின் பெயர் கணியன் பூங்குன்றனார். சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் இந்த ஒரேயொரு பாடலை மட்டும்தான் இவர் எழுதியுள்ளார். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று உலகப் பொது நோக்கோடு பாடிய அந்தப் புலவர் கூட தனது இயற்பெயரான கணியனுடன் தனது சொந்த ஊரின் பெயரான பூங்குன்றத்தைச் சேர்த்து கணியன் பூங்குன்றனார் என்றே வைத்துள்ளார். சொந்த ஊர்ப்பற்று அப்படி ஒரு கருத்தைக் கூறிய புலவரையே விட்டு வைக்கவில்லை. எனவே சொந்த ஊர் பற்று என்பது இயல்பானது இயற்கையானது.

நாம் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்த அந்த மண்ணும் பார்த்துப் பழகிய மக்களும் நினைவலைகளில் இருந்து என்றும் நீங்க முடியாதவை! வேடன் கலைத்த புறாக்கூடு போல் தமிழினம் சிறடிக்கப்பட்டாலும் அந்த மண் மீதான நேசம் எப்போதும் ஈரம் கசிந்த ஒன்றாகவே இருக்கின்றது.

கால்நூற்றாண்டு கழிந்தும் நம்மைப் போன்றவர்கள் நெடுந்தீவை நினைக்கும்போது ஏற்படும் அந்த சுகம் ஈரம் காயாத பசுமையான ஓவியம் போல் இருக்கின்றது. அரைக்கால் சட்டைபோட்டு கொண்டு ஆடிப்பாடித் திரிந்த வயதின் நினைவழியா நாட்களை எண்ணும்போது எனது மனது நெகிழ்கிறது.

பள்ளி விடுமுறை தொடங்கும்போது நெடுந்தீவுப் பயணம் மனதில் விரியத் தொடங்கிவிடும். நகர்ப்புற மாயையில் இருந்து அந்நியப்பட்டு நிற்கும் அந்த மண்ணை காணும் ஆசை அந்தச் சின்னஞ் சிறுவயதிலும் அதிகமாக இருந்தது. குறிகட்டுவான் படகுத்துறையில் காத்திருக்கும் போது ஏற்படும் சுகமும் குதூகலமும் அலாதியானவை. அப்போது குமுதினியுடன் மணிமேகலை என்றொரு படகும் இருக்கும். ஆனால் அதிகமான பயணங்கள் குமுதினியுடன் அமைந்து விடுகின்றன.

குமுதினிப் படகின் மேல் கூடாரத்தில் அமர்ந்து கொண்டு திறந்த வெளியில் உப்புக் காற்றின் வாசத்தில் செல்லும் அந்த பயணத்தின் சுகத்தை இப்போது நினைக்கும்போதும் எனது மனம் ஏக்கம் கொள்கிறது. இத்தனையாண்டுகளில் எத்தனை பயணங்களை மேற்கொண்டிருப்போம். எத்தனை நாடுகளை சுற்றி வந்திருப்போம். இருப்பினும் அந்த யாழ் கடல்நீர் ஏரியைப் கிழித்துக்கொண்டு குமுதினியில் செல்லும் நெடுந்தீவுப் பயணத்திற்கு இணையாக இன்னொன்றை ஏற்றுக் கொள்ள மனது மறுக்கிறது.

கடலடிவாரத்தில் தாழப் பறந்து செல்லும் பறவைகளின் ஒலியுடன்தான் நெடுந்தீவு மாவிலித்துறை ஒவ்வொருமுறையும் வரவேற்றிருக்கிறது. பொதுவாக யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்டியுள்ள தீவுகளைக் காட்டிலும் நெடுந்தீவு சற்றுத் தொலைவில் இருப்பதால் நவீன வசதிகள் மிகக் குறைவாகவே இருந்தன. அந்தக் குறைகள் கூட மனதிற்கு நிறைவாகவே இருந்தன. யாழ் நகரில் மாட்டு வண்டில்கள் அப்போதும் அரிதாகவே இருந்தன. நெடுந்தீவில் அதிகமான பயணங்கள் மாட்டு வண்டில்களில்தான்.

அந்த மாட்டு வண்டில் பயணங்களை இப்போது நினைத்தாலும் நெஞ்சம் கனக்கிறது. உலக வளர்ச்சிப் பாதையில் இயந்திரங்களின் உற்பத்திப் பெருக்கம் தவிர்க்க முடியாதது என்பது உண்மைதான். இருப்பினும் இந்த அபரீத வளர்ச்சி கால்நடைகளை மனிதர்களிடம் இருந்து பிரித்து விட்டது. வெறும் இறைச்சிக்காக மட்டும் அவற்றைப் பயன்படுத்தும் அவலநிலை உருவாகியிருக்கிறது. அதிலும் மனிதனின் உணவுத் தேவைகளுக்காக செயற்கையான இரசாயன உணவுகளைக் கொடுத்து கால்நடைகளைப் பெருக்கி இறைச்சியாக்கும் அளவுக்கு முதலாளித்துவம் கோர வடிவத்துடன் இயங்கி வருகிறது.

அப்போதெல்லாம் மாடுகள் தமிழர்களின் குடும்ப உறவுகளில் ஒன்றாகவே இருந்திருக்கின்றன. இயற்கையான வளமான வாழ்விற்கு அவற்றைப் பயன்படுத்தினார்கள். நாம் அங்கு வாழ்ந்த காலங்களில் அவற்றைப் பார்க்க முடிந்தது. நமது தாத்தாமார்களும் பாட்டிமார்களும் தைப்பொங்கலைக் காட்டிலும் மாட்டுப்பொங்கலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டாடியதைப் பார்க்கின்றோம். நமக்காக உழைத்தவை மாடுகளாயினும் அவற்றுக்கு விழா எடுத்து நன்றி பாராட்டியவர்கள் தமிழர்கள்.

சாறாப்பிட்டி எனும் இடத்திற்குச் சென்று மாட்டு வண்டில்களில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவது அப்போது நம் போன்றோருக்கு வழக்கமாக இருந்தது. நெடுந்தீவில் எல்லா இடங்களிலும் நன்னீர் கிடைப்பதில்லை. சாறப்பிட்டியில்தான் நன்னீர் ஊற்றுக்கள் அதிகமாக இருக்கின்றன. அந்தக் கிணறுகளை டச்சுக்காரர்கள் எனப்படும் ஒல்லாந்தர்கள் தங்களின் குதிரை வளர்ப்புக்கு வெட்டியதாகச் சொல்வார்கள். ஒல்லாந்தர் ஆட்சியின் எச்சங்கள் நெடுந்தீவில் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆங்கிலத்தில் நெடுந்தீவை 'டெல்வ்ற்' என அழைப்பார்கள். இது அவர்கள் வைத்த பெயராகும். அவர்களுடைய நாட்டில். இதே பெயரில் ஒரு நகரம் இருக்கிறது. அதே பெயரை நெடுந்தீவுக்கும் வைத்தார்கள்.

சாறப்பிட்டியில் கிடைக்கும் தண்ணீரானது பயிர்ச்செய்கைக்கு மிகவும் ஏற்புடையது. அதேவேளை அவ்விடமானது கோளான் கற்கள் நிரம்பிய பகுதியாகும். எனவே நமது முன்னோர்கள் வேறு பகுதிகளில் இருந்து பயிர்ச்செய்கைக்கு ஏற்ற களிமண்ணை மாட்டு வண்டில்களில் கொண்டுவந்து, அந்த பரவை கற்களின் மேல் போட்டு கமம் செய்தார்கள். 1960களில் நெடுந்தீவுக்கு சுற்றுலா வந்த இஸ்ரேலிய நாட்டு வேளாண்துறை அறிஞர்கள் இந்தக் களிமண்ணை பரவைக் கடலில் பரப்பி பயிர் செய்யும் முறையை வியந்து பாராட்டியதாக நமது வீட்டுப் பெரியவர்கள் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

ஈழமண்ணை பேரினவாதம் விழுங்கியது போக இன்றைய உலகமயமாதலின் விளைவாக ஏகாதிபத்திய சக்திகள் தங்களின் பொருண்மிய நலன்களுக்காக நமது ஈழமண்ணை விழுங்கிக் கொண்டிருக்கின்றன என்பதும் மற்றுமொரு கசப்பான உண்மை. ஆனால் அப்போதைய நிலைமை அப்படி இல்லை. இருப்பினும் ஈழமானது காலமாற்றத்திற்கு ஏற்றவாறு பல மாறுதல்களை உள்வாங்கிக் கொண்டே இருந்தது.

நெடுந்தீவோ அதிலும் விலகியே இருந்தது. அந்த மண்ணின் விளைபொருட்களோடு இணைந்த வாழ்க்கையையே நெடுந்தீவு வாழ் மக்கள் மேற்கொண்டிருந்தனர். போர்க் காலங்களில் அதிலும் தமிழர்கள்மேல் பொருளாதாரத் தடைவிதிக்கப்பட்ட காலங்களில் நெடுந்தீவின் இயற்கை வளங்கள் மக்களை உணவுப் பற்றாக்குறையிலிருந்து பெருமளவு காப்பாற்றியிருக்கிறது.

வரண்ட பூமியாகக் கருதப்பட்டாலும் கற்பக தருக்களாக பனையும் தென்னையும் நீக்கமற நிறைந்திருக்கின்றன. மக்களின் வாழ்விலிருந்து பிரிக்க முடியாத அளவுக்கு அங்குலம் அங்குலமாக அவை பின்னிப் பிணைந்திருக்கின்றன. கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளுவதென்றால் பனை ஓலையில் செய்யப்பட்ட பட்டை, தென்னந்தும்புக் கயிறு, கால்நடைகள் குடிப்பதற்கு பனை மரத்தாலே செய்யப்பட்ட தொட்டி, படலையானாலும் வீட்டின் கூரையானாலும் பனையும் தென்னையும் மக்களோடு மக்களாக பிணைந்து நிற்கின்றன. அந்த எளிமையும் பழமையும்தான் இன்று நினைக்கும்போதும் நம் போன்றவர்களை ஈர்க்கிறது.

கதைகளிலும் இலக்கியங்களிலும் படித்த பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளை அப்போது நெடுந்தீவில் காணமுடிந்தது. இன்றைய முதலாளித்துவத்தின் அசுரவளர்ச்சியும் அது வளர்த்துவிட்ட நுகர்வுக் கலாச்சாரமும் இயற்கை வாழ்விலிருந்து முற்றிலுமாக நம்மை அடித்துத் தள்ளிவிட்டது. துரித உணவுகள் என்ற பெயரில் எதை எதையோ வாங்கி வயிற்றை நிரம்புகிறோம். அப்போது நம் கண்முன்னே நமது தாத்தாமார்களினதும் பாட்டிமார்களினதும் வாழ்க்கை முறைகளையும் உணவுப் பழக்கவழக்கங்களையும் இப்போது நினைத்துப் பார்க்கும்போது பெருமிதமாக இருக்கின்றது. பனை தென்னை போன்றவற்றில் இருந்து பெறப்படும் அனைத்தையுமே அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு பயனுள்ளதாக மாற்றினார்கள்.

அப்போது இருந்த அவர்களின் இயற்கை உணவுப்பழக்க வழக்கங்கள் நம் கண்முன்னே இப்போதும் நிழலாடுகின்றன. வரகரிசிச் சோறு, முசுட்டை மற்றும் குறிஞ்சா இலையுடன் கூடிய ஒடியல் பிட்டு, தூதுவளை சம்பல், வீணாலை கிழங்குக்கறி, பிரண்டைக் கறி என ஆரோக்கியம் மிக்க உணவுகளை உட்கொண்டார்கள். அந்த மண்ணில் அந்த நமது தாத்தா பாட்டிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற இவ்வகையான உணவுகள் பின்னர் நம் போன்றவர்களுக்கு எட்டாக் கனிகளாகவே போய்விட்டன.


தாகத்திற்கு இளநீர், மோர், நுங்கு என அனைத்துமே இயற்கை மயமாகவே இருந்தன. வேப்பங்குச்சியில் பல் துலக்குவதில் தொடங்கி ஆவாரம், செவ்வரத்தை இலைகளை அரைத்து கூழாக்கி அதையே தலைக்கு வைத்து நீராடுவது வரை நோய் எதிர்ப்பு சக்திகளை இயற்கையாகவே கொண்ட தாவரங்களை கணிசமாகப் பயன்படுத்தி வந்தோம்.

நெடுந்தீவு என்றதும் மருத்துவ மூலிகைகள் இயல்பாகவே நினைவுக்கு வருகின்றன. "யாழ்ப்பாண வைபவ மாலை" எனும் நூலில் நெடுந்தீவானது "மருத்துவமாமலைவனம்" எனப் போற்றப்பட்டுள்ளது. இராம இராணுவப் போரின்போது மூர்ச்சையாகி விழுந்த இலக்குவனைக் காப்பாற்றுவதற்காக அனுமான் சஞ்சீவி மலையைத் தூக்கி வரும்போது அதன் ஒரு பகுதி உடைந்து நெடுந்தீவில் விழுந்ததாகவும் ஓர் ஐதீகம் உண்டு. இக்கருத்து பகுத்தறிவுக்கு முரணாக இருப்பினும் நெடுந்தீவில் நிறைந்திருந்த மூலிகைகள் காரணமாக இப்படி ஓர் ஐதீகம் மக்கள் மனதில் ஏற்பட்டிருக்கலாம்.சில சிங்கள இலக்கியங்கள் இதேபொருளில் "அவுசதலோகய" (சஞ்சீவி உலகம்) என்று நெடுந்தீவைக் குறிப்பிடுகின்றன.

நெடுந்தீவு என்றதும் பாறைகளால் அடைக்கப்பட்ட வேலிகளும் கூடவே நினைவுக்கு வருகின்றன. நெடுந்தீவைத் தவிர ஈழத்தின் வேறு இடங்களில் அவற்றைப் பார்த்ததாகத் தெரியவில்லை. இது போன்ற மதில்களை இங்கிலாந்துக் கிராமங்களின் சில இடங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. பெரிய கற்களை அடியில் வைத்து, பெரிதிலிருந்து சிறிதுவரை ஒன்றன் பின் ஒன்றாக மிக நேர்த்தியாக அமைத்திருப்பார்கள். சீமெந்து போன்ற எந்த ஒட்டுப்பசைகளும் இல்லாமல், புயல் காற்று அடித்தாலும் அவை எளிதில்

விழுந்து விடாதவை. அதில் இருக்கும் சிறு சிறு இடைவெளிகள் வழியாகக் காற்று வெளியேறி விடுவது அதற்கு காரணமாக இருக்கலாம். சிறிய தொழில் நுட்பமாக இருப்பினும் அதனைப் பயன்படுத்தி அவர்கள் நேர்த்தயாக வேலி அமைத்த அழகு இப்போது நினைக்கும் போது வியப்பைத் தருகிறது.
நெடுந்தீவை நினைக்கும்போது கோவில்களும் திருவிழாக்களும் கூடவே நினைவுக்கு வருகின்றன. பக்தி, ஆன்மீகம் போன்றவற்றுக்கு அப்பால் உறவுகளின் ஒன்று கூடல்களாக அவை அமைந்து விடுவதுதான் இப்போது நினைத்தாலும் இனிக்கும் ஒன்றாக இருக்கின்றது. ஈழத்தில் பள்ளி விடுமுறை ஆண்டுக்கு மூன்று தடவை விடுவார்கள். ஒவ்வொரு தடவையும் ஒர மாதம் விடுமுறையில் கழிப்போம். ஒவ்வொரு விடுமுறையும் ஏதோ ஒரு கோவில் திருவிழாக்களோடு கழிந்தது விடுவது வழக்கமாக இருந்தது. சித்திரைமாத விடுமுறையில் நெழுவினிப் பிள்ளையார் கோவில் திருவிழா, ஆவணியில் காளிகோயில் திருவிழா, மார்கழி மாத விடுமுறை பெரும்பாலும் திருவெம்பாவை விழாக்களில் கழிந்து விடுகின்றன.
அந்த திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பாடல்களை நமது வீட்டு பெரியவர்கள் உச்சக்கட்டையில் பாடுவார்கள். ஒலிபெருக்கி இல்லாமலே அவை அதிகாலையில் நமக்கு கேட்கத் தொடங்கி விடும். இறைவனைத் துயில் எழுப்புகின்றனவோ இல்லையா நமது துயில்களை அவை எழுப்பிவிடுகின்றன. வான் கலந்த மாணிக்கவாசகரின் தேன் கலந்த அந்தத் தமிழை பக்க வாத்தியங்கள் எதுவும் இல்லாமல் அவர்கள் அப்படி அழகாகப் பாடுவார்கள்.
திருவிளையாடல் புராணத்தில் சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த கதையை நினைவுகோரும் விதமாக சர்க்கரையில் குழைத்து பிட்டு கொடுக்கும் பழக்கமும் இருந்தது.
நெடுந்தீவு மேற்குப் பகுதியில், கடற்கரையோரமாக அமைந்திருக்கும் சென்ற் லோறன்ஸ் கிறிஸ்தவ தேவாலயத்தின் திருவிழாவும் இவற்றுள் ஒன்றாக இருந்தது. அங்கு கத்தோலிக்கக் குருமார்களின் உரைகளை மிகவும் விரும்பிக் கேட்பது வழக்கம். மோசஸ், சாலமன், தாவீது போன்ற விவிலிய நூலில் வரும் கதைகளுடன் வேறு பல வாழ்வியல் நெறிக்கதைகளையும் அவர்கள் சுவைபட உரைப்பார்கள். இன்று வரை அவை நினைவில் நிற்கத்தக்கதாக உள்ளன. பாரதக் கதையில் வரும் கர்ணனை தாய் பிறந்தவுடன் கங்கையில் விட்டதுபோல் விவலியத்தின் (பழைய ஏற்பாடு) தலைமைப் பாத்திரமான மோசஸ் என்பவரையும் தாய் பேழையில் வைத்து நைல் நதியில் விட்டதை ஒப்பிட்டு கூறியது இப்பொழுதும் நினைவில் நிற்கிறது. "கற்றில னாயினும் கேட்க" என்றார் வள்ளுவர் அந்த வகையில் அந்தக் கதைகளை அபபோது அந்த வயதில் நூல்களில் படிப்பதற்கு வாய்ப்புகள் அரிதாயினும் கேட்டு மகிழ்ந்து அவற்றை நமது வயதை ஒத்த சிறார்களிடம் ஒப்பித்து மகிழ்வது வழக்கமாக இருந்தது.
நினைவுகளில் சுகமானவை கடந்த காலத்தின் வசந்தங்களை நினைத்துப் பார்ப்பதுதான். நெடுந்தீவில் வாழ்ந்த அந்த பால்ய காலம்தான் இப்போது நினைத்துப் பார்த்தாலும் நம் போன்றவர்களுக்கு வசந்த காலமாக இருக்கின்றது.

*மயூரன் புண்ணியமூர்த்தி*



உன் நினைவே.....

எனது கிராமத்தில்...
கள்ளி செடிகூட முள்ளுக்குத்தாது
காகித பூக்கூட வாசனை தந்தது.
கடல் கற்கள்கூட காலில் குத்தாது
காய்ந்த நிலம்கூட காவியம் தந்தது
உப்பு நீர்கூட இனிமை தந்தது
உவர்க்காற்றுக்கூட தென்றலாய் தொட்டது
வளரும் மரம் செடி மூலிகையானது
வயதெல்லை முதியோர்க்கு நூறைக் கடந்தது
சாமை,வரகு,நெல் சக்தி கொடுத்தது
சத்துணவானதை பனை தென்னை தந்தது
சரித்திரம் படைத்த பல பெரியோர்கள்
வாழ்ந்தனர்...

வெளி நாடு வந்து விறைத்து போகிறேன்
வேலையும் குளிரும் வேசம் இழந்திட்டேன்.
பசுமை நாடே பாலை வனமானது
படுக்கை மெத்தைகுள் பல ஊசி குத்துது
ஊரை நினைத்தே உறங்கிக்கொள்ளுறேன்
ஒரு நாள் வருவேன் உன் மடி தூங்க......

-பசுவூர்க்கோபி-

# எனது நிலம்.... பிறர்க்கென்ன உரிமை!!!



எமது ஈழத்தாய் நிலம் கேட்கும் இந்த கேள்விக்கு உரிய விடையை தேடி நாம் நிற்கும் இவ்வேளையில், கீழ்க்காணும் ஆக்கம், தனியார் நிலம் பற்றியதும் வேறு சில சட்டக் குறிப்புகளை மட்டுமே உள்ளடக்கியதாகும்.

எமது தீவில் மூதாதையர் எவ்வாறு நில உரிமைகளை பேணினார்கள், பகிர்ந்து கொண்டார்கள் என்பது பற்றி உங்களில் பலருக்குத் தெரியும். எனது தாயார் சொல்லில் இருந்து அறிந்திருக்கின்றேன்..... ''அந்தக் காணியில் எமக்கும் பங்கு உண்டு...... இந்தக் காணியில் உண்டு...... எமது காணியில் இன்னொருவருக்கு பங்கு உண்டு........ இன்னொருவருக்கு எமது காணிக்கும் பனம்பழம் எடுக்க உரிமை உண்டு........ இது முப்பாட்டனாரால் வழங்கப்பட்டது.. அது.... இது..... என்று! இவ்வாறான ஒழுங்குகள், சொந்தங்கள் சொத்துக்களோடு பின்னிப் பிணைந்திருக்க வேண்டும் என்பதற்காக எமது மூதாதையர்கள் ஏற்படுத்திக் கொண்ட விதிமுறைகளாக இருக்கலாம். ஆனால் இப்பங்குரிமைகளில் பெரும்பாலானவை பதியப்படாதவை.

ஆனால் நாம் இன்றிருக்கும் நாட்டிலோ நிலமைகள் மாறானவை. இங்குள்ள நிலங்களில் பெரும்பாலானவை தேசிய அரசின் காணித் திணைக்களத்தின் பதிவுக்கு உள்ளானவை. புதியப்பட்ட காணிகளில் என்னென்ன விபரங்கள் பதியப்பட்டுள்ளனவோ அந்தந்த பதிவுகளுக்கு இணங்கவே நிலங்களின் உரிமைகளும் பாவனைகளும் அமைய வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது.

பெருநகர் மற்றும் நகர்ப்பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் வியாபார கட்டிடங்கள் அமைந்துள்ள நிலங்களில் பெரும்பான்மையானவை இவ்வாறான சில சிக்கல்களைக் கொண்டிருந்த போதிலும், இந்த சிக்கல்கள் ஏதாவது ஒரு வழியில் தீர்க்கப்பட்டவையாகவோ அல்லது இலகுவில் தீர்க்கப்பட கூடியவையாகவோ காணப்படுகின்றன.

ஆனால் புறநகர் மற்றும் கிராமப்பகுதிகளில் உள்ள காணிகளை வீடுகளை நீங்கள் கொள்வனவு செய்யும்போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டியது கட்டாயமாகிறது. முக்கியமாக ஏலத்திலோ அல்லது அவசரமான சூழ்நிலைகளிலோ கொள்வனவு செய்யும்போது அதிக அவதானம் அவசியம்.

அண்மையில் எனது இரு வேறு வாடிக்கையாளர்களுக்கு நிகழ்ந்த அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்கிறேன். முதலாவது இலண்டனின் புறநகர் பகுதியில் இருந்த நிலம் ஒன்றை ஏலத்தில் வாங்கிவிட்டார் இந்த முதலீட்டாளர். இவரது நோக்கம் அந்த நிலத்தில் வீடுகளை அமைத்து விற்பதாகும். ஏலத்திலேயே ஒப்பந்தம் கையிடப்பட்டு பத்து விகித முற்பணமும் செலுத்தியாகி விட்டது. பின்னர் தான் அவர் ஆவணங்களைச் சமர்ப்பித்து கொள்வனவை பூர்த்தி செய்து தருமாறு பணித்தார். ஆவணங்களை ஆராய்ந்ததில் வெளிவந்த உண்மை என்னவென்றால், அந்த நிலத்தை ஊடுருவுவதற்கான உரிமை மின்சார வாரியத்திற்கு சார்பாக பதியப்பட்டுள்ளது. மின்சார வாரியத்திற்கு அந்த நிலத்தின் ''உரிமையாளர்'' என்ற அந்தஸ்து எங்குமே இல்லை. ஆனால் வாரியத்திற்கு உள்ள

ஊடுருவுவதற்கான உரிமையை மீறி காணியை உரிமையாளர் பாவிக்க முடியாது. முதலீட்டாளரால் மிகவும் பெறுமதிமிக்க முதலீடாக கருதப்பட்ட நிலம், உண்மையில் மொத்த முதலில் சிறுபங்கு மட்டும் உள்ளதாகவே உள்ளது.

மற்றும் ஒரு நபர், இல்பேட் (Ilford) வட்டாரத்துக்குள் ஓர் இடத்தில் வரிசையாக அமைந்துள்ள வீடுகளுக்கு பின்னால் உள்ள நிலத்தை வாங்கி வீடுகள் கட்டுவதற்காக அந்த நில உரிமையாளரிடம் மீட்க முடியாத முற்பணமாக ஒரு தொகையை செலுத்திவிட்டார். அத்தருணத்தில் அவர் சட்ட ஆலோசனை எடுத்துக் கொள்ளத் தவறிவிட்டார். பின்னர் ஆவண வேலைகளை நிறைவு செய்வதற்காக என்னை அணுகியிருந்தார். காணிக்கான ஆதாரங்களையும் சில அயல் நிலத்து உறுதிகளையும் ஆராய்ந்தபோது இவர் வாங்க இருந்த நிலத்தின் ஒரு பகுதிக்கு ஊடாக முன்னால் இருக்கும் வீடுகள் அனைத்துக்கும் போய் வருவதற்கான உரிமைகள் இருந்தமை தெளிவாயிற்று. இந்த உரிமைகளை மீறி அவரால் அந்த நிலத்தில் கட்டிடம் கட்ட முடியாது. இதனால் அவர் வாங்கும் முயற்சியை கைவிட்டதோடு, முன்பணத்தையும் இழக்கவேண்டி உள்ளது.

ஆகவே நிலமோ வீடுகளோ வாங்கும்போது மிகவும் அவதானமாக செயற்பட வேண்டியது அத்தியாவசியமானது.

மேலும், வியாபாரக் கட்டிடங்களை குத்தகைக்கு (LEASE) எடுக்கும் போதோ அல்லது குத்தகை எழுதிக் கொடுக்கும் போதோ அவதானம் அவசியம்.ஏற்கனவே குத்தகையில் இருக்கும் வியாபாரக் கட்டிடத்தை குத்தகைக்கு எடுக்கும்போது, அதில் எவ்வாறான வியாபாரங்களுக்கு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன, எவ்வாறான செலவுகளுக்கு நீங்கள் பாத்திரவாளியாவீர்கள் போன்ற விடயங்களை முன்னதாகவே அறிந்து கொள்வது அவசியம். மற்றும் ஒரு குத்தகை காலத்தை நீடிக்க உரிமை வழங்கப்பட்டுள்ளதா இல்லையா என்பன போன்ற விடயங்களும் கருத்தில் எடுக்கப்பட வேண்டும்.

## மற்றும் சில குறிப்புக்கள்:

- வியாபாரம் (கடை) வாங்கும்போதோ விற்கும்போதோ உரியபடி ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு முழுமையான கொள்வனவு, விற்பனவு என்ற அடிப்படையிலேயே வியாபாரத்தை கை மாற்றுங்கள். ''எழுத்து வேலை'' முன்னெடுக்காமலோ அல்லது ''முகாமைத்துவ உடன்படிக்கை (Management Agreement) என்ற அடிப்படையிலோ வியாபாரங்களை வாங்கியவர்கள் மற்றும் விற்றவர்கள் எத்தனையோ பேர் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதை எனது தொழில் சார்ந்த அனுபவமாக கொண்டிருக்கிறேன்.
- கட்டிட வேலைகளுக்கு ஆட்களை அமர்த்தும் போது, முக்கியமாக, வீடு நீட்டிக்கட்டுதல் (extension) கூரைப்பகுதியை அறையாக மாற்றுதல் போன்ற வேலைகளை செயற்படுத்தும்போது உரியமுறையில் எழுத்து வடிவில் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் ''முகம் பார்த்து'' எழுத்தில் உடன்படிக்கை செய்து கொள்ளாதது இரு பகுதியினருக்கும் நல்லதன்று. கைச்சாத்து இடப்பட்ட

உடன்படிக்கை இல்லாததனால் பல ஆயிரம் செலவு செய்து நீதிமன்றத்தில் தீர்ப்பு எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு பலர் ஆளாகி இருக்கிறார்கள்.

அத்தோடு கட்டிடங்களில் செய்யப்படும் சில வேலைகளுக்கு 52 டைவ ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். உதாரணமாக, கொதி கருவி (Boilor), மின்சார இணைப்புகள், இரட்டைக் கண்ணாடி யன்னல்கள் (Double Glazed Windows) போன்றவற்றிற்கு 52 டைவ சான்றிதழ்களை பெற்று வைத்திருக்க வேண்டும். அத்துடன் உள்ளூராட்சியின் நகர திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி (Planning Permission) மற்றும் கட்டிட தராதரக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் (Building Control) சான்றிதழ் போன்ற ஆவணங்கள் பேணப்பட வேண்டியது அவசியம். இவைகள் நீங்கள் வீடு விற்கும் போதோ அல்லது மீள் 52 டைவ (Remortgage) வைக்கும்போதோ தேவைப்படும். இவை இல்லாத பட்டசத்தில் வீண் சிரமங்களும் செலவுகளும் ஏற்பட வாய்ப்புண்டு.

## மேலும் உங்கள் சிலரின் கவனத்திற்கு:

- வரம்பு மீறி மது அருந்திவிட்டு வாகனம் ஓடுவதை ஒருபோதும் செய்யாதீர்கள். அவ்வாறு ஓட்டி சிக்கும் பட்சத்தில் ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்காவது வாகனம் ஓட்டுவதற்கான தடையை அனுபவிப்பீர்கள்.
- வரம்புக்கு மீறிய வேகத்தில் வாகனம் ஓட்டுவதையும் விடுங்கள். இதனால் ஓட்டுனர் அனுமதியை தற்காலிகமாக இழந்தவர்கள் பலர்.
- கோபத்திலோ அல்லது உணர்ச்சி வசத்தாலோ பிறரை உடல்ரீதியாக தாக்காமல் இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். இவ்வாறான செயற்பாடுகளுக்கு தண்டனை வழங்கப்பட்டால் அந்த விபரங்கள் உங்களைப் பற்றிய தகவல் பதிவுகளில் நீண்ட காலம் பேணப்படும். இவை உங்கள் வேலை செய்யும் தகமையைக் கூட பாதிக்கலாம்.
- நீங்கள் பிறரிடம் தொழில் செய்பவராக இருந்தாலும் அல்லது பிறருக்கு தொழில் வழங்குபவராக இருந்தாலும் உங்களது சட்டபூர்வமான உரிமைகளையும் கடமைகளையும் அறிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

மொத்தத்தில் நாம் எமது சட்ட ரீதியான உரிமைகள் என்ன, கடமைகள் என்ன என்பவற்றை அறிந்துகொண்டு அதற்கமைய எமது செயற்பாடுகளை மேற்கொண்டால் பல சிரமங்களையும் இழப்புக்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

என்றும் பணிவுடனும் தோழமையுடனும்
*டானியல் ஜீவாகரன்*
*சட்டத்தரணி*
*செயற்குழு உறுப்பினர்*
*நெடுந்தீவு ஒன்றியம் (ஐக்கிய இராச்சியம்)*

# நீடு புகழ் நெடுந்தீவு



நீராடும் கடல் புடை சூழ் நெடுந்தீவாம், பால் வளமும், பனைவளமும் மிகுந்த தீவு, இந்து மகா சமுத்திரத்தின் பொற்றிலகமென விளங்கும் ஈழம் அதில் சொற்திலகமென விளங்கும் சீர்மை மிகு தீவுகளின் தலையாய் சிறப்பு மிகு எங்கள் நெடுந்தீவு, எழில் ஆழி சூழ் இயற்கை அரண் ஏற்றமிகு பரிகளுடனும், பண்டுபுகழ் வீகாமன், வெடி அரசன் கற்கோட்டைகள் பண்புமிகு விருந்தோம் பலுக்கு இலக்கணமாய் விளங்கும் தீவு.

பாவலர்கள், பண்டிதர்கள், நவீன விஞ்ஞான தொழில் நுட்ப, தகவல் பரிமாற்ற, கணணியல் வல்லுனர்கள், டாக்டர்கள் எஞ்சினியர்கள், எழுத்தாளர்கள் நிறைந்த தீவு.

தொண்டு புகழ் சைவமொடு, செந்தமிழும் வருங்காலப் பிரஜைகளை உருவாக்கும் ஆசிரியப் பெருந்தகைகள் ஈன்ற தீவு.

கல்லினால் வேலி கட்டும் கலை நுட்பம், நவீன பொறியிலாளர்களே வியந்து போற்றி நிற்கும் முன் மாதிரித் தீவு.

லண்டன், பிரான்ஸ், கனடா, சுவிஸ், அவுஸ்திரேலியா, ஜேர்மனி என உலகம் பெருநாடுகளில் எல்லாம் புலம் பெயர்ந்து வாழும் எம்மூர் சகோதர, சகோதரிகள் தாம் வாழும் நாடுகளில் எல்லாம் தம் அறிவுத்திறனால், ஆற்றலினால் எமக்கும், அவ் நாடுகளுக்கும் அளப்பிலா பெருமை சேர்க்கின்றனர்.

பார்புகழும் தமிழ்த்தூதர், பல்மொழி கற்ற சான்றோர் தவத்திரு தனிநாயகம் அடிகள், மன்னார் ஆயர் அருள் திரு ராயப்பு யோசேப் அடிகள் போன்ற தீரமிக்க சான்றோர் பலரை ஈந்துவந்த தீவு.

திருவும் கல்விச்சீரும் மிகு நெடுந்தீவு கலைமகளும் மலைமகளும், திருமகளும் சேர்ந்து விளங்கும் திவ்ய தீவு.

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, திமிர்ந்த ஞானச் செருக்குடையர் எனப் பலர் போற்றியுரைத்திட்ட பாரதியும் கண்ட புதுமைப் பெண்கள் பலர் நிறைந்த தீவு. ஓர் பெண்ணை உள்ளூர் சபைத் தலைவராக்கி உலகத்திற்கே வழி காட்டிய உன்னதத் தீவு. இதன் பின்னர் தான் சிறிமாவோ

பண்டாரநாயக்கா, இந்திரா காந்தி போன்றோர் தலைவிகளாக அரசியலில் அடியெடுத்து வைத்தார்.

இயற்கை எழில் நிறைந்து தென்னைகளினாலும், பனைகளினாலும் புல் தரவைகளாலும் செழிப்புற்றிருந்த நெடுந்தீவில் இருந்து பண்டைக் காலத்தில் நாள் தோறும் இராமேஸ்வரம் ஆலய அபிஷேகத்திற்கு பால் கொண்டு சென்றதாக அறிய முடிகிறது. இத்தீவு பசுந்தீவு, பால்தீவு, மூலிகைத் தீவு ஆகிய காரணப் பெயர்கள் கொண்டும் அழைக்கப்பட்டதும் உண்டு.

விவசாயிகளும், கடற்தொழிலாளர்களும் உத்தியோகத்தர்களும், வணிகர்களும் கலந்துறையும் வெடியரசர்கள் ஆட்சி செய்த நெடுந்தீவில் வரலாற்று எச்சங்கள் பல காணப்படுகின்றன. இது பற்றி நெடுந்தீவு ஊடகவியலாளர் ஒருவர் எழுதிய நெடுந்தீவு சிதையும் சின்னங்கள் வரலாறும் வளங்களும் என்னும் அரிய நூல் மூலம் அறியக் கிடக்கின்றது.

இயந்திரப் படகுகள் மூலம் பொது மக்கள் போக்குவரத்து நிகழ்கிறது. சைவமும் கிறஸ்தவமும் கைகோர்த்து நின்று ஆன்மீக வளர்ச்சியை பறைசாற்றுகின்றன. பல மைல் தொலைவில் அமைந்திருந்தாலும் தனது பண்பாட்டுத் தனித்தவத்தைப் பாதுகாத்து நிற்கும் பெருந்தீவு இதுவாகும். இங்குள்ள உயர் சைவ கிறீஸ்தவ வேதங்கள் தங்களைத் தனிநாயக முதலி பரம்பரையினர் எனப்பெருமை கொள்வர்.

நெடுந்தீவு பின் தங்கிய பிரதேசமா? பின் தங்கவைக்கப்பட்ட பிரதேசமா? என்பதைத் தெரிந்து கொள்ள ஆர்வலர்கள் அங்கு சென்று தரிசிப்பதே உகந்ததாகும். ஆற்றுக்கட்டை எனக் கூறப்படும் நுழைவாயில், வெடியரசன் கோட்டை எனக் கூறப்படும் பிரதேசம் வெல்லை கால் நடைகளுக்குகாக கட்டப்பட்ட கேணி, நெடுந்தீவு குறிகாட்டுவான் சேலையில் உள்ள அரச படகு குமுதினி, வெட்டுக்கழி தடுப்பு அணை தீவுக்கு திரைகள், குதிரை லாயங்கள், இராணி கோபுரம் (குவிந்தா), போத்துக்கேயக் கோட்டை, ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட புறாக்கூடு, பகிர் எனப்படும் கல்வேலி, பழமை மிக்க ஆலமரம் 2000 வருட வரலாற்றுத் தொடர்பு கொண்ட பெருக்கு மரம், 40 அடி மனிதனின் பாதத்தில் ஒன்று எனக் கூறப்படும் கற்குழி, ஆலமாவனப் பிள்ளையார் கோயில் 250 வருடங்களுக்கு ஏற்பட்ட பழமை வாய்ந்த ஆலமரம் ஒன்று கோயிலின் கிழக்குப்புறமாக உள்ளது. நெழுவினி சித்தி விநாயகர் ஆலயம், பனங்காணி ஐயனார் ஆலயம், பெருக்கடி சித்தி விநாயகர் ஆலயம், புனித யுவானியன் ஆலயம், தென்னிந்திய திருச்சபையின் ஆலயம், பனங்கூடல், வெங்காயக் கடை மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள், பவளப் பாறை துலா மூலம் நீர் இறைத்தல், நெல் அறுவடை செய்யும் காட்சி, குமுதினிப் படகுப் படுகொலையில் பலியான பொது மக்களின் நினைவாலயம், மகா வித்தியாலயம், சைவப்பிரகாச

வித்தியாலயம், ரோமன் கத்தோலிக்கப் பாடசாலை முதலியவையும், 20 வருடங்களுக்கு ஒரு முறை பூக்கும் குமரிக்கற்றாளையும் கண்டு களிக்கலாம்.

புகழ்பூத்த பாரம்பரியம், கலை, இலக்கிய பண்பாட்டுச் சிறப்புகளைக் கொண்ட நெடுந்தீவின் வரலாறு தொன்மை மிக்கதாகும். அதன் வரலாற்றுப் பதிவுகளை ஆங்காங்கே சிதறிச் சிதையாதவற்றையும் சேகரித்துப் பாதுகாப்பது தீவகப் பற்றுடையோர் யாவரினதும் கடமையாகும்.

" தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்வோம் " என்ற மகாகவி பாரதியின் கனவை நனவாக்கிய பெருமை நெடுந்தீவின் தமிழ்த்தூதர், தன்னிகரில்லா மொழி வல்லான், தமிழ் பக்தி மொழி என்றும் மற்றையவை வணிகமொழி என்றும் உலகத்தோருக்கு எடுத்தியம்பிய சான்றோன் தவத்திரு தனிநாயக அடிகள் பிறந்த ஊர் நெடுந்தீவு என்பதையிட்டு நெடுந்தீவு வாழ் மக்கள் அனைவரும் பெருமைப்படலாம். தமிழுக்கு புதிய சொற்களைத் தந்த தமிழ் வள்ளல் ஊருக்கு அறிவு வெளிச்சம் கொடுத்த அருட்பெருஞ்சோதி.

நெடுந்தீவின் வரலாறு குறித்த தகவல்களை செவிவழிக்கதைகளாகவே கூடுதலாக அறிய முடிகின்றது. எனினும் செழுமையும், பெருமையும் நிறைந்த வரலாறு அதற்கு என்பதே வெள்ளிடைமலை.

இக்கட்டுரையை எழுத எனக்கு ஊக்கமளித்து, உந்து சக்தியாக விருந்த எங்கள் அன்பு மகள் அக்சயா (அசி) அவர்களுக்கு எனது அன்பு நன்றி.

இன்னும் நான் சொல்லிட ஆயிரம் நாவும் போதாது நெடுந்தீவுத் தாயே! சுகந்த நெடுந்தீவு சொர்க்கந்தானே!

*அம்பலவாணர். நரேந்திரன்*

# தாயகம்

ஈழத்தின் தனிப் பெருந்தீவு நெடுந்தீவு. இத்தீவில் தான் எனது அம்மா அப்பா பிறந்து வளர்ந்த கல்வி கற்ற பின்னர் வெளிநாடு வந்துள்ளார்கள். இந்த அழகிய தீவிற்கு நானும் பெற்றோர்களுடன் விடுமுறையில் சென்றிருந்தேன். அங்கு உறவினர்களோடு தங்கியிருந்து அந்தத் தீவின் அழகினைக்கண்டு மகிழ்ந்தேன். அழகிய கடற்கரைகளும் பழமையான கோட்டைகளும் கோயில்கள் பள்ளிக் கூடங்கள் மற்றும் எனது அம்மா பிறந்த மருத்துவ மனைவியினையும் சென்று பார்த்தேன்.



நான் ஹொலண்டில் பிறந்ததால் அங்கு Delft என்ற ஒரு நகரம் இருப்பதை அறிந்திருக்கிறேன். எனவே அம்மாவிடம் ஏன் Delft என அழைக்கிறார்கள் என்று கேட்டேன். அப்போது அம்மா சொன்னார், ஒல்லாந்தர்களுடைய ஆட்சியில் இலங்கைத் தீவு இருந்தபோது அவர்களால் தான் இந்தப் பெயர் நெடுந்தீவுக்குச் சூட்டப்பட்டது என்று. அதைக்கேட்டு நான் ஆச்சரியமடைந்தேன்.

நெடுந்தீவில் உள்ள கோட்டைகள், குதிரைகள், கல்வேலிகள், பனைமரங்கள் எல்லாம் எனக்கு நன்றாகப் பிடித்திருந்தது. அங்குள்ள உணவு வகைகளும் மிகவும் சுவையாக இருந்தது. நிறைவாக தீவிலிருந்து படகில் வரும் வரை இயற்கை அழகை நிழற்படம் எடுத்துக்கொண்டு வந்தேன். எனது வாழ்நாளில் மறக்க முடியாத விடுமுறையாக நெடுந்தீவுப் பயணம் இருந்தது.

*நிலானி பத்மநாதன்.*
*ஹொலண்ட்*

## Finding the Divine Wisdom of Our Eternal-Self in Silence.

My dear friends, daughters and sons,
Firstly, I will briefly write few lines about my spiritual search for G-d. I come from a Christian religious background. I had spent the last ten years intensely studying religious and spiritual wisdom of all world religions. Through my spiritual contemplative and meditative practices I have experienced the Divine Compassion and Wisdom in my spirit. G-d has become my guiding Spirit to my knowledge granting me with eternal divine messages and visions. Here, I am quoting from the Bible, "I do make myself known to him in a vision; I do speak with him in a dream" [Numbers 12:6]. By knowing the sacred wisdom from other religious traditions, I begin to understand the sacred esoteric, mystical wisdom of the Bible. Here in my *Ashram*, at my Spiritual Centre, we can learn the esoteric mystical wisdom of the sacred scriptures and practice silent contemplative meditations.



### Our deepest questions and answers

I write 'G-d', without an 'o' in the middle, because G-d is eternal, infinitely present in the whole of the Universe, and beyond the Universe, yet He is also intimately present within us in our *Atman*. We perceive this G-d as Father, Mother and Beloved. Many times in our lives we feel distanced from G-d, and search for G-d elsewhere. Many times we ask questions like, whether our G-d is far away from us, present 'elsewhere' in heaven? Does He truly know our sufferings and hear our prayers? How would we experience G-d who is infinitely present throughout the creation in our Silence within our *Atman*? How would we define this G-d? How did our *rishis*, saints and sages experience G-d in silence? Here, I will be briefly answering to these questions according to Christian-Hindu understanding of G-d.

### Understanding the Hindu Divine Wisdom

In Hinduism G-d is understood as the Supreme Spirit, the Brahma, the Absolute Reality, the Eternal One present everywhere, present in everything and sustains the Universe. We also name this Universal Spirit, the cosmic consciousness as Krishna. Krishna represents Supreme Being,

the Father of the Universe. The whole cosmos, the Universe is His *lila*, a divine play of Supreme love and eternal Wisdom, and this creation is His Holy Sanctuary. Krishna is regarded as the symbol of divine Love and eternal Wisdom that pervades the whole creation and at the same time seated in the heart of every being.

According to Hindu tradition, our divine *Atman* is the abode of the divine Supreme Spirit, the Brahma. Here, I quote from the Upanishads: "In the center of the castle of Brahman, our own body, there is a small shrine in the form of lotus-flower, and within can be found a small space. We should find who dwells there, and we should want to know him. The little space within the heart is as great as this vast Universe. The heavens and the earth are there, and the sun, and the moon, and the stars; fire and lightening and winds are there; and all that now is and all that is not: for the whole Universe in him and he dwells within our heart." Now, we understand the formless nature of our *Atman*. We know that our soul, our life in its essential nature is divine. This is why Jesus said that the kingdom of heaven is within us. Which means the divine Wisdom present throughout the whole Universe is also present within our soul/*Atman*.

In returning our pure love to G-d, humanity and creation, our divine *Atman* reflects the divine qualities of Brahman, and attains the fullness of the Supreme Spirit. So, the way to Brahman is through our divine nature of our *Atman*. This is why when two *Sanniasies* great each other, they say, *OM Narayana*, this is because the *Atman* has attained the oneness with Brahman; and thus, *Atman* and Brahman are One. Similarly, *Sat-cit-ananda* is also the expression of the nature of Brahman.

## Understanding the Christian Divine Wisdom

In Christianity, G-d is perceived as the heavenly Father, Yahweh – 'the Great I am', as the Source of all creation. G-d as Spirit and Truth is present and alive throughout the Universe, in every particle throughout the creation, and simultaneously present in our soul as life and being; therefore G-d is never absent, never distant, always with us dwells in the inmost recesses of our hearts. Jesus the Christ is the Eternal Wisdom and Love of the Father. Jesus in his experience of oneness with the Father says My Father and I are One. Christ is the very nature of Jesus. Similarly, we too can experience G-d as Christ in our divine soul, because our soul and mind is the divine self of Christ. We too can become the incarnation of Christ as our true Self, and as the very expression of Christ. Being in

Christ means that we imitate the nature of Jesus. Our personal human nature must be adapted to the person of Jesus. We must imitate the life of Jesus, just as Jesus lived. The Eternal Word, the Christ was born, so that we may live as Jesus, as the divine Man. Many Christian saints have lived by imitating the human nature of Jesus. So, we too can live a holy life as Jesus lived. Our spiritual journey in G-d is to relate our mind with our divine eternal Self/*Atman*. And this is our destiny, because we have been created in the image of God, we are destined to experience the eternal life in this present moment, in the Here and Now.

To experience the eternal life in the present moment, we have to prepare ourselves to be in Silence. Silence is the very presence of G-d. We do not have to retire ourselves to the mountain, to the cave, or to a monastery to be in silence. By living our ordinary life in *bakhti*, devoting our moments to the presence of G-d in our thoughts and deeds, we would be able to attain supreme union with the Divine.

## A day for silent meditation and *maunam*

Initially, we can begin with a day for Silence, a day for *maunam*. All we have to do is to quieten our chattering and wandering mind with sacred readings, such as from the holy Bible, holy Bhagavad Gita - song of G-d, holy Upanishads and other sacred books. We have known that our mind is interconnected with our divine *Atman*. Remember! We have been created in the image of G-d. This image of G-d is our divine Self that is intelligent and holy. So, through learning and meditating on these sacred scriptures, we would be able to hear, listen, to the 'subtle sound' that is inherent within the letters of these sacred readings; so that we would be able to eliminate the cloud of ignorance, the selfish desires and passions that holds us in darkness in pain and suffering. During this moment, the divine Spirit or *shakti* that has been inactive at the centre of our being becomes awakened and transforms our thoughts; and we become a renewed person, resurrected in the Presence of G-d. Being raised in the presence of G-d, our Light, our divine Self, shines forth eternally expressing the divine Wisdom and Compassion to our loved ones, to our neighbours, to all humanity and creation. This is the highest prayer of all.

Now, we understand the kingdom of God is within us and among us, because our divine soul and mind has transformed as the 'holy city' of G-d, as the city of Brahman. In this realisation, we experience the eternal solidarity with the Supreme Spirit of the Universe, with every living being in

the whole creation. This experience is the 'eternal life' in the present moment of our life time.

## What do we really experience in the Presence of Divine Silence?

Earlier I have mentioned about the 'subtle sound,' inherent in the sacred words of those holy scriptures, that were written by holy mystics, and *rishis*. This 'subtle sound' is heard in the stillness of our thoughts; "Be still and know that 'I am' G-d" [Psalm 46:10]. It is the Sound that vibrates as the divine consciousness throughout the Universe, and Brahman is this pure consciousness. According to Christian tradition this 'subtle sound' is the Word, the Christ, very expression of the Father that holds the Universe together. According to Hindu tradition, it is the Word, the Wisdom of Brahman is the *AUM, OM*.

Now we understand that this 'subtle sound' is always present in our divine Self, in our *Atman*. To enter into the interior silence, first of all, we have to silence our tongue. Secondly, we have to silence our unwanted thoughts and desires. Then, without much thought we must gradually learn and listen to the interior wisdom, the esoteric wisdom of the sacred teachings. And finally, be attentive in the Presence of Silence to the divine Spirit that is present in the whole Universe will descend into our inner consciousness. Here, G-d will speak to you. He will anoint you with secrets of Divine Wisdom. Surrender yourself fully in this divine Presence, because you are in the holy of holies, in the Holy Temple, and it is the place where you become One with the Supreme Spirit. In experiencing this holy presence, we ourselves become the Temple of the living G-d. We become fully restored from physical pains and mental pains. We experience the wholeness in our body, mind and soul. In this wholeness, we feel that all our prayers are answered. Here, we see G-d is more intimately present in our true Self and we share this divine compassionate nature with all people, all nations and all creation. Every person is destined to attain this divine Perfection.

In our divine Perfection, Our ears should be turned to hear the good...Our mouth should produce nothing but good...Speak positively, always with benevolent words...Your face should always be shining...Welcome each person with a friendly countenance...The light of your face should never change. Whoever looks at you will find only joy and friendly expression. Nothing should disturb you!

Finally, I wish to share with you few words of our saints.
Swami Vivekananda says:
"Feel that you are pure, perfect, all-knowing, eternal, free, Bhraman.
Feel that you are absolute consciousness and the infinite, unchanging existence. Every part of your body should powerfully vibrate with these ideas. This feeling should be kept all day long.
Meditate this in the morning, midday and evening."
Prayer of Rabindranath Tagore:
"Life of my life, I shall ever try to keep my body pure, knowing that Your living touch is upon all my limbs.
I shall ever try to keep all untruths from my thoughts, knowing that You are that truth which has kindled the light of reason in my mind.
I shall ever try to drive all evils away from my heart and keep my love in flower, knowing that You have Your seat in the innermost shrine of my heart.
It shall be my endeavour to reveal You in my actions, knowing it is Your power that gives me strength to act."
Meister Eckhart says:
"The eye with which I see G-d is the same with which G-d sees me. My eye and G-d's eye is the one eye, and one sight, and one knowledge, and one love.
Now rejoice, all ye powers of my soul, that you are so united with G-d that no one may separate you from HIM."
You are all welcome for spiritual guidance. There is no conversion. You will always experience the presence of G-d!

Theiveega- Anbu-Jnana Ashram
Divine Wisdom and Compassion Spiritual Center
19, Plowman way, Chadwell Heath
RM8 1YF, United Kingdom
Tel No: 0208 5906252 | e-mail: anpu10@hotmail.co.uk

Spiritual director: Mrs Anparasy Charles Arulanatham [BA in Theology, University of London, MA in Abrahamic Religions – Judaism, Islam and Christianity, University of London] I have written thesis on Sankara's Vedantic Philosophy and Christian mystical spirituality. I am also pursuing a PhD research on mystical wisdom and spirituality of the world religions.

# எமது இதயபூமி!



பசுத்தீவு, பால்தீவு, மூலிகைத்தீவு கற்பகத்தீவு, டெல்வ்ற் (DELFT) என்னும் பல பெயர்களால் அழைக்கப்படுவதும் புலம் பெயர்ந்து வாழும் எம் உடன் பிறப்புக்களாகிய எல்லோரினதும் இதயத்தில் நீங்காத நினைவில் உள்ளதும் எமது நெடுந்தீவே. இத் தீவக மக்கள் சோழப் பேரரசின் பிரதானிகளான தனிநாயக முதலி கந்தப்ப முதலி ஆகியோரின் வழித்தோன்றல்கள் ஆவார்கள்.

எம் தீவானது ஒரு வரண்ட பிரதேசமாக இயற்கை அன்னையால் வஞ்சிக்கப் பட்ட இடமாக இருந்தும் எமது மூதாதையரின் அயராத உழைப்பினால் நன்னீர் உள்ள இடங்களில் கல்லைக் கிண்டி, மண் கொண்டு வந்து நிரப்பி, அவ்விடங்களில் பல வகையான தோட்டப் பயிர்களையும் நன்னீர் இல்லாத மண் உள்ள இடங்களில் பனை தென்னை போன்ற பயன்தரு விருட்ச சோலைகளை உண்டாக்கியும் நாட்டை வளப்படுத்தியதோடு தமது உணவுத் தேவையிலும் ஓரளவு தன்னிறைவு கண்டனர்.

தோட்டம் அமைக்கும் போது கிண்டி எடுத்த கற்கள் அதிகமாக இருந்ததால் அவற்றை பயனுள்ள உப பொருளாக்க நினைத்த எம் மூதாதையர் அவற்றை தோட்டங்களுக்கு வேலி போட உபயோகித்தார்கள். இவ்யுத்தி காலப் போக்கில் நெடுந்தீவு முழுவதும் கையாளப்படலாயிற்று. இன்று அவ்வகைக் கல்வேலி இலங்கையின் வேறெந்தப் பகுதிகளிலோ வேறு உலக நாடுகளிலோ கையாளப் படுவதாகத் தெரியவில்லை. மேலும் இக்கல்வேலிக்கு பகிர் என்னும் பல பொருள் கொண்ட ஒரு பெயரையும் எம் முன்னோர் சூட்டினர். இச்சொல் எம்மவர்களின் பண்பையும் குணாதிசயங்களையும் எடுத்துக் கூறும் விசேடம் கொண்டதாகவும் விளங்குகின்றது. அதாவது உணவைப் பகிர்வது, உதவியைப் பகிர்வது, அன்பைப் பகிர்வது அறிவைப் பகிர்வது பங்கான காணிகளில் உள்ள நிலத்தைப் பகிர்வது, போன்ற மகிமையானதும் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துவதுமான ஒரு சொல்லாகவும் இருக்கின்றது.

எப்படி எமக்குள்ளே நாம் பெருமை பேசிக் கொண்டிருந்தாலும் யாழ்ப்பாண பெருநில மக்களின் வாழ்க்கைத் தரத்தோடு பார்க்கும் போது கல்வி கடல் பிராயாணம் குடி தண்ணீர் போன்ற அடிப்படைத் தேவைகளில் பின்னடைந்தவர்களாகவே உள்ளோம். இந் நிலையில் 1955 – 1975 ஆம் ஆண்டு காலத்தில் கொழும்பில் வேலை பார்த்த எம் தீவக இளைஞர்கள் இத் தேவைகளை நிவர்த்தி செய்யும் நோக்கோடு நெடுந்தீவு பொருளாதார அபிவிருத்தி சங்கம் எனும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து செயல்பட்டார்கள். இந்த ஸ்தாபனத்தின் முதல் நடவடிக்கை அக்கால பாராளுமன்ற உறுப்பிரனான அமரர் வி. நவரத்தினத்தின் ஒத்துழைப்புடன் குறிகட்டுவன் இறங்குதுறையை நிறுவி ஊர்காவற் துறையில் இருந்து மூன்று மணித்தியாலமாக இருந்த கடற்பிரயாணத்தை 45 நிமிடங்களாக ஆக்கினர். அத்துடன் அரசாங்கத்தைத் தொடர்ந்து வற்புறுத்தியதின் பயனாக அலையரசி மோட்டார் படகையும் சேவையில் அமர்த்தினர்.

அடுத்த வேலையாக நெடுந்தீவு பொதுச்சேவை கூட்டுறவு சங்கம் ஒன்றை நிறுவினார்கள். அக்காலத்தில் வெங்காயம் சந்தைப் படுத்த தேவையான வெங்காயக் கூட்டு உற்பத்தியை மறைந்த மகா வித்தியாலய அதிபர் எட்வேட் நவரத்தினசிங்கம் அறிமுகப்படுத்தினார். இக்கூடு யாழ்ப்பணத்தில் மூன்றாரைச் சதத்துக்கு விற்கப்பட்ட போதும் உள்ளூர் வியாபாரிகள் உற்பத்தியாளர்களிடம் இருந்து 2 சதத்திற்கு வாங்கி 3 சதத்திற்கு விற்கும் அநியாயத்தை பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கம் கண்ணுற்றது. உடனே தீவு முழுவதும் கொள்வனவு நிலையங்களை நிறுவி 3 சதத்திற்கு மக்களிடமிருந்து கூடுகளை வாங்கினார்கள். முதலில் ஊரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கூடுகளை ஏற்றி இறக்கும் செலவை அரைச் சதம் ஈடு செய்யுமா என யோசித்த பொழுது அவ்வருடக் கணக்கை முடித்தபோது இந்நடவடிக்கையால் சங்கம் 65 000 ருபாய் இலாபம் அடைந்ததைக் கண்டு எல்லோரும் ஆச்சரியம் அடைந்தோம். ஒரு சதம் கூடப்பெற்ற பொது மக்களின் கைகளில் 1,30,000 ருபாய் சேர்ந்ததைக் கண்டு பேருவகை அடைந்தார்கள்.

அடுத்த நடவடக்கையாக தீவுப்பகுதி ஐக்கிய மோட்டார் படகுச் சங்கத்தால் ஒப்பந்த அடிப்படையில் நடாத்தப்பட்ட நெடுந்தீவு மோட்டார் படகுக் குத்தகையை மிகுந்த முறைப்பாட்டு நடவடிக்கையால் பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கம் கைப்பற்றியது. இதன் பயனாக தனியார் படகொன்றையும் சேவைக்கு அமர்த்தி நெடுந்தீவில் இருந்து ஒரு படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் எம் மக்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு நாள் தங்கி தம் வேலைகளை பார்க்க வேண்டிய கஷ்ட நிலை தவிர்க்கப்பட்டது.

அக்காலத்தில் நெடுந்தீவுப்பண்டக சாலைக்கு உணவுக்கட்டுப்பாட்டு முறையில் வழங்கப்பட்ட அரிசி கோதுமை மா, சீனி, புடவை போன்ற பொருட்களை யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வரும் குத்தகையும் வெளியார் கையில் இருந்தது. இவர்கள் தோணிகளில் பொருட்களைக் கொண்டு வந்ததால் காற்றுக் காலங்களில் உணவுப் பொருட்கள் தடைப்படுவதால் எம் மக்கள் பட்டினி நிலைக்கு தள்ளப்பட்ட காலமும் இருந்தது.

இந்நிலையில் இச்சேவையையும் பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கம் கைப்பற்றியது. நூறு மூட்டை நிறையை இழுத்துவரக் கூடிய ஒரு வள்ளத்தையும் கட்டுவித்து அதன் நீள அகல பாரம் இழுக்கும் சக்தி ஆகியவற்றுக்கு ஏற்ப ஒரு Lister Engine ஐயும் நேரடியாக இங்கிலாந்திலிருந்து இறக்குவித்து இச்சேவையைத் திறம்பட நடத்தினார்கள். நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தை பின் நடாத்தியவர்கள் நெடுந்தீவு பொருளாதார அபிவிருத்தி சங்கத்தினரே என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

இவ்விரு சங்கங்களும் சேவையாற்றிய காலம் நெடுந்தீவு சரித்திரத்தின் ஒரு பொற்காலம் எனக் கருதினால் அது மிகையாகாது. இன்று இவ்விரு சங்கங்களும் சேவை செய்கின்றனவா அவற்றுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இந் நாட்டுக்கு வந்த பின் எனக்கு எதுவும் தெரியவில்லை.

புலம் பெயர்ந்த நாடுகளில் எம் தீவகத்தார் சீரும் சிறப்புமாக வாழ்வதை நான் கண்ணுற்று அளவிலா மகிழ்ச்சி அடைகின்றேன். இவர்கள் மனதில் பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற

உணர்ச்சி வரச் செய்ய வேண்டும். இவ்வான்றோர் கூற்றுக்கு அணிசேர்க்கும் வகையில் நெடுந்தீவு பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் கனடா நம் தீவில் ஆற்றி வரும் சேவைகள் என்னை வியப்படையச் செய்கின்றது. இவர்கள் ஊர்ப்பாடசாலையின் அதிபர்களையும் பொதுநல ஆர்வலர்களையும் இணைத்து ஒரு கிளைச்சங்கத்தை நெடுந்தீவில் நிறுவி அவர்களின் ஆலோசனையுடன் மாணவர்களின் கல்விக்கும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மாணவர்களுக்கும் முதியோருக்கும் ஆற்றி வரும் நிதியுதவியும் என்னை வியப்படைய வைக்கிறது.

ஆனால் பிரித்தானியாவில் இயங்கிய, இயங்கிவரும் எம் நாட்டுச் சங்கங்கள் எனக்குத் தெரிந்தவரை குறிப்பிடப்படக்கூடிய சேவை எதனையும் நெடுந்தீவு மக்களுக்கோ நாட்டுக்கோ இதுவரை செய்ததாக எனக்கு தெரியவில்லை. இப்பரிதாப நிலைக்கு எம்மவர் மத்தியில் நிலவி வரும் போட்டி பூசல்களும் நான் பெரிது நீ பெரிது எனும் மனப்பான்மையும்தான் காரணம் என நான் கருதுகின்றேன். ஏனெனில் இந்நிலைக்கு பொருளாதாரம் காரணமாக இருக்க முடியாது. ஊரில் உள்ள உடன் பிறப்புக்களோடு ஒப்பிடும் போது நாங்கள் ஒவ்வொருவரும் செல்வந்தரே என்றால் இது மிகையாகாது.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு எனும் முதுமொழிக்கு அமைய நாம் எல்லோரும் நெடுந்தீவு ஒன்றியத்துடன் தோளோடு தோள் நின்று நாட்டில் இதுவரை தீர்க்கப்படாததாகவிருக்கும் குடிதண்ணீர் குறைபாட்டையாவது தீர்க்க முன் வருவோம். இதற்கு கடல் நீரை குடி நீராக்குவதே சிறந்த முறையாகும் (Desalination) என நான் கருதுகின்றேன். இது ஒரு பெரும் பணச் செலவான திட்டம் என நாம் நினைக்கலாம். மனம் வைத்து ஒன்று சேர்ந்தால் முடியாது என ஒன்றும் இருக்க முடியாது என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

நமது ஒன்றியம் வளமுடன் வாழ்க!

*S.R. பசுபதி*
*(இளைப்பாறிய கணக்காளர்)*

# நிமிர்ந்து நிற்போம்



ஆழியிலே கயல் துள்ளும்
கலங்கள் அள்ளும்
அலைக் காற்றில் கற்பகத்தாய்
அகம் குளிரும்
ஓடிவந்து வெடியரசன் வீரம் தன்னை
ஒலியெழுப்பிப் பரிகளெல்லாம் வியந்து செல்லும்
நாடிவரும் மனிதரெலாம்
கோட்டை... கொத்தளங்கள்....
நீண்டதொரு ஆல் பெருக்கு மரங்களோடு
கூடி நிற்கும் மூலிகைகள் தரும் சுகத்தில்
குதூகலித்தே வரலாற்றுப்பாடம் மெல்லும்...
ஈழத்து அரசியலின் முதற் பெண்ணாக
இணையில்லாத் தாயவளைத் தந்து பாரதியின்
பார் வியக்கும் கனவை
நனவாக்கி வைத்துப்
பாருக்கே புகழ் சேர்த்தாள்
நெடுந்தீவு அன்னை!
ஊரெங்கும் கலை வளர்க்கும் ஆலயங்கள்
உயர்ந்தங்கே அணிகலனாய் கல்விச்சாலை
நல் நீருக்குத் தீப்பாறைக் கிணறு என்று
நமக்கெல்லாம் பெருமை தந்த
நம் தாய் வீடு...
வந்தோரை வரவேற்றும்
பண்பில் உருவோர் - தமிழ்
வாழ்க்கைக்குத் தமை ஈய்ந்த
அறிஞர் கவிஞர்...
செந்தமிழே மூச்சாகித்தேச மெங்கும்
தமிழ் மணக்க தனைத்தந்த தனிநாயகனை...
சிந்தையையெல்லாம் நெடுந்தீவாய் நாகேந்திரனாய்ச்
சிறந்திடவே நெடுந்தீ
வான் விரிந்த ஊரு!
ஊர்பெருமை சிறக்கவென
வாழ்வோம் - மண்ணில்
உருவாகும் விதேசி கலாச்சாரம்
கொள்வோம்!
நீர் பெருக்கும் வரப்புயரும் செந்நெல் மீண்டும்
நிறைகின்ற களஞ்சியத்திற்காய் உழைப்போம்!
வியர்வை சிந்தும் உறுதியுடன்
வீழ்ந்து போன
வீர வரலாறெல்லாம் மீள்வோம்
யாதுமில்லை நெடுந்தீவுக்கு நிகராய்
யாமார்க்கும் குடியல்வோம்
நிமிர்ந்து நிற்போம்.....

*-நெடுந்தீவு லக்ஸ்மன்*

# நெடுந்தீவின் இயற்கை வளங்களைப் பேணுதல்

எமது நெடுந்தீவைப் பொறுத்த மட்டில் இயற்கையாக பல வளங்கள் இருப்பதைக் காணலாம். இவற்றை மேலும் வளப்படுத்த நாம் சில விடயங்களை கவனத்தில் கொள்ளவேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

அந்த வகையில் மழை நீர் கடலுக்குச் சென்று விடாமல் சேமித்து நீர்ப்பாசனத்தைக் கொண்ட பிரதேசமாக மாற்றலாம் என்பது கண்டறியப்பட்டது. நெடுந்தீவில் இயற்கையாக பல குளங்களும் பரந்த நிலப்பரப்பும் உள்ளதால் அவற்றை ஆழமாக்கியும் (நிலத்தடி நீர் வரை ஆழமாக்காமல்) சில குளங்களை ஒன்றிணைத்தும் ஒரு நீர்த்தேக்கத்தை உருவாக்கலாம் என சில வருடங்களுக்கு முன்பு ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது.

நெடுந்தீவில் சுமார் 22 இடங்களால் மழை நீர் கடலுக்கு சென்று விடுகின்றது. இவற்றுள் சுமார் 11 இடங்கள் கூடுதலாகவும் சுமார் 3, 4 இடங்கள் அதிகக் கூடுதலாகவும் சென்று விடுகின்றன. அத்துடன் நிலத்துக் கீழாகவும் நீர் செல்வதைக் காணலாம். நீண்ட காலத்திற்கு ஏற்ப திட்டமிட்டுச் செயற்படாததால் சில அணைகள் கட்டியும், அவை போதிய வலுவின்மையாலும், பாதுகாப்பின்மையாலும் செயல் இழந்து போய் உள்ளதைக் காணலாம்.

எமது தீவில் மழை வெள்ளத்தின் பாதிப்பு மிகவும் குறைவாகத்தான் காணப்படுகிறது. இவை ஒரு சில பள்ள நிலங்களில் மட்டும் பாதிப்பு ஏற்படும் அவை சுமார் 3, 4 நாட்களுக்கு மட்டும்தான் காணப்படும். இவை நீண்ட கால வளத்துக்கும் அபிவிருத்திக்கும் எடுத்துக் கொள்ள முடியாது.

தற்போது மழை வீழ்ச்சியின் அளவு மிகவும் குறைவாகத்தான் கிடைக்கின்றது. முன்பு மக்களுக்கு குடிநீர் கிணறுகள் தீவின் எல்லா இடங்களிலும் காணப்பட்டன. இன்று கிழக்கு பகுதிகளிலும் மணல் கிணற்றடிப் பகுதியிலும் மேற்கில் பல இடங்களிலும் நன்னீர் மாற்றம் அடைந்துள்ளதை யாவரும் அறிவீர்கள்.

மழைநீரை சேமித்து நீர் தேக்கத்தை உருவாக்கினால் நெல், சிறுதானியங்கள், உபஉணவுப் பயிர்கள், மந்தை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, குறவை மீன் உற்பத்தி, இறால் உற்பத்தி, குடிநீர் வசதி, பனை தென்னை மரம் வளர்ப்பு ஊக்குவிப்பு இவற்றுடன் காட்டுவளம் என பல பொருளாதர வளங்களை மேம்படுத்தலாம் என்றும் கண்டறியப்பட்டது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட சமாதான ஒப்பந்த காலத்தில் மேற்கூறிய விடயங்கள் எல்லாம் கவனத்தில் கொண்டு வரப்பட்டன. 2004 ஆம் ஆண்டு மட்டில் விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் வேலணைப் பிரதேசத்தில் அனைத்து தீவக அபிவிருத்தி தொடர்பான அரச உயர் நிர்வாக அதிகாரிகள், அரச ஊழியர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூகத் தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்ட ஒன்றுகூடல் நடைபெற்றது. அங்கு நெடுந்தீவின் சார்பாக

கலந்து கொண்ட முன்னோடிகளால் பல முக்கியமான விடயங்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் இரண்டு விடயங்கள் உடனடியாக மேற்கொள்வெதன முடிவு செய்யப்பட்டது.

ஒன்று கடல் போக்குவரத்துக்கு 250 , 300 மக்கள் செல்லக்கூடிய படகு ஒன்றை புதிதாக உருவாக்குவது என்றும், மற்றது மழை நீரை சேமித்து நீர்த் தேக்கம் அமைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நீர் தேக்கத்துக்கு நெடுந்தீவை ஆய்வு செய்து அறிக்கையும் வரைபடமும் எடுப்பதற்கு 6 பேர் கொண்ட குழு அமைத்தார்கள். இதில் அரச நிர்வாக அதிகாரியும், விடுதலைப்புலி உறுப்பினரும் அரச ஊழியர்களும் நெடுந்தீவு முன்னோடிகளும் இடம் பெற்றதோடு 3 பொறியியலாளர்களையும் நியமித்து ஆய்வு செய்து அறிக்கை கொடுத்தார்கள். ஆய்வானது மழைக் காலத்தில் எவ்வாறு மழைநீர் கடலுக்குள் செல்கிறது என்பதை நேரடியாகப் பார்வையிட்டதோடு இத்திட்டத்தில் முதலாவது கூடுதலாக மழை நீர் கடலுக்குச் செல்லும் பிரதேசத்திலுள்ள சிறு குளங்கள், நில அமைப்புகள், கடல் மட்டத்திலிருந்து உயரமான நிலப்பரப்பு இவற்றால் எற்படும் நன்மைகளோடு பாதிப்புக்களையும் எவ்வாறு தவிர்ப்பது என்பதையும் விபரமாக அறிக்கை மூலம் சமர்ப்பித்து முதலில் ஒரு பகுதியில் ஒரு நீர்த்தேக்கத்தை உருவாக்க பொறியியலாளர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்விபர அறிக்கை யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டதாக அறியப்பட்டது. அவர்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியின் மூலமும் வேறு பொது நிறுவனங்களின் நிதியின் மூலமும் விடுதலைப் புலிகளின் நிதிப் பங்களிப்பு மூலமும் புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள நெடுந்தீவு ஒன்றியங்களின் நிதி மூலமும் இத்திட்டம் நிறைவேற்றுவதாக முடிவு செய்யப்பட்டது.

ஆனால் துரதிஷ்டவசமாக நாட்டில் ஏற்பட்ட நிலைமைகளால் இவ்விரண்டு திட்டங்களும் செயலிழந்து விட்டன. ஆனால் இன்றும் இத்திட்டத்தை நெடுந்தீவில் உள்ள முன்னோடிகளும், சமூகத் தொண்டர்களும், அரசியல் பேதங்களை மறந்து யாழ் மாவாட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் ஊக்குவிக்கலாம். அத்துடன் இங்கிலாந்தில் உள்ள நமது நெடுந்தீவு ஒன்றிய உறுப்பினர்கள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கிலாந்து வரும்போது அவர்களைச் சந்தித்து இவ்விடயத்தை எடுத்துக் கூறி, இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கோரிக்கை வைப்பதோடு எம்மாலான உதவிகளையும் செய்யலாம். அத்துடன் ஏனைய புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள நெடுந்தீவு ஒன்றியங்களுடன் தொடர்பு கொண்டு இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆலோசனையும் நிதியுதவியும் கோரலாம். இதற்கான வேலைப் பணிகளை நாம் உடனடியாக முன்னெடுப்பது சாலச் சிறந்ததாகும்.

தவறுகள் திருத்தபட வேண்டியவையே அன்றி விமர்சிக்கப் பட வேண்டியவை அல்ல!

*கார்த்திகேசு - சிவஞானம்.*
*(மண்டி வளவு), தம்பி உடையார் தோட்டம்.*
*நெடுந்தீவு - 01*

# பூர்வீக நெடுந்தீவு



கண்ணுக்கு கல்வேலி அழகு
கரைக்கு கரங்கரை விளக்கு அழகு
பார்வைக்கு பசுவும், பனையும், பனந்தறையும் அழகு
பாசத்துக்கு துள்ளிவரும் ஆட்டுக்குட்டியும்
வரவேற்பிற்கு வண்டினம் தவழும் பூக்கள் அழகு

எல்லாவற்றிற்கும் மேலான நாம் நெடுந்தீவில் பிறந்து அங்கு ஐந்து வயதில் எனது ஆரம்பப் பாடசாலைக்கு சென்று ஏழு வயதில் நான் அந்த பாடசாலையில் தொடர்ந்தும் பயில முடியவில்லை. ஏன் என்றால் எனது தந்தை வேலை இடமாற்றம் வன்னி மாவட்டத்தில் மல்லாவி எனும் கிராமத்தில் கிடைத்ததால் அங்கு சென்றோம். எனது தந்தை மல்லாவியிலுள்ள மருத்துவமனையில் கடமையாற்றினார். அங்குள்ள பாடசாலையில் தான் நான் எனது இரண்டாம் வகுப்பை ஆரம்பித்தேன்.

அங்குள்ள பாடசாலையில் எனது வகுப்பில் மொத்தம் இருபத்தெட்டு மாணவர்கள் இருந்தோம். அதிலும் என்னுடன் படித்த மாணவரின் ஐந்து பேர் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள். மிகவும் சந்தோஷமாக படிப்பை ஆரம்பித்தோம்.

நான் பாடசாலை விடுமுறை நாட்களின் மிகவும் சந்தோசமாக அம்மாவுடன் நெடுந்தீவு செல்வது உண்டு. நெடுந்தீவு எனக்கு மிகவும் பிடித்தது. நான் படிப்பை முடித்துவிட்டு வெளிநாடு வந்து விட்டேன். நான் நெதர்லாந்து (கொலண்ட்) என்ற இடத்தில் குடியுரிமை கேட்டேன். அங்கு என்னை விசாரணைக்கு அழைத்து சென்றபோது நீ எங்கே பிறந்தாய்?

நான் நெடுந்தீவில் (Delft) என்று கூறினேன். ஆவர்கள் மீண்டும் என்னை கேட்டார்கள் எங்கே, பிறந்தாய் மீண்டும் அதே பதிலைத் தான் கூறியுள்ளேன். மூன்றாவது முறையாக விசாரித்தபோது நான் தெளிவாக கூறியதால் அவர்கள் ஓ நாங்கள் ஆட்சிபுரிந்த நாடு என்று சந்தோசப்பட்டார்கள்.

ஐரோப்பிய நாட்டில் வாழ்ந்து வரும நான் எமது ஊர் நெடுந்தீவுக்காக ஒரு சங்கம் அமைக்கப்பட்டுள்ளது அந்த சங்கத்துடன் இணைந்து எம் ஊரில் முதியோர் இல்லம், சிறுவர் இல்லம், தையல்கலை வயோதிபருக்கான வாசிகசாலை, கோவில் திருத்தும் பணி என்றும் பல விஷயங்களுக்காக நெடுந்தீவு ஒன்றியத்தை ஐக்கிய இராட்சியத்தில் நடத்த வேண்டியவர்களாய் உள்ளோம்.

இதற்கு ஐரோப்பா நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு வந்து இதற்கான உதவிகளை செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
*வீரசிங்கம் பத்மசிங்கம் (இந்திரன்)*
*செயற்குழு உறுப்பினர்*
*நெடுந்தீவு ஒன்றியம் (ஐக்கிய ராச்சியம்)*

# நெடுந்தீவழகு



பகுறுளியாற்றுப் படுக்கையில்
எழிலுடன் நிமிர்ந்த தேசம்
பெருவளச் சோழனின் கொலுவினில்
திமிருடன் செழித்த தேசம்

நீலக் கடலும்
நெடுமணற் தரையும்
கயலும் வயலும்
கல்வேலி நிரலும்
பனையும் தினையும்
பாய்மரப் படகும்
ஆலும் வேம்பும்
அரசும் பூவரசும்
பாசனக் குளங்களும்
பசுவும் பரிகளும்
வெல்லைப் புல்வெளியும்
விளையும் பெருநிலமும்
எல்லையற்ற எழில் சேர்க்கும்
மூலிகைச் செடிகளின் வனப்பும்
மாவிலித்துறையின் அழகும்
மணற்தரைக் கேணியின் ஊற்றும்
நம் மனதையே கொள்ளை கொள்ளும்

வைகறைப் பொழுதினில்
கூவும் குயிலோசை
நெஞ்சை நிறைத்து நிற்கும்
தென்னங்கீற்றில் வந்து
தென்றல் தாலாட்டும்
தூக்கணாங் குருவிகள்
புல்வீடு கட்டும்
மூக்கணாங் கயிறோடு
காளைகள் ஓடும்
மாட்டு வண்டி மணியோசை
பாட்டுக்கட்டிச்சொல்லும்

நெழுவினித்தேரும்
அந்தோனியார் பேரும்
அடடா என்ன அழகு சேர்க்கும்
கல்விச் சாலையும்
கலங்கரை விளக்கும்
அள்ளிச் சொரியும்
அறிவொளி பரப்பும்
இயற்கையின் வனப்புக்கள்
அனைத்தையும் அள்ளி
குவித்திட்ட தீவு
இருக்கையில் ஒருமுறை
சென்று வாரும்
நெஞ்சம் நெகிழ்ந்து போகும்

*கே. வி. நந்தன்*
*செயற்குழு உறுப்பினர்,*
*நெடுந்தீவு ஒன்றியம், ஐக்கிய இராச்சியம்*

# குருதி கொப்பழித்த குமுதினி

ஆர்ப்பரித்து அலையெறியும் அந்த ஆழ்கடல் கூட நிசப்தமாகி அமைதியோடு உறங்கிய 15ம் நாள் வைகாசித் திங்கள் 1985 அன்று. எம்மூரவரும். அயலூரவருமாக 64 நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களையும் அவரவர் மனம்செறிந்த கனவுகளோடு காவிக் கொண்டு நெடுந்தீவிலிருந்து குறிக்கட்டுவான் நோக்கி எதிர்கொள்ள இருக்கும் இடரின் எந்தவித அறிகுறியமறியாது குமுதினி பயணப்பட்டது.

ஓடித்தப்பத் தரையுமின்றி. கூவியழைக்கக் குடிகளுமற்ற நிலை. எலிப்பொறியில் சிக்கிய எலிகளாய் ஆழ்கடலில் அகப்பட்ட எம்மவரை இனக்கொலைவெறியில் தொடர்ந்தும் ஊறித்திழைத்தவர்களான சிறிலங்காவின் கடற்படைக்காடையர் களாக சிலர் கூரியகத்தி பொல்லுகளோடு குமுதினிக்குள் உள் நுழைந்து குஞ்சு குருமன் இளையோர். முதியோர். ஆண்பெண் என்ற எந்த வேறுபாடுமில்லாது அடித்தும் குத்தியும் வெட்டியும் கோரத்தாண்டவமாடி கொன்றொழித்தும் காயப்படுத்தியும் மனிதப் பலியும். வதையும் செய்து கொண்டாடி மகிழ்ந்து குதூகலித்தனர்.

இவ் இன வெறியாட்டத்தின்போது எட்டே மாத வயதான பைந்தமிழ்ப்பிஞ்சு வயிற்றில் ஒன்பது கத்திக்குத்துக்குள்ளாகி உயிர் பிழைத்தும் வேறொரு அதே வயதுடைய இளம் தமிழ் குருத்து நெஞ்சில் மூன்று கத்திக்குத்துக் காயங்களுடன் சாவெய்திலும் காணப்பட்ட காட்சியானது மீதமுள்ளவர்களின் நெஞ்சைப்பதறவைத்த. உயிரையுருக்கிய சம்பவமாகும்.

இக்கொலையானது எல்லாப் பருவ வயதினர் அடங்கலாக 36 எம் தமிழ் உயிர்களைக் காவுகொண்டும் மீதமானவர்களை கடும் காயத்துள் ளாக்கியுமிருந்தது. குருதிக்குறியீடாக எம் ஊரவரின் வாழ்வத்தியாயத்துள் பொறித்தெழுதப்பட்டிருக்கும் என்றுமழியாப்பதிவாகி அச்சாகியுள்ளது. பூமிப்பரப்பின் பல பாகங்களில் பதியம் வைக்கப்பட்டிருக்கும் எமமூரவர்களின் வாழ்வியல் நகர்வோடு இப்பேரிடரானது தொடர்ந்தும் கலந்ததாகவா அல்லது விலகியதாகவா பயணிக்கிறது.

நீதியின் செங்கோல் பிறழ்ந்த வாழ்வியலை - மௌனத்தால் அனுமதிக்கும் வாழ்வு முறையாது அறநெறி செழித்தோங்கும் வாழ்வாக மனிதம் உயர்த்திச்சுட்டி நிற்கின்றது. மனிதக்குழுமத்தின் மீது தொடர்தாக்குதலில் ஈடுபடுபவர்களின் செயலையே இக்குழுமத்தினரும் வாழ்வாக்கி வாழ்கிறார்கள் என்று பொருள் கொள்தல் அறம் சார்ந்த வாழ்வில் தவறாகப்படாது.

அதாவது குறிப்பிட்ட தாக்குதல் பற்றி விசாரணை நடாத்த நெடுந்தீவைச் சேர்ந்தவர்களே வெளியில் நீதியினைக் கொண்டு வர முயற்சிகள் செய்தல் வேண்டும் என்பதே எனது அவாவாகும்.

*நெடுஊர் மகள். திருமதி கே. கலா.*
*தமிழகம். இந்தியா.*

# My sacred Journey to Mount Kailash



I, Miss Abbirhami Ratnarajah, express my sincere thanks to my yoga guru, Yogi Ram Sunthar, as with his blessings, I have had the great opportunity of making a sacred journey to Mount Kailash, Tibet, in August 2011.

Mount Kailash is part of the Himalayan mountain range and is 6714m (22,028 ft) above sea level. It is a place of holy significance to Hindus, as well as, Buddhists, Jains and followers of the indigenous Tibetan religion of Bön. People do not set foot onto the actual mountain, but walk around it, as it is said to be a natural Sivalingam. I went along with my parents and twenty-five people from our yoga group and the leader of the group, Yogi Ram Sunthar who said that I am probably the youngest person to successfully complete the journey around the mountain, which is fifty-two km in circumference. I was seventeen years old when I completed the Kailash Yatrai (Traditionally, people under the age of sixteen, should not travel to Mount Kailash).

In order to prepare for this treacherous journey, we had to prepare ourselves physically to endure the conditions of being at a high altitude. As I attended swimming and dance classes, this was enough exercise and preparation to endure the conditions of going into high mountainous areas.

My journey to Kailash started on 11th August 2011, when I stayed at my grandmother's house. Just before leaving to go to the airport on 13th August 2011, I watched a programme about a temple showing a special poosai and I was wondering where this type of poosai happens. To my surprise, when I arrived in Nepal, the very next day, we went to Pasupathinathar Temple and I saw the same poosai happening before my eyes! I was so shocked and amazed that I had a chance to see this in real life, after randomly seeing it on the television.

Eco-Trek is one of the leading trekking companies in Nepal and had planned out the journey. Helpers from the company helped us in many ways, for example, by providing us with food three times a day, giving us water, carrying our bags and helping us in any way possible. There was also a large truck with all of our belongings and sleeping bags which followed behind the seven 4x4 Toyota cars with all twenty-five of us in them. After obtaining the Chinese visa, we went to Tibet (now controlled by China). Eco-Trek looked after us from there on, until the end of the trip.

Our journey to Mount Kailash was as follows:
Day 1: Journey from Kathmandu, Nepal to the Friendship Bridge (Nepal – Tibet Border).
We were appointed with a driver and were grouped into groups of four. We were driven to Zhangmu and then to Nyalam (3750 M above sea level). We stayed overnight in a guesthouse.

Day 2: 'Rest day' in Nyalam (3750m) – a day to acclimatise.

Day 3: Drive to Saga (4450m). We stayed in Saga for a night to acclimatise.

Day 4: Drive to Paryang (4600m). Although I had altitude sickness and felt very weak, without my parents' help, I would not have been able to recover quick enough to continue on with the journey. As my mother is a medical doctor, her knowledge helped not only me, but helped the other group members as well. Two members in our group fell off of their horses and one group member had difficulty in breathing, due to low partial pressure of oxygen in the air, but despite this they carried on to finish the journey, as it was a sacred journey to all of us.

Day 5: Drive from Paryang to Lake Manasarovar –means 'charming the mind' in Thamizl (4558m). The circumference of Lake Manasarovar is 90km; its depth is 90m and has a total area of 320 square km. We stayed overnight in a clay guesthouse by the lake. It had no heating or lights, with no bathing facilities but only had an open-air toilet. Fortunately, we were provided with water from Lake Manasarovar, which was heated and we had a shower in a make-shift tent.

Day 6: Drive to Tarchen (Base Camp for the Holy Mount Kailash Pilgrimage).

Day 7: 28.08.2011 - First day of the Parikramam (going around Mount Kaillash): Trek to Dehara Puk (5000m). It is an 18km trail and takes almost seven hours to reach Dehara Puk. We stayed in a guesthouse right in front of the south face of Mount Kailash, which was a breath-taking view. It was the only ice-capped mountain top among the other surrounding mountains.

Day 8: 29.08.2011 - Hardest day of the Parikramam: We walked through the Dolma-La pass (18600ft), between two valleys. Whilst walking, we walked over a glacier. We arrived in Zuthul Puk in the late afternoon, where we stayed overnight. During my stay at that place, I had the chance of seeing the Milky Way, as the sky was so clear at night.

Day 9: 30.08.2011 - Last day of Parikramam: It was a 3-hour journey to Trangser Trangmer, where we were picked up by the drivers. That night was not an ordinary one, because after we carried out a yagam by Lake Manasarovar ,and as soon as we got into our tents, there was a thunderstorm: with heavy rain and lightning. When we got up the next morning, it was as if the thunderstorm never happened.

Day 10: Drive from Lake Manasarovar back to Saga (406km).

Day 11: Drive from Saga to Zhangmu (296km).

Day 12: Drive back to Kathmandu (150km).
After completing the journey around Mount Kailash, I had time to reflect. I saw nature's beauty up close in a remote and vast land. It was an amazing experience for me, as I was not surrounded by modern gadgets, such as phones and ipods, and the busy lifestyle of modern day life, but I was able to connect with my inner-self at a beautiful sacred place, Mount Kailash.

People who complete the journey are given the title 'Kailaimani', and I received a certificate to acknowledge the completion of the yatrai (pilgrimage). Many people in the Tamil community and Hindu traditionalists recognise those who have gone to Mount Kailash and I am grateful that I have gone there myself. It is an honour to have completed the yatrai, return home safely and earn the title "Kailaimani". I thank Yogi Ram Sunthar for giving me this opportunity.

# துறைமுகங்களில்

நெடுந்தீவுக்கும் யாழ் குடா நாட்டுக்குமான ஒரேயொரு வழித்தடம் கடற்போக்குவரத்தே. வேறு மார்க்கமற்ற நிலையில் மக்களுக்கான சிறந்த படகுச் சேகைள் வழங்கவும், துறைமுகங்களில் அவர்களுக்கு உகந்த நடைமுறைகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் அரசின் கடைமை. ஒரு சமயம் ஊர்காவற்றுறைக்கான நீண்ட நேர கடற்பயணத்தை மேற்கொண்டிருந்த நெடுந்தீவு மக்களின் கஷ்டங்களைக் குறைக்கும் வகையில் அமைக்கப்பட்டதே குறிகட்டுவான் துறைமுகப்பாலம். 1954ல் திறந்து வைக்கப்பட்ட இப்பாலத்தினூடாக நேரமும் தூரமும் குறைக்கப்பட்டு மக்கள் இடையூறுகளின்றி சுதந்திரமாகத் தமது பிரயாணத்தை மேற்கொள்ள வாய்ப்புக்கள் கிடைத்தது. நாட்டில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டு அதைத் தொடர்ந்து இடம் பெற்றதாக அரசியல் வாதிகள் சொல்லும் சமாதானம் A9 பாதை திறப்பு என்பவற்றில் குறிகட்டுவான் துறைமுகப்பகுதியில் காணப்படும் செயற்பாடுகள் நெடுந்தீவு மக்கள் தற்சமயம் சுதந்திரத்துடன் கூடிய கடற்போக்குவரத்தை மேற்கொள்வதில் உண்மை இல்லை என்பதை தெளிவுபடுத்துகிறது. நெடுந்தீவு குறிகட்டுவான் துறைமுகங்களில் இடம்பெறும் நடவடிக்கைகள் பயணிகளை வெறுப்படைய வைக்கின்றது. யுத்த காலத்தைவிட சமாதான காலம் என்று கூறப்படும் இன்றைய நாட்களில் இந்தப் போக்குவரத்தில் மக்கள் கூடுதலான நெருக்குவாரங்களுக்கு உள்ளாகின்றனர்.

நெடுந்தீவு மக்களுடன் பின்னிப்பிணைந்த கடல் போக்குவரத்தில் அனாவசிய மாக மூக்கை நுழைத்த கடற்படையினர் இந்தப் போக்கவரத்தை நிர்ணயிப்பதில் ஏகபோக உரிமையை எடுத்துள்ளனர். அவர்களது அனுமதி கிடைத்த பின்னரே மக்கள் படகில் ஏறவும் படகு புறப்படவும் முடியும். படையினரின் தலையீட்டால் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் எதுவுமே செய்யமுடியாதுள்ளனர். A9 வீதி திறக்கப்பட்டதும் அளவு கணக்கின்றி வரும் தென்பகுதி மக்களால் குறிகட்டுவான் நெடுந்தீவு துறைமுகங்களில் நெடுந்தீவு மக்கள் தமது பயணத்தைத் தொடர்வதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். தென்பகுதியில் இருந்து வரும் மக்கள் தமது இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் நெடுந்தீவுக்குச் செல்ல வேண்டிய பயணிகளைத் தாமதிக்க வைத்து தென்பகுதி மக்கள் நெடுந்தீவுக்குச் செல்வதாயின் முதலில் அவர்களை நெடுந்தீவிற்கான படகுகளில் ஏற்றி வசதியாக இருக்கைகளை வழங்கிவிட்டு அதன்பிற்பாடு நெடுந்தீவு மக்களை படகில் ஏற அனுமதிக்கிறார்கள். இதனால் உள்ளூரைச் சேர்ந்த முதியவர்கள் நோயாளர்கள் குழந்தைகள் பெரும் சிரமங்களை எதிர் கொள்வது தினசரி நடைமுறையாகி விட்டது. ஒரு பயணி தனது பயணத்திற்கான வாகனத்தில் ஏறுவதற்குப் படையினரின் உத்தரவை எதிர்பார்த்திருக்கும் செயற்பாடானது உலகில் குறிகட்டுவான் - நெடுந்துறைமுகங்களில் மட்டுமே காணக்கூடிய தொன்றாகும். இது இன முரண்பாடுகளில் அவர்களுக்குள்ள அதீத அக்கறையை புலப்படுத்துகிறது. போதாக்குறைக்கு நயினாதீவுக்குச் செல்லும் தென்பகுதி மக்கள் நெடுந்தீவுக்கான படகில் ஏறிக்கொள்வதுடன் படகு புறப்பட்ட சிறிது நேரத்தின் பின்னர் தாங்கள் நயினாதீவுக்குச் செல்ல

வேண்டும் எனக் கூறுவதால் அவர்களை மீண்டும் குறிகட்டுவான் துறை முகத்தில் இறக்கி விட வேண்டியுள்ளதால் மீண்டும் படகு திரும்ப வேண்டி யுள்ளது. நெடுந்தீவுக்குச் செல்பவர்களையும் நயினாதீவிற்குச் செல்பவர்களையும் படகில் ஏற்றி விடுபவர்கள் படையினரே. ஆண்டாண்டு காலமாக போக்குவரத்துச் செய்யும் எங்களுக்கு இப்படி ஒரு வேதனையா என்று மனதுள் குமுறுகின்றனர் மக்கள். வெளிப்படையாக எதையும் கூற முடியாத நிலை பரிதாபத்திற்குரியவர்களாக எம்மவர்கள் நாட்டில் சமாதானம் ஏற்பட்டுள்ளது. மக்கள் எங்கும் சுதந்திரமாக செல்ல முடியும் என அரசு மட்டத்தில் கூறப்பட்டாலும் தமது பயணத்தில் அவர்கள் அனுபவிக்கும் சிரமங்கள் அது அந்த மக்களுக்கு மட்டுமே புரிந்தது. அரசியல் பிரமுகர்களும் அதிகாரிகளும் நெடுந்தீவிற்குக் கடற்படைப் படகுகளில் பயணிக்க முடியும் என்பதால் இந்த மக்கள் படும் கஷ்டங்களைத் தெரிந்து கொள்வதில் கூட ஆர்வமற்றவர்களாகவே உள்ளனர்.

நீண்ட நேரத்தையும் தூரத்தையும் குறைத்து துரிதமாக இலகுவான பயணம் ஒன்றை ஏற்படுத்த நெடுந்தீவின் தலைவராக விளங்கிய திரு சு. நாகேந்திரர் அவர்களின் குறிகட்டுவானில் துறைமுகப்பாலம் என்ற சிந்தனை 1954ல் தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஏ.எல்.தம்பிஐயா பிரதமர் கௌரவ சேர் ஜோன் கொத்தலாவல அவர்களது நடவடிக்கையினால் உருவாக்கப்பட்டது. அது நல்ல முறையில் இடம்பெற்று வந்த நிலையில் இன்றைய கால கட்டம் நெடுந்தீவு மக்களுக்குக் கிடைத்த சுதந்திரமான போக்குவரத்தைத் தொலைத்து விட்டுள்ளது. இம்சை நிறைந்த இலவச சேவையாகி விட்டது.

*வந்தியத்தேவர்.*

# தீவார் நாம்

நீலக்கட லணங்காள் நித்தமுமே பாட்டிசைப்பாள்
கோலக்கரை அணைத்துக் கொஞ்சிக் களித்திருப்பாள்
தாலம்உயர்ந்து வளர் தலையாட்டிக் கவிபடைக்கும்
ஆலும்நல் வேலும் அறுகும் விளைந்தநிலம்

செழிக்கும் மருத்துவச்சீர் சீந்தில் செடிகொடிகள்
விழிக்கும் புதுமைகள்சேர் வேகமிக்க விவேகிகள்வாழ்
அளிக்கும் அமுதறிவு ஆற்றல்மிகு மாநிரைகள்
களிக்கும் பறவையினம் கண்டுவக்கும் மக்கள்வெள்ளம்

பாலும் நறுந்தேனும் பண்டைநல்லோர் கண்டசெல்வம்
சாலச் சிறந்தபயிர் சாமைவரகு மொண்டி
சீலம் விளையவண்ணம் சிந்தித்து உழைப்பவர்தம்
காலம் ஒளிகூட்டக் களிக்கும் எழிற்தீவு.

அன்பும் அறிவும் அருளும் நிறைந்தமக்கள்
இன்பம் இறையாட்சி இலங்கும் தனியாட்சி
துன்பம் அணுகாத தொல்லையற்ற நல்வாழ்க்கை
வன்பகைவர் சூழாத வகைதுலங்கும் மாநகரம்

துடியிடைகொள் மங்கையர்தம் தூய்மையுளம் வாய்ந்தபுலம்
குடிமகிழக் கூடிவளர் கொற்றமெமைப் பெற்றநிலம்
வெடியரசன் கோட்டையெங்கள் வீரமன்னன் ஆட்சியிறை
வடிவழகர் வஞ்சமிலார் வாழ்கருணைப் பெருங்கோயில்

கொஞ்சும் தமிழ்மொழியின் கொற்றமிது நற்றமிழர்
நெஞ்சம் குதூகலிக்க நெடுநாள்கள் வாழ்பவர்நாம்
பஞ்சம் பசிதொலைத்துப் பண்புமிழ்ந்து ஆள்பவர்நாம்
தஞ்சம் பலர்க்களிக்கும் தண்ணொளிகொள் தீவார்நாம்

*நெடுந்தீவு மகேஷ்*

# எமைப்பிரியா இசையவள்



ஈழத்தமிழ் இசைத்த இனிய யாழிவள்
வன்னிப் புலிக்குகையின் வைரக் குயிலிவள்
கண்ணிக்கு எட்டாத வன்னிப் புறா இவள்
பெண்ணுக்கு இலக்கான வெள்ளை நிலவிவள்

தமிழினிப் பூக்கத் தளிராய் இருந்தவள்
எருமைகள் மிதித்ததில் சகதியாய் ஆனவள்
தோண்டி எடுக்கும் தொல் பொருளாகி
மாண்டுபோன எம் மறத்தமிழ் மறையிவள்

உலகம் கண்ணை மூடிய பொழுதில்
உடைந்து கொட்டிய ஒளிர்நிலா இவள்
விழித்த வேளையில் அதிர்ந்து போனது
மனிதப் பேய்களின் மாதிரி கண்டு

சிதைந்த யாழின் சிதறிய நாணாய்
கோடு காட்டிய கோரக் காட்சிகள்
கூடிக் கிழித்த குயிலின் அலகில்
கொத்திக்கொண்டது கொடியவர் முகங்கள்

*சு.விவேகானந்தன்*
*பெரியதுறை*

# Tuberculosis Awareness

I wanted to say a few words about tuberculosis (TB), as it is in the second place for cause of death across the world. A third of the world's population have a latent form of TB, which means that they were exposed to the TB bacteria (Mycobacterium Tuberculosis), but have not become ill with the disease and cannot transmit the disease. TB is a treatable illness which just needs prompt diagnosis and treatment.

Since more and more Europeans are migrating into the UK, they are not thoroughly checked for TB, and since we work or are around many different people, we are also at a risk of contracting the disease. Therefore, to prevent this, I have put together since information taken from WHO and the NHS guidelines to keep you updated.

TB is caused by the bacteria Mycobacterium Tuberculosis, which predominantly affects the lungs; however it can spread to affect other organs. To become infected you have to be in prolonged exposure to an individual with an active infection, for instance, TB spreads within a family who live in the same house. In healthy people, the immune system, which is the body's natural defence barrier against infections and illness, kills the bacteria so no further symptoms persists. The latent form of TB arises when the body's immune system doesn't kill the bacteria but manages to contain it to one area in your body. This form of TB may persist in the body to later become an active TB infection when your immune system becomes weakened to other illness, eg. Flu. If the immune system is not able to kill or contain the infection, it can spread to the lungs causing symptoms within a few weeks to months.
Typical symptoms to be aware of:

- A persistent cough for more than three weeks with phlegm, which may be bloody
- A rapid weight loss in short period of time
- Night sweats
- High temperature (fever)

- Tiredness or fatigue
- A loss of appetite

You should make an appointment with your GP if you have a cough that lasts more than three weeks or if you cough up blood.

TB is usually curable, and requires a 6 month course of antibiotics in most cases. Depending on whether the TB you have is resistant to specific drugs, the treatment may last for as long as 18 months. If you are living with or are in close contact with someone that already has TB, tests may be carried out to look if you are infected. This may include chest x-rays, blood tests and a skin test called the Mantoux test.

You should be aware not to spend long periods of time in small, enclosed rooms with anyone who has active TB until that person has been treated for at least 2 weeks, and if you live with someone who has active TB, help and encourage the person to follow treatment instructions. For young individuals reading this, I encourage you to look out for these symptoms, educate your elders and encourage them to be aware of these symptoms and to follow up on treatment.

**Pragalathan Sothirajah**
*Medical Graduate*

# இளவாலை அமுது

"அமுதிற்கு தமிழ் என்று பேர்
அந்த அமுதெங்கள் நெடுந்தீவின் புலமைக்கு பார்"



புலவர் ஈழத்தின் வடக்கேயுள்ள நெடுந்தீவில் 1918ம் ஆண்டு செப்டம்பர் 15ம் திகதி தம்பிமுத்து சேதுப்பிள்ளை தம்பதியினர்களுக்கு இளவாலை அமுது என்ற அடைக்கலமுத்து அமுதசாகரன் மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை நெடுந்தீவு புனித சவேரியார் பாடசாலையிலும் பின்னர் புனித சார்பஸ் வித்தியாலத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ் ஆசிரியர் பயிற்சிப் கலாசாலையிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டார். தனது 20வது அகவையில் மாதா அஞ்சலி எனும் ஆக்கத்தை சத்தியவேதா பாதுகாவலனில் பிரசுரமாக்கினார். ஆசிரியர் கலாசாலையின் தூதன் சஞ்சிகையின் மலராசியரியராகவும் இருந்தார். 1940ல் போதினி என்ற பத்திரிகையை வெளியிட்டு இளவாலை அமுது என தமிழ் உலகிற்கு கவி படைத்தார். இவரின் நூலுருவில் வெளிவந்த படைப்புகள் சில:

நெஞ்சே நினை, இல்வழி சென்ற இனிய மனிதன்
காக்கும் கரங்கள் அன்பின் கங்கை அன்னை தெரேசா
மடுமாதா காவியம் அன்னம்மாள் ஆலய வரலாறு
அமுதுவின் கவிதைகள், இந்த வேலிக்கு கதியால் போட்டவர்கள் என்றும் இனும் பல.

புலவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டமும் இலங்கை கல்வித் திணைக்களகத்தில் பண்டிதர் பட்டமும் பெற்றார். இவர் தமிழிற்கு ஆற்றிய தொண்டினைக் கௌரவித்து 2004ம் ஆண்டு ரோமாபுரியில் பரிசுத்தடிபாப்பரசரினால் "செவாலியர்" விருதும் 2005ல் இலங்கை அரசினால் "கலாபூஷணம்" விருதும் 2005ல் யாழ் பல்கலைக்கழகத்தினால் இலக்கிய கலாநிதிப்பட்டமும் 2006ல் நெடுந்தீவு ஒன்றியம் பிரித்தானியா "கலங்கரை விளக்கம்" விருதும் 2006ல் கனடா தமிழர் தகவல் நிலையம் "தமிழர் தகவல் " விருதும் 2010ல் இளவாலை தமிழ்க்கங்கை அமுது ஐயாவின் அற்புத படைப்புகள் என்ற நூல் வெளியிட்டு இவருக்கு மூதறிஞர் பட்டம் சூட்டினார்.

புலவர் திரேசம்மாவை மணம் முடித்து பிள்கைள் பேரப்பிள்கைள் என இவர் தன்னுடன் முன் பின் ஏழு தலைமுறையுடன் ஏழு தசாப்தங்களாகக் இலக்கிய துறையில் இருந்து 23.02.2010ல் காவியம் ஆனார்.

நன்றி

*வி.சு.சாந்தமூர்த்தி*
*நெடுந்தீவு 10.*

# ஒரு புனித கைலாய யாத்திரை



எமது நெடுந்தீவு அன்பர்களே உறவுகளே,

நெடுந்தீவு என்னும்போது அதன் பெயரின்படி ஈழத்தின் தீவுகளில் நீளமானது. கைலாய மலைக்கும் ஈழவேந்தன் ராவணனுக்கும் உள்ள தொடர்பு அனைத்து சைவ மக்களுக்கும் தெரிந்திருக்கும். அதனால் தான் கோயில் திருவிழாக்களில் நாம் கைலாய வாகனம் அமைத்து கொண்டாடுகிறோம்.

அன்று இராவணன் காலத்திலும் சரி, இன்று எமது காலத்திலும் சரி நெடுந்தீவு மிகவும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பிராந்தியமாக கருதப்படுகிறது. இந்தியா, நெடுந்தீவை தனது வான்படை தளமாக்க விரும்பியது. உங்களுக்கு தெரிந்திருக்கலாம். கிட்டதட்ட ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை இந்தியாவுடன் தரையால் இணைக்கப்பட்டு இருந்தது. இராமர் கங்கை ஆற்றினூடாக கடலால் இலங்கையை அடைந்தது அவரால் தரை மார்க்கமாக செல்ல மிகுந்த எதிர்ப்புக்கள் அரக்கர்களால் இருந்தது தான். இராமரின் காலம் மகாபாரத காலத்துக்கு முன்பானது (அதாவது மகாபாரத கதை பன்னிராயிரம் வருடங்களுக்கு முன்பு நடந்த சரித்திரம். அதாவது கடைசி பனிக்காலம் - பிரளயத்துடன் முடிவுக்கு வந்த கதை என்றும், ராமாயண கதை கிட்டதட்ட ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்கிறார்கள். வருங்கால ஆராய்ச்சிகள் இதை உறுதிப்படுத்தலாம்). இராவணன் இயக்கர் குல மன்னன், அவனது மனைவி மண்டோதரி ஒரு நாக குலத்தவள். குந்தி கிருஷ்ணரின் மாமி ஆவார். (பஞ்சபாண்டவரின் தாய் குந்தி நாக வம்சத்தவள் என்பது வரலாறு). நாகர்கள் தமிழர்கள் என்பார்கள். தமிழ் சிவபெருமானால் உருவாக்கப்பட்ட மொழியென்றும் சமஸ்கிருதம் அவரின் உடுக்கையிலிருந்து உருவானதென்பதும் ஐதீகம்.

இராமாயண போரில் இராவணனால் இலக்மணன் அடிப்பட்டு விழுந்து அனுமான் மேருமலையை ஆகாயமார்க்கமாக எடுத்துக்கொண்டு வரும்போது அதிலிருந்த மூலிகைகள் நெடுந்தீவில் விழுந்ததால் நெடுந்தீவிற்கு மூலிகைத்தீவு என்று ஒரு பெயர் உண்டு என்பார்கள். நெடுந்தீவில் அதிக பசுக்கள் இருந்ததால் அதை பசுத்தீவு என்றும் அழைத்தார்கள். இராமேஸ்வர கோயிலுக்கு நெடுந்தீவிலிருந்து பால் அபிஷேகத்திற்கு கறந்த பாலின் சூடு ஆற முதலே கொண்டு சென்றதாக வரலாறு பதிவாகியுள்ளது. இராமேஸ்வரம் என்ற பெயர் வரக்காரணம், இராமர் இலங்கைக்கு சேனையுடன் கடலைக் கடக்கமுன் சிவனுக்கு இலிங்கமமைத்து வழிபாடு செய்த இடம் என்பதாலாகும். இராமருக்கும் இராவணனுக்கும் திரேதா யுகத்திலும், பஞ்சபாண்டவருக்கு துவாபர யுகத்திலும், கலியுகத்தில் சுந்தரர், சேரமான், ஔவையார், காரைக்கால் அமையார் ஆகியோர் கண்டு களித்த கைலாயமலையை

ஏதோ ஒரு பூர்வ ஜென்ம புண்ணியத்தால், பெருமைக்குரிய தனிநாயாக அடிகளார் உதித்த அதே தனிநாயகமுதலியார் பரம்பரையில் வந்த எனக்கும் எனது குடும்ப அங்கத்தவர்கள், எனது கணவர், மகள் அபிராமிக்கும் கிடைத்ததை நினைக்க மனம் அளவிட முடியாத பரவசம் கொள்கிறது.நெடுந்தீவிலிருந்து முதல்முதலாக கைலாய மலைக்குப் போய்த் திரும்பி வந்தவர்கள் நாமாகத்தான் இருக்க முடியும் என்று நினைக்கின்றேன். கைலாய யாத்திரை பதினாறு வயதுக்கு உட்பட்டவர்கள் போகக்கூடாது என்பது ஐதீகம். எனது மகள் தனது பதினேழாவது வயதில் கைலாயமலையை சுற்றி பரிக்கிரமம் செய்து முடித்ததால் அவர்தான் அதி வயது குறைந்ததும், அந்த மிகவும் கடினமான புனித கைலாய யாத்திரையை வெற்றிகரமாக முடித்த கைலாய யாத்ரீகர் ஆக இருக்கமுடியும் என எமது யோகாசன குரு யோகி ராம் சுந்தர் அவர்கள் சொல்லுவார்.

இந்த பாக்கியம் எமக்கு கிடைக்க மூலகாரணமாக இருந்தவர் எமது யோகாசன குரு யோகி ராம் சுந்தர் அவர்கள் ஆவார். நாங்கள் குடும்பமாக லண்டன் ஈஸ்ட்காம், சைவ முன்னேற்ற சங்கத்திற்கு பிள்ளைகள் சிறு வயதில் இருந்தே கிட்டதட்ட பத்து வருடங்களாக சென்று வருகிறோம். அங்கு யோகாசனம் தமிழ் பாரம்பரிய முறையில் படிப்பிக்கப்படுகிறது.

தமிழுக்கு இலக்கணம் எழுத அகஸ்தியருக்கு பிள்ளையார் தனது வலது தந்தத்தை முறித்து எழுத்தாணியாக கொடுத்ததாக புராணக்கதைகள் கூறுகின்றன. அகஸ்தியர் யோகாசனத்தை உலகுக்கு பரப்பிய பதினெட்டு சித்தர்களில் ஒருவர். இவர்கள் எல்லோரும் தமிழர்கள். இவர்களில் எட்டிக்குடி வால்மீகி ராமாயணத்தை சமஸ்கிருதத்தில் எழுதினர். இவர் ஒரு வழிப்பறி கொள்ளைக்காரராக இருந்து ஒரு யோகியாக, சித்தராக மாறியவர். இராமேஸ்வரம் பதஞ்சலி முனிவர் யோகசாஸ்திரத்தை வடமொழியில் எழுதினார்.

இந்த அரிய நோய்தடுக்கும் நோய்தீர்க்கும் கலையை இவர்களை தொடந்து கிரியா பாபாஜி என்று அழைக்கப்படும் நாகராஜன் இந்தியாவில் பரங்கிமலை தமிழநாட்டில் பிறந்து பரப்பினார். அவர் பதிணென் சித்தர்களில் ஒருவரான பழனி போகநாதரின் சீடன் ஆவார். போகநாதர் சீனா சென்று யோக கலையை பரப்பியவர். கால ஓட்டத்தில் தொலைந்து போன யோகக்கலையை மூன்றாவது முறையாக கண்டு அறிந்து உலகுக்கு அளித்தவர் இந்த கிரியா பாபாஜி ஆவார். இவர் தில்லை திருமூலர் சித்தரின் அட்ட அங்க யோகாசனத்தை ஐந்து அங்கங்களாக வகுத்தார். திருமுலர் எழுதிய திருமந்திரம் எல்லோருக்கும் இன்றும் பயனளிக்கிறது.

யோகக்கலையை உருவாக்கியவர் யோகேசுவரன் ஆகிய சிவபெருமான் ஆவார். சிவபெருமான் பார்வதிக்கு யோகக்கலையை போதிக்க, பார்வதி நந்திதேவருக்கு அருளினார். நந்திதேவர் மூலமாக உலகுக்கு யோகக்கலை கிடைத்தது. சைவ முன்னேற்ற சங்கத்தில் பாரம்பரிய முறைப்படி யோகாசனம் கற்பிக்கப்படுகிறது.

முதல்முறையாக யோகாசனம் எமது குரு யோகி ராம் சுந்தர் அவர்களால் இங்கே தொடக்கப்பட்டது. இவரது படிப்பித்தல் முறை விஞ்ஞான ரீதியானது. இவரின் யோகாசன பயிற்சி முறையுடன் ஒப்பிடும் போது மற்றய பயிற்சி முறைகள் சில உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடியதாக இருப்பது மருத்துவத்துடன் தொடர்புடைய எனக்கு தெளிவாகியது.

கைலாய யாத்திரைக்கு ஒரு வருடத்திக்கு முன்பாகவே எமது குரு எம்மை மனத்தாலும் உடலாலும் பலம் பொருந்தியவர்களாக உருவாக்க பயிற்சிகள் அளித்தார். தினசரி காலை மாலை யோகப்பயிற்சி பிராணாயாமம் எனப்படும் சுவாச பயிற்சி, நடைப் பயிற்சி, மலை ஏறும் பயிற்சியும் தொடர்ந்து செய்தோம். யாத்திரைக்கு ஒரு மாத முன்பாகவே அசைவ உணவை நிறுத்தினோம். கைலாய மலை பிரதேசத்தில் உணவுப்பொருட்களோ மருந்தோ வாங்கமுடியாது என்றபடியால் அவற்றை படிப்படியாக சேகரித்தோம். உடை, முக்கியமாக குளிர், மழை, தாங்ககூடியதாக இருக்கவேண்டும்.

ஏனெனில் வெப்பநிலை சய நாற்பது (-40) பாகைக்கு கீழ் போக கூடிய வாய்ப்பு உண்டு. குளிக்க, மலசலகூட வசதிகள் இல்லை. வருத்தம்.. வந்தால் மருந்து இல்லை. பிராணவாயு குளாய் கூட நாம் தான் எடுத்து செல்ல வேண்டும். நாம் 2000 மீட்டருக்கு மேல் உயரம் போகும் போது பிராண வாயு அழுத்த குறைவால் வருத்தங்கள் ஆரம்பிக்க துவங்கும். இதை அசரசொலமைட், டெக்ஸமெதசோன் போன்ற மருந்துகளை எடுப்பதால் ஓரளவுக்கு . தடுக்கலாம். இவைகளால் சிலருக்கு பக்கவிளைவுகள் உண்டாகலாம். இதைப்போக்க உங்கள் குடும்ப வைத்தியரின் உதவியை நாடலாம். ஏனெனில் கைலை மலை 5500 மீட்டர் (22,000 அடி உயரத்தில் உள்ளதால் பிராணவாயு அழுத்தம் மிகவும் குறைவு. இதற்கு எமது உடல் பழக்கப்படாது விட்டால் மூச்சு திணறல், தலையிடி, வயிற்று போக்கு வரலாம். இதை தவிர்க்க படிப்படியாக ஏற வேண்டும். இடங்களில் தங்கி தங்கி போக வேண்டும்.

அன்று இந்தியாவிடம் இருந்த கைலயமலை தொடர் இன்று சீனாவிடம் சிக்க காரணம் இந்திராகாந்தியின் தகப்பனார் நேரு அவர்கள் 1950ம் ஆண்டு காலங்களில் கையொப்பமிட்டதுதான். இந்த, இந்து சமயத்துடன், தமிழர்களின் சரித்திரத்தில் பின்னி பிணைந்த கைலைமலைக்கு செல்ல சீனா கடவு அனுமதி அவசியம். பல இந்தியர்கள் அனுமதியில்லாமல் நேபாளம் வரை சென்று திரும்பி போயிருக்கிறார்கள். கைலாசமலை அடிவாரத்தில் மானசொருவர் குளம் உள்ளது. இதைப்பார்ப்பது ஒரு கண்கொள்ளா காட்சி ஆகும். இதில் மூன்று தரம் உடல் முழுவதும் நனைய முக்கி குளிப்பது நூறு பிறவி பாவத்தை போகும் என்பது ஐதீகம். இந்த புண்ணிய

தீர்த்தம் நோய் தீர்க்கும் மருந்து என்பார்கள். இரவு நேரத்தில் வானத்தில் உள்ள அத்தனை நட்சத்திரங்களையும் ஒரு பாயில் அள்ளித்தெளித்தது போல பார்க்கலாம். இரவில் தேவர்கள் இந்த குளத்தில் குளிப்பதாக ஐதீகம். கிறிஸ்தவர்கள் ஜெருசலேத்துக்கும் இஸ்லாமியவர்கள் மெக்காவுக்கும் போவது போல இந்துக்களுக்கு கைலாசமலை ஆகும்.

கைலாய மலைக்கு ஐந்து முகங்கள் உண்டு. இதில் நான்கு முகங்கள், நான்கு திசைகளிலும் உள்ளன. இவை நால்வகை மக்களை குறிக்கிறது. இதில் ஐந்தாவது முகம் ஆகாயத்தை நோக்கி உள்ளதால் இத்தனை நாம் பார்க்க முடியாது. கைலாயதிற்கு போய் வந்தவர்களை "கைலைமணி" என்று அழைப்பார்கள்.

நீங்கள் கைலாய யாத்திரை போக விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம். எங்களால் முடிந்த உதவியை உங்களுக்கு செய்ய காத்திருக்கின்றோம்.

இறைதுணை

*ஆக்கம்: திருமதி டாக்டர் (வைத்தியகலாநிதி),*
*கைலைமணி கருணாதேவி இரத்தினராசா.*

# மன அழுத்தம் (Psychotic Depression)

மனத்தளர்ச்சி நோய்கள் பலவகையாக உள்ளன. இதில் மனஅழுத்தம் (psychotic depression) ஒரு வகையாகும். இந்த மன அழுத்த நோயானது வயது, பால், இனம் என்ற வேறுபாடில்லாமல் காணப்பட்டாலும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இளம் சந்ததியினரே இந்நோயால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

மரபணுக்களும் (heridity), தொடர்ச்சியான போதைவஸ்துப் பாவனை யும் இந்நோய்க்கான காரணங்களாய் இருந்தாலும் புலம்பெயர் நாடுகளின் வாழ்க்கை முறையும் குறிப்பாக இன்நோயின் பாதிப்புக்குள்ளாவதற்கான ஏதுநிலைகளாக இருப்பதாக தெரியவருகின்றது. பொதுவாக இந்த மனஅழுத்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் யாரோ சிலரின் குரல்கள் தமக்கு கேட்பதாக உணர்வார்கள். அவ்வாறான குரல்கள் இவர்களை ஒரு பெறுமதியற்றவர்கள் அல்லது ஒன்றுக்கும் பயன்படாதவர்கள் என்றும் கூறுவதாக இவர்களின் கூற்றுக்களிலிருந்து தெரியவருகின்றது. இதனை மருத்துவத்தில் (Hullucination) என்பார்கள். மேலும் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஏதோ ஒன்றில் தோல்வி அடைந்தவர்கள் போலவும், பெரிய குற்றம் ஒன்றை இழைத்துவிட்டு அந்த குற்ற உணர்வால் தவிப்பவர்கள் போலவும் உணர்வார்கள்.

"மன அழுத்தநோய் கொண்டவர்கள் யதார்த்த உலகத்துடன் தொடர்பற்ற வர்களாக காணப்படுவார்கள்" என அமெரிக்க உளநோய் தேசியநிறுவனம் வரையறுத்துள்ளது. அத்துடன் இவர்கள் விசித்திரமான செயற்பாடு களையும் இவர்களின் உரையாடல்கள் பெரிதும் முன்னுக்குப்பின் தொடர்பற்ற கருத்துக்களை கொண்டதாகவும் காணப்படும்.

மேலும்இவர்கள் தாம் நினைப்பதை எல்லாம் மற்றவர்கள் அறிந்து கொள்கிறார்கள் என்றும், மற்றவர்கள் தமக்கு தீங்கு செய்யலாம் என்ற எண்ணம் கொண்டவர்களாகவும் காணப்படுவார்கள். இன்னொரு சாரார் தம்மை பேய்பிடித்துள்ளது என்ற உணர்வு கொண்டவர்களாகவும் அல்லது தாங்கள் இழைத்த குற்றமொன்றுக்காக காவல் துறையினரால் தேடப்படுவதாக பயந்தவண்ணம் இருப்பார்கள். இவர்கள் எந்தவித காரணமும் இன்றி எளிதில் கோபம் கொள்வார்கள். இவர்கள் கூடியவரை தனிமையை நாடுவர். அதிக நேரம் பகலில் உறங்கியும், இரவில் விழித்தும் இருப்பர். தமது தோற்றம் பற்றி எந்தவிதமான அக்கறையும் கொள்ளமாட்டார்கள். அதனால் குளிப்பதோ, ஆடை அணிவதிலோ நாட்டம் கொள்ளாதிருபார்கள். அதிகம் பேசாதவர்களாகவும், ஏதாவது பேசினால் கருத்துச் சாரமற்றதாகவும் காணப்படும்.

முறையான மருத்துவப் பராமரிப்பு இல்லாதவிடத்து இந்த மனஅழுத்தநோய் "எண்ணம், செயல் ஆகியவை மாறுபட்டுச் செயல்படும் மனக்கோளாறு" (Schizophrenia) என்ற மோசமான கட்டத்திற்கு தள்ளப்படுவதற்கு சாத்தியங் கள் இருக்கின்றன. இந்நிலையை அடைந்தவர்கள் முற்றிலும் விசித்திரமான

முறையில் தம்மைச் சூழ உள்ளவர்கள் அல்லது இவர்களோடு ஏந்தவித தொடர்பும் இல்லாதவர்களால் தமக்கு ஆபத்து ஏற்படலாம் என்று தாமாகவே நினைத்துக் கொண்டு அவர்களுக்கு தீங்கு விழைவிக்க முனைவார்கள். இது அவர்களுக்கும் பிறருக்கும் ஆபத்தான சூழ்நிலைகளை உருவாக்கிவிடுகின்றது. Schizophrenia என்ற மனக்கோளாறின் ஆரம்ப அறிகுறிகளாக பின்வருவன வற்றைக் கூறலாம்

- கவலையும் ஏக்கமும் (Anxiety)
- மலச்சிக்கல் (Constipation)
- தன் உடல் நலத்தைப்பற்றி சதா கவலைகொள்ளும் தன்மையால் ஏற்படும் மனவாட்டம் (Hypochondria)
- தூக்கமின்மை (Insomnia)
- சிந்தனைத்திறன் குறைதல் (Intellectual impairment)
- உடலசைவுகள் குறைவடைதல் (Physical Immobility)
- மாயத்தோற்றங்களை உணர்தலும் இல்லாததை இருப்பதுபோல் அனுமானித்தலும் (Delution and Hullucination)

எனவே இவ்வாறான அறிகுறிகள் ஒருவரிடத்தில் காணப்படுமாயின் அவரை உடனடியாக மருத்துவ ஆய்வுக்குட்படுத்தி மருத்துவமனை உள்ளிருப்புச் சிகிற்சைக்கு (Hospitalization) உட்படுத்துவது அவசியமாகும்.

இதன் மூலம் உளநோய் மருத்துவர்களின் நேரடிக்கண்காணிப்பும், மனநோய்க்கான மருந்து வகைகளும் (Antidepressants) உடனடி யாக இவர்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் கிட்டும்.

எனவே மன அழுத்தநோயாளிகளை இனம் கண்டு உரியநேரத்தில், உரிய முறையில், உரிய சிகிச்சை அளித்தால் ஒரு வருட காலத்தில் குணப்படுத்திவிடலாம் என மருத்துவ ஆய்வுகளும் புள்ளிவிபங்களும் உறுதிப்படுத்துகின்றன.

*சேவியர் மனுவேல்பிள்ளை*
*Xavier*
*Day Habilitation Coordanator*
*The Center for developmental Disabilities*
*U.S.A*

# மண்ணின் பெருமையில் விண்ணில் தாரகை



நெடுந்தீவின் தனிநாயக முதலி வழித்தோன்றிய ஆசிரியர் நாகநாதர் கணபதிப்பிள்ளை, ஊர்காவற்றுறை கரம்பொன், செசில் இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வர் தனிநாயக அடிகள். 1913 ஆகஸ்ட் 2ஆம் தேதி பிறந்த இவரின் நூற்றாண்டு இப்போது தமிழறிந்த உலகம் முழுவதும் பெருமையோடு கொண்டாடப்படுகிறது. தமிழோடு சங்கமித்த இப்பெயர், கால நதியில் அத் தமிழோடு சலசலத்து ஓடிக்கொண்டேயிருக்கும்.

பெற்றோர்கள் இவருக்கிட்ட பெயர் சேவியர். மேரிப்பிள்ளை, தெரேசா ஆகிய இரு சகோதரிகளும், பாலசிங்கம் என்ற ஒரு சகோதரரும் இவருடன் பிறந்தவர்கள். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்குப் பின்னர், யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்றுகொண்டிருந்தவேளையில் தாயார் இறந்துபோனார்.

இவர், திருமறையின் அருட்பணியாளராகவேண்டும் என்பது இளமையிலேயே இவரது பெற்றோரின் விருப்பம். பெற்றோர் விரும்பியபடியே, 1931இல் கொழும்பு குருத்துவ கல்லூரியில் சேர்ந்தார். பின்னர், ரோம் மாநகரில், உர்பண் குருமட மாணவனாக, உர்பண் பல்கலைக்கழகத்தில் நான்கு ஆண்டுகள் மறைக்கல்வியைப் பயின்று, 1938ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் தேதி அங்கு, கத்தோலிக்க மத குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். மறுநாள், தன்னுடைய தாயாரை நினைவுறுத்தும் புனித செசிலியா கல்லறைச் சுரங்கத்தில் தனது முதலாவது திருப்பலிப் பூசையை நிறைவேற்றினார்.

இலங்கை திரும்பி, நெடுந்தீவு புனித சவேரியார் தேவாலயத்தில், 1938 செப்ரெம்பர் 29ஆம் தேதி திருப்பலி பூசையை ஒப்புக்கொடுத்தார். அப்போது, இவரை நெடுந்தீவு மக்கள் குதிரையில் ஏற்றி, ஊர்வலமாக அழைத்துச்சென்றார்கள் என்று கூறப்படுகிறது.

'சேவியர் ஸ்ரனிஸ்லஸ்' என்ற கத்தோலிக்க மத துறவியாவதற்காக ரோம் நகர் சென்ற அவர், 'சேவியர் தனிநாயகம்' என்ற தமிழ்த் துறவியாகும் புது மன உத்வேகத்துடன் அங்கிருந்து திரும்பினார். தமிழ்நாட்டின் நெல்லை மாவட்டத்தில், வடக்கன் குளம் புனித தெரேசாள் உயர்நிலைப் பள்ளியில் துணை அதிபராக அவர் பணியாற்றிக்கொண்டிருக்கையில், அவர் சார்ந்த தூத்துக்குடி மறை மாவட்டத்தின் ஆயர் ரோச் ஆண்டகை, அவரது பெயர் மாற்றத்துக்கான அங்கீகாரத்தை அவருக்கு வழங்கி, தமிழுலகில் அவர் ஒரு 'தனிநாயகமாக' திகழ வழிசமைத்தார்.

ஆங்கில, லத்தீன் மொழிகளில் புலமைகொண்டிருந்த தனிநாயக அடிகள், ரோமில் இத்தாலி, கிரேக்கம், எபிரேயம், ஸ்பானிஷ், பிரெஞ்சு, டொச் மொழிகளையும் கற்று அவற்றில் பாண்டித்தியம்பெற்றபோது, தன் தாய்மொழி தமிழைத் தன் தவமாகக் கண்டார். கூடவே, ரஷ்ய மொழி, சிங்களம் போன்றவற்றிலும் பேசவல்ல ஆற்றல் பெற்றவர் அவர்.

தமிழ் மகனாக தன்னை அடையாளப்படுத்த தனது தந்தையின் வழிமூலத்தை அவர் தேடினார்.

14ஆம் நூற்றாண்டில், தென்னிந்தியாவில் மாலிக் கபூர் படையெடுப்பைத் தொடர்ந்து எழுந்த விஜய நகர ஆட்சியில், தெலுங்கர்களின் ஆதிக்கத்தை விரும்பாத தொண்டைமண்டலத்தின் சைவ வேளாண்குல முதலிமார்களும், நாஞ்சில்நாட்டு சைவப் பிள்ளைமார்களும் சிலர், இலங்கையில் யாழ்ப்பாணத்துக்கு குடியேறினர். அப்படி, செங்கல்பட்டு மாவட்டத்தின் செய்யூரிலிருந்து தனது குடிமக்களுடன் நெடுந்தீவில் குடியேறியவர் தனிநாயக முதலி. அந்தத் தனிநாயக முதலியின் வழித்தோன்றல் தனது தந்தையார் என்பதை அறிந்து, அந்தப் பெயரையே தனக்கான பெயராக தேர்ந்தார்.

தந்தையார் கணபதிப்பிள்ளை, நெடுந்தீவில் சைவசமயத்திலிருந்து முதன்முதலாக கத்தோலிக்க மதத்துக்கு மதம் மாறி, மானிப்பாய் அமெரிக்க மிஷன் பாடசாலையில் தனது ஆங்கில மொழிக்

கல்வியை ஆரம்பித்தவர். ஹென்றி ஸ்ரனிஸ்லஸ் கணபதிப்பிள்ளை என்று தனது பெயரையும் மாற்றிக்கொண்டார். யாழ். பத்திரிசியார் கல்லூரியிலும் மற்றும் பல இடங்களிலும் ஆசிரியராகப் பணியாற்றிய அவர், ஆசிரிய பணியிலிருந்து ஓய்வுபெற்றபின்னர், நெடுந்தீவில் தபால் அதிபராகவும் பணியாற்றினார்.

நெடுந்தீவு மண்ணில் நிகழ்ந்த இந்த மத மாற்றம், விண்ணில் ஓர் அழியாத் தாரகையை உதயமாக்கியது. தமிழர்களுடைய இரண்டாயிரம் ஆண்டுகால பண்பாட்டுப் பெருமை; சங்கத் தமிழ் இலக்கியங்களின் செழுமை; திருக்குறள் கூறும் நீதி, இவையெல்லாம் காலம்காலமாக நமக்குள்ளேயே பேசப்பட்டுவந்தபோது, உலக இலக்கியங்களோடு எப்படி இவை அவற்றுக்கு நிகராகவும், சிலவிதங்களில் எப்படி இவை அவற்றைவிட உயர்வாகவும் சிறக்கின்றன என்பதை ஒப்பிட்டு, முதன்முதலாக உலக அரங்கில் தமிழின் பெருமையைப் பறைசாற்றினார்.

தமிழ்ச் செவ்விலக்கியம், இலக்கணம் என்பன மாத்திரமன்றி, தமிழர்களின் அற மரபு, தத்துவ மரபு, வாழ்க்கை மரபுகளும் பிற இன மரபுகளோடு கொண்டிருக்கும் உறவையும் அவர் ஒப்பிட்டுக் காண்பித்தார். கோலாலம்பூரிலும், சென்னையிலும், பாரிசிலும், யாழ்ப்பாணத்திலும் நான்கு உலக தமிழாராய்ச்சி மாநாடுகளை, அவர் உருவாக்கிய உலக தமிழாராய்ச்சிக் கழகத்தின்மூலம் நடாத்தினார். மொழி ஆய்வில், கீழைத்தேயவியலுக்கு நிகராக 'தமிழியல்' என்ற புதிய கட்டமைப்பு ஒன்றையும் அவர் நிலைநிறுத்தினார்.

வடக்கன்குளத்தில் பணியாற்றியபின்னர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து தமிழில் முது கலைமாணி, இலக்கிய முது கலைமாணி பட்டப் படிப்புகளை மேற்கொண்ட அடிகளார், இலங்கைப் பல்கலைக்கழக கல்வியியல் துறையில் விரிவுரையாளராகவிருந்தபோது லண்டன் பல்கலைக்கழகம் வந்து, தத்துவ கலாநிதி பட்டத்துக்கான ஆய்வை மேற்கொண்டார். பின்னர், மலேயா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகி, இந்திய துறைத் தலைவராக பணியாற்றினார்.

உலகம் முழுவதும், பொதுவாக அனைத்து நாடுகளுக்குமே அவர் 'தமிழ்த் தூது' சென்றார்.

தேவார, திருவாசகத்திலும் பெரும் இலக்கிய நயம்கண்ட அடிகளார், தமிழ் மொழி உணர்வோடு, தமிழ் மொழி உரிமையுணர்வும் மிகப் பெற்றவர். இலங்கையில், அரசாங்கம் கொணர்ந்த 'சிங்களம் மட்டும் சட்டத்தை' எதிர்த்து, 1956ஆம் ஆண்டு, ஜூன் 5ஆம் தேதி, பாராளுமன்றத்துக்கு முன்னால், காலிமுகத் திடலில் தமிழ்த் தலைவர்கள் மேற்கொண்ட சத்தியாக்கிரகம் சிங்கள இன காடையர்களினால் தாக்குதலுக்குள்ளானபோது, ஒரு கத்தோலிக்க மத குரு - தனிநாயக அடிகள் - அந்த சரித்திர நிகழ்வில், நீதியின் சாட்சியாய்த் தெரிகிறார்.

நோயில் சற்று தளர்ச்சியுற்று, 1980 செப்ரெம்பர் முதலாம் தேதி, யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு தியான இல்லத்தில், தன்னுடைய 67ஆவது வயதில் அவர் காலமானார்.

'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்றும், 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்றும், 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்றும் வாழ்ந்தவர் அவர் என்றாலும், இயேசுவைப் பெற்ற மரியாளின் பெருமையை, இந்தத் தவப் புதல்வர் நமது ஊருக்கு காலமெல்லாம் சேர்த்திருக்கிறார்.

- திருமதி அம்பிகை மகாலிங்கசிவம்
உப செயலாளர்
நெடுந்தீவு ஒன்றியம்
ஐக்கிய இராச்சியம்
01.03.2014

## தொடரும் என் அழகிய தீவின் கனவுகள்



வெண் பூக்களை வானம் பனியாகக் கொட்டிக் கொண்டிருந்தது ஒரு குளிர்கால நாள். இரண்டாயிரத்து நாற்பதாம் ஆண்டின் பொங்கல் தினம் அன்று.

பிரித்தானிய-நெடுந்தீவு நட்புறவுக்கழகத்தின் கோலாகலப் பொங்கல் தின விழா.

நாற்பதினாயிரம் மக்கள். ஆங்கில மொழியூடாக தமிழ் கலாசாரப் பாரம் பரியங்களின் மிச்ச சொச்சங்கள் அம்மாபெரும் மண்டபத்தில் கலைப் படைப்புக்களாகவும் கருத்துரைகளாகவும் மிளிர்ந்தன.

நெடுந்தீவைப் பூர்வீகமாகக் கொண்ட பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய பிரசைகள் அவர்கள். தங்களின் முன்னோர்கள் பிறந்து வளர்ந்த ஊரான Delft என்னும் நெடுந்தீவுக்கு ஐம்பது ஆண்டுகளாக பல்வேறு பொருளாதார- அறிவியல் - நவீன தொழில் நுட்ப உதவிகளை மிகச்சிறப்பாக செய்து கொண்டிருக்கும் ஓர் உன்னதமான அமைப்பின் அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் இவர்கள். நெடுந்தீவிலிருந்து புலம் பெயர்ந்த மக்களின் மூன்றாம் நான்காம் தலைமுறையினர்.

90 களுக்குப் பின்னர் பிரித்தானியாவில் முதலாம் இரண்டாம் தலைமுறையினர் உருவாக்கிய ஒன்றியங்களின் வழிவழி வந்த பிரித்தானிய நட்புறவுக்கழகம் பொறுப்புக்களோடு அட்டகாசமாய்த் தொடர்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக பிரித்தானிய ஐரோப்பிய வட அமெரிக்க அவுஸ்திரேலிய நியூசிலாந்து என்று எல்லோரையும் ஒன்றிணைத்து 120,000 அங்கத்தினரைக் கொண்ட மிகப் பெரிய கழகமாக மாறியிருக்கிறது.

அரச அமைச்சர்கள், ஆலோசகர்கள், விஞ்ஞானிகள், பேரறிஞர்கள், பொருளியல் வல்லுனர்கள், தொழில்நுட்ப சமூக ஆய்வாளர்கள் என்று பலர். கலைஞர்களின் பரதநாட்டியம் பலட் நடனம் ஆங்கில தமிழ் இசைப் பாடல்கள் நடந்து கொண்டிருந்தன. நெடுந்தீவின் கட்டுமாணப் படங்களும் உள்ளூர் நெடுந்தீவு மக்களின் புன்னகை ததும்பும் முகங்களும் அவர்களின் வரவேற்பும் கடல், கரை, பனை மரங்களும் பல்வேறு கோணங்களில் பிடிக்கப்பட்ட படங்கள் பெரிய திரைகளில் நாற்புறமும் ஓடிக்கொண்டிருந்தன. விழாக்குழுவில் ஒருவரான ஜோய் கே. பிள்ளை அவர்கள் மிக உற்சாகமாக் கருத்துரைத்தார்.

சீமான்களே! சீமாட்டிகளே! பொங்கல் வாழ்த்துக்கள் எமது ஊரின் வளங்களைப் பாதுகாத்து பல்வேறு நற்பணிகளைச் செய்வதற்கு எம் முன்னோர்கள் எமக்குக் காட்டிய வழிவழி வந்து தொடர்ந்து மிகச் சிறிய பொளாதார உதவிகளையும் எமது கல்விசார் உதவிகளையும் செய்து கொண்டிருக்கிறோம். நெடுந்தீவின் மக்கள் அன்பும் பண்பும் மிக்க கடின

உழைப்பாளர்கள். தம் மண்ணை மிக நேசித்து ஆசியாவின் ஒரு சொர்க்கபுரியாக மாற்றியிருக்கிறார்கள். ஓவ்வொரு வருடமும் பத்து மில்லியன் யூரோக்களை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். உங்களின் மாதாந்த 10 யூரோக்களின் கொடுப்ப னவுக்கு நன்றி. இந்த வருடத்தில் அங்கத்தவர் தொகை 121,000 ஆகியுள்ளது. மேலும் இவ்வருடம் 18 பல்துறை வல்லுனர்களை நெடுந்தீவுக்கு அனுப்புகிறோம். நெடுந்தீவு நட்புறவுக் கழகம் அவர்களை அங்கே வரவேற்கக் காத்திருக்கிறது என்றார்.

நெடுந்தீவில் பிறந்து வளர்ந்த கணபதிப்பிள்ளை அவரக்ளின் பூட்டப்பிள்ளை இவர். ஒன்பது பெண்களின் ஒன்பது ஆண்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டன. எல்லோருடைய குடும்பப் பெயர்களும் குறுக்கப்பட்ட தமிழ்ப் பெயர்களாக இருந்தன. மண்டபம் முழுவதும் கரகோசமாக முழங்கியது. சண் ஜீ நாயகம், றியா எஸ் குலம், கீதா எம் சிவம் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இவர்கள் மூவரிடமும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன.

அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டு தேவைப்பட்டால் ஆலோசனைகளை வழங்கி அவர்களது கருத்துக்களைக் கேட்டு அறிக்கை சமர்ப்பிப்பார்கள் என்று தயா கே. இந்திரன் குறிப்பிட்டார்.
அந்தக் குழுவில் என்னுடைய பெயரும் குறிப்பிடப்படுவதை நான் முதலே அறிந்திருந்தேன். அன்றைய பொங்கல் விழா இரவு 8 மணிக்கு நிறைவு பெற்றது.

நாங்கள் 18 பேரும் கொழும்புக்கு பறந்து பின்னர் அங்கிருந்து 60 இருக்கைகள் கொண்ட இலகுரக உள்ளூர் விமானத்தில் ஏறிக்கொண்டோம். விமானத்தில் ஓரிரு இருக்கைகள் மட்டுமே வெறுமை யாக இருந்தன. இலங்கைக் கரையோரமாகப் பறந்த விமானம் 70 நிமிடங்க ளில் தரையிறங்கியது. நாம் கரகோசம் செய்தோம். முற்பகல் 10மணியையும் 26 பாகை வெப்பநிலையையும் விமானநிலையக் கோபுரம் காட்டிக்கொண்டு நின்றது.

நாம் நெடுந்தீவின் வெல்லை விமான நிலையத்துள் நிற்கிறோம். சந்தோசத்தில் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டோம். என் பேரனார் எனக்குச் சொன்ன ஊரின் கதைகள் இன்றும் எனக்குப் பசுமையாக நினைவில் உள்ளது. அந்தத் தீவுக்கு நாங்கள் வந்திருக்கிறோம். இது எவ்வளவு ஆச்சரியம். விமான நிலையம் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது ஓடும் படிகள் நவீன தொடர்பு சாதனங்கள் சொகுசு இருக்கைகள் கொண்ட கூடம். வெளியே பார்க்கக் கூடிய கண்ணாடிச் சுவர்கள் பிரமாண்டமான குளிரூட்டிகள் சூரியக்கதிர் மின் உற்பத்திக் கூரைகள் புதுமை கலந்த பளிங்குக் கல் வேலைகள் என்று நிரம்பியிருந்தன.

வழமையான விமான நிலையக் கடமைகளை முடித்து வந்தபோது நெடுந்தீவு

நட்புறவுக் கழகத்தின் ஊர்ப் பிரதிநிதிகள் 10 பேர் எம்மை வரவேற்றனர். வெள்ளை சிவப்பு மஞ்சள் மலர்களையும் பனை ஓலை மாலைகளையும் எமக்கு அணிவித்து வரவேற்றனர். நாம் வெளியே வந்தபோது வெப்பநிலை அதிகமானதாக இருந்தாலும் கடற்காற்று இதமாக இருந்தது. முன் வீதியின் அருகாய் வாகனத்தரிப்பிடமும் இருமருங்கும் ஓங்கி வளர்ந்த வாதநாராணி மரமும் பூவரசும் பூத்துக் கிடந்தன. நேரே போன அப்பாதை வடக்குத் தெற்கு நோக்கிப் போன பெருந்தெருவோடு இணைக்கப்பட்டிருந்தது. அந்த அகலப்பாதையின் இரு பக்கமும் பேரீச்சையும் பனை வடலியும் நின்றன. அழகான மின்சார விளக்குகளும் மின்சார வாகனங்களுக்கான மின்சாரத் தொடுப்பு நிலைகளும் காணப்பட்டன. நட்புறவுக் கழகப் பிரதிநிதிகள் பலவற்றை எமக்குச் சொல்லிக்கொண்டே வந்தார்கள்.

இயற்கை ராட்சதக் காற்றாடிகளையும் சூரியக் கதிர்களையும் கொண்டே முழுக்க முழுக்க மின்சாரம் தீவு முழுவதும் பெறப்படுகிறது. பெற்றோலிய யந்திரங்கள் எதுவுமே நாம் பயன்படுத்துவதில்லை. சூழல் மாசுபடுவதை நாம் வெறுக்கிறோம் என்றார் குழுத்தலைவர் இளங்கோ.

எம்மை அழைத்துப் போக 6 குதிரை வண்டில்கள் காத்து நின்றன. உயரமாக வளர்ந்த பளபளக்கும் கறுப்புக் குதிரைகளும் அழகான வண்டில்களும். நாம் எல்லோரும் ஏறிக்கொண்டோம். வெல்லை என்பது வெறுங்கட்டாந்தரை. கோடை காலத்தில் புல்லோ தண்ணீரோ கிடைக்காமல் உடல் ஒட்டிய கட்டாக்காலிக் குதிரைகளும் மாடுகளும் இந்தத் தரவையில் செத்து மடிந்தன. பலர் இவற்றை குதிரைகளாகவே ஏற்றுக் கொள்ளவில்லை. இன்றைக்கு வெல்லை விமான நிலையமாகி விட்டது. குதிரைகள் பயிற்சி அளிக்கப்பட்டு உலக தரத்துக்கு உயர்ந்து விட்டன. பழைய டச்சு லயன்கள் புதுப்பிக்கப்பட்டு பாதுகாப்பும் ஓட்டப்பயிற்சியும் போட்டிகளும் நடாத்தப்படுகின்றது. குடிக்கவோ குளிக்கவோ தண்ணீர் கிடைக்காமல் கஸ்டப்பட்ட நெடுந்தீவு மக்களுக்கும் உயிர்களுக்கும் கடல் நீரை நன்னீராக்கிக் கொடுக்கும் மாபெரும் திட்டம் வகுக்கப்பட்டு நான்கு இடங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. ஊரின் எல்லாக் குளங்களும் ஆழப்படுத்தப்பட்டு நன்னீர் தேக்கங்களாகி தோட்டங்களும் வயல்களும் உற்பத்தியில் ஈடுபடுகின்றன என்றார். எமக்கு உண்மையில் ஆச்சரியமாய் இருந்தது. மனித வலுவும் முன்னேற்ற வேண்டுமென்ற மனவலிமையும் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்பதற்கு நெடுந்தீவு நல்ல உதாரணம் என்றேன். இல்லை அது மட்டும் இல்லை உங்களைப் போன்றவர்களின் பொருளாதார உதவி ஆலோசனைகள் திட்டமிடல் எல்லாம் எமக்கு பேருதவியாய் இருந்தன.

உலகில் வாழும் பூர்வீக நெடுந்தீவு மக்களுக்கு நன்றி சொல்கிறோம். நாங்கள் தற்போது சந்தோசமாக வாழ்கிறோம் என்ற போது செல்வியின் கண்கள் கலங்கி கண்ணீர் விழுந்தது.

பெருந்தெருவுக்கு அருகாய் குதிரைகள் திரும்பி தெற்கு நோக்கி ஓடின. வடக்கே போகும் இந்த அகலப் பாதை அரச அதிபர் பணிமனைக்கும் நகர சபைக்கும் மற்றும் அரச பணிமனைகள் உள்ள பழைய பிரதான வீதிக்கும் செல்கிறது என்றார் தீபன்.

இலங்கையின் முதலாம் இலக்கக் கிராமசபையாய் இருந்த நெடுந்தீவு கடந்த நான்கு வருடமாக முதற்தரமான நகரசபையாக இருக்கிறது. முப்பதினாயிரம் மக்கள் வாழ்கிறார்கள். பழமையையும் இயற்கையையும் மாற்றாமல் நவீன வசதிகளைப் பயன்படுத்தி மேலும் அவற்றை வளம் படுத்துகிறோம். கல்வி வேலை வாய்ப்பு ஆரோக்கிய வாழ்வு எமக்கு நிறைவாக இருக்கிறது என்றார் மீண்டும் இளங்கோ.

எமக்குத் தரப்பட்ட இலத்திரனியல் குறிப்பேட்டை நான் அடிக்கடி தட்டிப் பார்த்துக்கொண்டேன். அதில் பல்வேறு விடயங்கள் விளக்கப்பட்டிருந்தன. எல்லா வண்டிகளிலுமிருந்த எமது குழுவினர் ஆனந்தமாகப் பார்த்துக்கொணடும் பேசிகொண்டுமே வந்தார்கள்.

விமான நிலையத்திற்கு எதிராய் கண்பார்க்கும் தொலைவில் குவிந்தா கோபுரத்துக்கு அருகாய் எண்ணைக் கிணறுகளுக்கான கட்டுமானப் பணிகள் முடிந்து குழாய்கள் கடலுக்கூடாக இணைக்கப் பட்டிருந்தன. அருகே மின்சாரப் பரிவர்த்தனை நிலையமும் தொலை தொடர்புக் கோபுரமும் காணப்பட்டன. நாங்கள் இப்பொழுது தெற்குக் கடற்கரையோடிருந்த பெருவீதிக்கருகாய் மேற்கு நோக்கித் திரும்பினோம். உண்மையில் மிகவும் ரம்மியமான பொழுதுகள். இனிய கடற்காற்று தெரு இருமருங்கும் கூடல் மரங்கள். சிறு சிறு அங்காடிகள் வெண்மணல் கடற்கரை உல்லாசக் கப்பல்கள் பல ஒரு சிறிய நவீனமான துறைமுகத்தில் இருபக்கமும் கட்டப்பட்டிருந்தன. வீதி தொடர்ந்து நீண்டு கொண்டே போனது. இந்த வீதி எங்கே போகிறது. இப்பெருந்தெரு தீவின் கரை முழுவதும் சுற்றி 30 மைல்கள் வலம் வருகிறது. கடலரிப்பையும் கடல் நீர் உட்புகுவதையும் தடுப்பதற்காயும் எல்லா வீதிகளோடும் இணைக்கக் கூடியதாக போடப்பட்டுள்ளது. கடற் பாறைகள் கோளான் முருகைக் கற்கள். சீமேந்துக் கட்டடத் தூண்கள், பாளங்கள் பலவற்றையும் போட்டு கரையெங்கும் நிரப்பி உள் ளோம். மழைநீர் வெள்ள அபாயம் ஏற்படும் காலத்தில் நீரை வெளியேற்றுவதற்காக அடைக்கக் கூடிய பெரும் பாலங்களைக் கட்டியுள்ளோம் என்றார் தீபன்.

அந்தக் குதிரைகளின் துள்ளல் ஓட்டம் Delft Beach Hotel க்கு முன்னால் நின்றது. ஹோட்டலின் முன் மண்டபம் வரை வந்து இங்கு உங்களுக்கான எல்லா வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. சந்தோசமாக ஓய்வெடுங்கள். நாளைய நிகழ்ச்சி நிரலுடன் அதிகாலை சந்திப்போம் என்று விடை பெற்றனர். பணியாளர்கள் எம்மை அழைத்துப் போய் இரண்டாவது மாடி அறைகளில்

தங்க வைத்தனர். மேலே மூன்று திசைகளையும் பார்க்கக்கூடிய வளைவில் நாங்கள் லயித்துப் போனோம். ஒரு புறம் தூரத்தே நங்கூரமிடப்பட்ட கப்பல்களோடு தெற்குக்கடல் கடலோடு இருந்த ஒரு சிறு குடா நீச்சல் தடாகமாக்கப்பட்டு சுற்றிவர சிறு சிறு உல்லாசக் குடில்கள் மணல் கும்பிகளின் மேல் படர்ந்து கிடக்கும் அடம்பன் கொடியும் பட்டிப் பூக்களும், இடையிடையே கூடல் தென்னையும் பனையும், பூத்துக் குலுங்கும் கொன்றை மரங்களும், காற்றை எதிர்த்து நெளிந்து வளர்ந்து கிடக்கும் இத்தி மரங்களும், பல வெளிநாட்டவர்கள் வந்து போகும் இடமாக நெடுந்தீவு மாறிவிட்டது. வடக்கே பெரியகளி என்னும் நன்னீர் தேக்கமும் அதன் அருகான நிலப்பகுதியில் ஆயிரக் கணக்கில் பேரீச்சமரங்கள் நடப்பட்டு வட்டுக்கள் நிறைந்த காய்களோடும் தெரிகிறது. கொஞ்சம் வடமேற்காய் கூடல் பனைகளும் அதைச் சுற்றி விழுதுகளோடு நிற்கும் ஆலமரங்களும் தெற்காட்டு அம்மன் ஆலயப் பலவர்ணக் கோபுரமும் தெரிகிறது.

100 ஆண்டுகளுக்கு மேலாக பாலைவன நிலம் போல் காட்சியளித்த வெல்லை எவ்வளவு மாறியிருக்கிறது. அழகான வீடுகள் வீதிகள் வடிகால் அமைப்புக்கள் பொழுது போக்குத் தளங்கள் முன்பள்ளிகள், முதியோர் இல்லம், சுகாதார சேவைநிலையம், நூல்நிலையம், யோக தியானப் பள்ளிகள், கடைத்தொகுதி எல்லாம் சேர்ந்து ஒரு கடற்கரை நகராக கலகலத்துக் கிடக்கிறது வெல்லை. கீழே மண்டபத்தில் வெல்லையின் பழைய படங்களும் தொடர்ந்த கட்டுமாணப் பணிகளும் கொண்ட காட்சியகம் ஒன்றைப் பார்வையிட்டோம். உலக நட்புறவுக் கழகத்தின் கூட்டங்கள் உறுப்பினர்களின் படங்கள் கட்டம் கட்டமாய் அட்டவணைப் படுத்தப்பட்டிருந்தன.

இரவு நாங்கள் அனைவரும் கடற்கரை மணலில் குயிந்தா வரை நடந்தோம். நெடுந்தீவில் எண்ணை வளம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு இந்த வருடம் விநியோக ஒப்பந்தங்கள் செயய்ப்பட்டதால் எண்ணை தாங்கிக் கப்பல்கள் தொலைவில் நங்கூரமிட்டிருந்தன. பால் நிலவும் மின்னும் நட்சத்திரங்களோடும் அலை அமைதியாய்க் கரையோடு முத்தமிடுவதும் இடையிடையே கடலில் மீன்கள் துள்ளுவதும் கேட்டுக் கொண்டேயிருந்தன. இரவு மின் ஒளியிலும் வெல்லை மிக அழகாக இருந்தது.

மறுநாள் அதிகாலை பறவைகளின் இனிய பாடல்களின் இசை கதவுகளைத் திறந்து வெளியே வந்தபோது கேட்டுக் கொண்டேயிருந்தன. வெட்டகாடு கூட்டுப்புளிப் பிரதேசத்தைச் சுற்றிப் பறவைகள் சரணாலயம் அமைந்திருப்பதாக அறிந்தோம். வருடாவருடம் வந்து தங்கும் சைபீரியக் கூளைக் கடாக்களும் கிளிகள் மைனாக்கள் கொக்குகள் கொட்டாட்டிக் குருவிகள் ஆந்தைகள் என்று பல்வகைப் பறவைகள் பாதுகாக்கப்படுகின்றன.

காலை உணவின் பின்னர் மேற்கு நோக்கி சாறாப்பிட்டிக்கு போனோம். கடல்

நீரை நன்னீராக்கி வடிகட்டி ஊட்டச்சத்துச் சேர்த்து விநியோகிக்கும் பாரிய நீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டு குழாய்கள் மூலமாக மேற்கு வெட்டகாடு வெல்லைப் பிரதேசங்களுக்கு நீர் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தது. முகாமைத்துவப் பிரதிநிதிகள் எமக்கு பல்வேறு விடயங்களை விவரித்தனர். இதைப் போன்ற மேலும் மூனறு மையங்கள் பனங்காணி முனையிலும் கிழிந்த வேம்படிக்கெதிரே கடற்கரையிலும் குடவிலியிலும் நிறுவப்பட்டுள்ளது என்றனர்.

பின்னர் நாம் கரமத்தைக் கந்தன் ஆலய வீதியால் நெழுவினிப் பிள்ளையார் கோவில்வரை வந்தோம்.
சந்தியின் மேற்கில் நவரட்ணசிங்கம் பல்கலைக் கழகம் தமிழர் பாரம்பரியக் கட்டட வடிவோடு அடுக்குமாடிகள் கலையரங்கம் விரிவுரை மண்டபங்கள் நூலகம் நவீன கணனிக்கூடம் எனக் காட்சியளித்தது. பல்வேறு கற்கை நெறிகளோடு 2000 மாணவர்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். பலரோடு கலந்து பேசி விடைபெற்றோம். பின்னர் பஸ் ஏறி மேற்கே பெரியதுறைக்கு போகும் பாதைகள் இருமருங்கும் எம் கண்ணுக்கு எட்டும் தூரம் வரை அழகான வீடுகள் அதைச் சுற்றிக் கல்வேலிகள் எனக் காணப்பட்டது. பெரியதுறை சற்று உயரமானது. ஆழமான கடல் அதிலொரு துறைமுகமும் மீன் பதனிடும் நிலையமும் குளிரூட்டிய பண்டகசாலையும் கட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

சின்னத்தம்பி தொழில்நுட்பக் கல்லூரி. அவரின் இல்லமான நினைவாலயத்துக்கு அருகாய் நவீன கட்டட நுட்பங்களோடு நிமிர்ந்து நின்றது. புதிய தொழில் நுட்பங்களின் கற்கை நெறிகளோடு மாணவர்கள் பயின்று கொண்டிருந்தனர். அதனைப் பார்வையிட்டு நாம் கரையோரப் பிரதான வீதியூடாக பனங்காணிமுனை வரை போனோம். கடல், தரை பாதுகாப்பு, முதலுதவி, தீயணைப்பு நிலையங்கள் யாவும் அருகருகாய் இருந்தன. வெடியரசன் கோட்டை பாடசாலைகள் கோட்டைக் காட்டுக் கல்லூரி எல்லாவற்றையும் பார்க்க முடிந்தது.

நெடுந்தீவு உண்மையில் நல்ல அழகான ஊர். வெளியார்களின் எந்தத் தலையீடும் இல்லாமல் வளர்ந்துகொண்டிருந்தது. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் இனப்பிரச்சினை முடிவுக்கு வந்து சுயாட்சிப் பிரதேசங்களாக இனங்கள் வாழ்ந்துகொண்டிருந்தன. ஊரில் அளவுக்கதிகமான வாகனங்கள் எதுவும் இல்லை. இருப்பது அனைத்தும் மின்சாரத்தில் இயங்குகின்றன. தொலைக்காட்சி நிலையம் ஒன்றும் வானொலி நிலையங்களும் நடாத்தப்படுகின்றன. எங்களைப் பேட்டி காண்பதற்கும் கலந்துரையாடுவதற்கும் நேரம் ஒதுக்கப்பட்டள்ளது. மூன்று முதியோர் இல்லங்களிலும் 300 க்கும் அதிகமானவர்கள் 100 வயதிற்கு மேற்பட்டவர்கள் நெடுந்தீவின் பழமை பற்றியும் அந்தக் கால வாழ்வு முறைபற்றியும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள முடிந்தது.

மிகப் பழமையான தானிய வகைகளின் உற்பத்தி இயற்கை வேளாண்மையூடாகச் செய்யப்படுகிறது. பேரீச்சம்பழம், தெங்கு பனம் பொருட்கள், பால், மீன் வகைகள், வேதியல் மூலிகைகள், மூலிகை மருந்துகள் என்பன உலகம் பூராவும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மத்தியில் சகல வசதிகள் அடங்கிய வைத்தியசாலையும் வைத்தியக் கல்லூரியும் உருவாக்கப்பட்டுள்ளது. மணற்கடற்கரை மிகத் தரமான உல்லாசத் தளமாக மாற்றப்பட்டுள்ளது. டச்சுக் கோட்டை புனர் நிர்மாணம் செய்யப்பட்டு அருகே அரச அதிகாரிகளுக்கான விடுதியும் கட்டப்பட்டுள்ளது.

சீக்கிரியான் பள்ளத்தில் நவீன விளையாட்டுத்திடல் கொன்ஸ்டன்ஸ்டையின் ஸ்டேடியம் எனப் பெயர் பெற்றுள்ளது. நாம் பனங்காணி முனையிலிருந்து உள்வீதிகளின் வழியே ஓமலாக் காட்டுச்சந்திக்கு வந்தோம். தெற்கே வெட்டகாடு பசுமையாய்த் தெரிந்தது. வீதிக்கு இருபுறமும் தாமரைத் தடாகம் பூத்துக் கிடந்தது. செங்கால் நாரைகளும் கொக்குகளும் பறந்து திரிந்தன.

வடக்கே தெரிந்த வாசல் எங்களை வரவேற்றது. செல்லம்மா நாகேந்திரர் வாழும் கலை மன்றம்' அது. இந்த ஆயுர்வேத மூலிகைகளின் காப்பகத்துக்கு ஏறக்குறைய 20 ஏக்கர் நிலம் மூலிகை செய்கைக்கென ஒதுக்கப்பட்டிருந்தது. மூலிகை மருந்துகள் பலவற்றைக் கண்டுபிடிப்பது கொடிய நோய்களைப் போக்குவது, யோகாசனம், மூச்சுப்பயிற்சி, மனவளக்கலை, தியானம், வரம் கலை ஓவியம் சிற்பம் இசை, கூத்து, பரதக்கலை என்ற ஒரு சித்தர் கால வாழ்க்கையை தேடும் அற்புதமான கூடங்கள். பழம் பெரும் பொக்கிசங்களின் எல்லா வடிவங்களையும் தன்னகத்தே கொண்ட இடமாகவும் ஆய்ந்தறியும் இடமாகவும் இருந்தது. மாலை முழுவதும் பயிற்சிகளில் ஈடுபட்டோம். இரவு உணவை நாம் அங்கேயே உண்டோம். காய்கறிகள், இலைகுழைகள், காளான், வீணாலை, தும்பை, தூதுவளை, குறிஞ்சா, ஆடாதோடை, பிரண்டை, கொவ்வை, கற்றாளை, நாகதாளி, பனம் பொருட்கள், பதனீர், சாமை, வரகு, மொண்டி, கேப்பை, பருப்பு வகைகள், பாலுணவுகள் என்று 16 விதமான உணவுகள் பரிமாறினார்கள். அருமருந்தான மூலிகைகள் செய்யப்பட்டு புற்று நோய் மனநோய்கள் மர்மநோய்கள் எனப் பலவற்றுக்கு மருந்துகளும் ஆற்றுப்படுத்தலும் செய்து கொண்டிருக்கிறார்கள். பின்னர் நாம் அதே வீதி வழியாக கிழக்கே மாவிலித்துறை வரை வந்தோம். இருபக்கமும் கடைகள் வீடுகள் அலுவலகங்கள் வைத்தியசாலை பொதுச்சந்தை கிறிஸ்தவ தேவாலயங்கள் என்று எங்கும் நிறைந்து கிடந்தது. கிழக்கே மாவிலித் துறைக்கு அருகாய் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் ஆய்வு மையம் உலக மொழிகளையும் தமிழர்தம் குடிப்பரம்பலான தொல்பொருள் காட்சியகத்தையும் பழந்தமிழ் நூல்களையும் புதிய பல நூல்களையும் கொண்ட பிரமாண்டமான நூலகத்தையும் பார்வையிட்டோம்.

குடவிலியில் ஒரு உல்லாச விடுதியும் மகாநாட்டு மண்டபமும் கட்டப்பட்டு இருந்தது. கிழக்கே அந்தோனியார் கோவிலிலிருந்து தொட்டாரம் வரையான பகுதி முத்து விளையும் இடமாக அறியப்பட்டிருந்தது. தொட்டார முனையிலிருந்து மன்னார் வளைகுடா வரை பவளப் பாறைகளின் இடமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மக்களின் அயராத உழைப்பும் தீவை முன்னேற்ற வேண்டுமென்ற உத்வேகமும் அவர்களிடத்தில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையும் அவர்களை ஓர் அமைதியானதும் ஆரோக்கியமானதுமான வாழ்வுக்கு இட்டுச் சென்றுள்ளது. எல்லோரும் பல்வேறு பணிகளோடு உரிய வருமானங்கள் பெற்று சந்தோசமாக வாழ்கிறார்கள். புலம் பெயர்நத் மக்கள் அவர்களுடன் கைகோர்த்துச் செயற்பட்டால் இன்னும் பலமாக அவர்கள் வெல்வார்கள். நாங்கள் இன்னும் இரண்டு மாதங்கள் தங்கியிருந்து பல்வேறு கலந்துரையாடல்களையும் ஆய்வுகளையும் நடாத்தவுள்ளோம். அழகான எம் தீவை ஒரே நாளில் பார்த்தே இவ்வளவு அற்புதமாய்க் காட்சிப்படுத்த முடிகிறதென்றால்....

என் நண்பர்கள் பலருக்கு புகைப்படங்களோடு முகநூலில் செய்தி அனுப்பியுள்ளேன். என் தீவின் கதை வெறும் கனவுகளல்ல. உண்மைகளாய் உன்னதம் பெறும்.

ஒரு பெருங்கதையோடு உங்களைச் சந்திக்கிறேன்.

நன்றி

*த.சாள்ஸ் குணநாயகம்*

# தமிழ் ஊற்று தனிநாயகம் அடிகளார்



தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளார் அவர்கள் 1913ம் அண்டு ஆவணித் திங்கள் இரண்டாம் நாள் நெடுந்தீவு ஊர்காவற்றுறை கென்றிஸ் ரனிஸ் லோஸ் சிசிலியா தம்பதிகளின் தவப்புதல்வனாகத் தோன்றினார்.

நற்றமிழ் என்னும் நல்லதொரு தூணிலே சிற்றுளி வேலை செய்த சிற்பி அவர் தெய்வப் புகழ் நிரம்பித் திகழ்ந்த தமிழன் ஒளி சத்திய நெறி கண்டு சன்மார்க்க முத்தமிட்டு முத்தி நகரின் முடிகண்ட மெய்ஞ்ஞானி பாரினில் பயிலும் பல்மொழிகளாயும் ஆராய்ந்து அதன் வேரை அகழ்ந்து விதை கண்ட மாமேதை நுழத்திரு நகரின் உயர்கலை புலமையை ஞாலத்தில் பரப்ப வந்த நறுமணத்தின் பூங்காற்று கலை வாழ்வின் பெருங்கலைஞன் இலக்கியத்தேன் வரலாற்றை வடித்து வைத்த வல்லாளன். மாதுறவு வேண்டாமல் மண் பொன்னைத் தீண்டாமல் பெருந்துறவு பூண்ட மாமனித குரு வாழும் தலைமுறைக்கு வாய்த்ததொரு நூல் நிலையம். நாளும் நடமாடும் பல்கலைக்கழகம். அவர் வரலாறு என்றும் வாழிய வாழியவே அவர் விழுதுகள் மேலும் வளர வாழ்த்துவோம்.

*மாவிலி துரைராசா கிறிஸ்ரி*
*பொருளாளர்.*
*நெடுந்தீவு ஒன்றியம்.*
*ஐக்கிய இராச்சியம்.*
*01.03.2014*

# புலம்பெயர் தமிழரின் பரம்பரை இடைவெளி

அம்மா, அப்பா, பேரன், பேத்தி, பூட்டன், பூட்டி என்று பின்நோக்கி நீண்டு கொண்டிருக்கின்றது. சங்கிலித் தொடரான மனித உறவு, அந்த உறவின் அடிப்படைப் பரம்பரை பாரம்பரியத்தின் அடித்தளத்தில் இருந்து வேறுபடுத்த முடியாத மிக முக்கிய இனக்குழுமத்தில் ஒன்று நமது தமிழ் இனம் நாம் புலம்பெயர்ந்து பல தேசங்களில் பல்வேறு சூழல்களில் பல்வேறு அரசியல் சமூக, பொருளாதார தகுதிகளுக்மைய உலகம் தலையை உயர்த்திப் பார்க்கின்ற அளவுக்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதும் மறுக்கமுடியாத உண்மை. அந்த எண்ணச் செருக்கோடு மட்டும் மார் தட்டிக் கொண்டு நமது பரம்பரை உறவுகளுக்குள் உள்ளாகிக் கொண்டிருக்கின்ற இடைவெளிகள் விரிந்து செல்கின்ற விதத்தைப் பார்க்கத் தவறி விடுகின்றோம். இந்த நிலை நீடிக்கின்றபொழுது இந்த வகையில் வெகுவிரைவில் மற்றைய இனங்களையும் கூட விஞ்சிடுவோம் என்பது உறுதி.

வெறுமனவே இலக்கியங்களையும் வரலாறுகளையும் புரட்டிப் புரட்டி பேச்சலங்கார கலாசாரமாக மட்டும் அவற்றை வைத்துக்கொண்டு, கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி என்று எங்களுக்குள் நாங்களே பெருமைகள் பேசிப் பேசி அந்தப் பழந்தமிழருக்கான அடிப்படைத் தகுதிகளையே தொலைத்துக் கொண்டிருக்கின்றோம் என்கின்ற உண்மையை உணருவதற்கு இன்று தமிழினமே தயாராக இல்லை. அதிலும் புலம்பெயர்ந்த நாம் ஒருபடி மேல்சென்று அதை நிரூபித்துக் கொண்டிருக்கின்றோம்.

புலம்பெயர்வால் நிகழ்ந்து கொண்ட இருப்பிடங்களுக்கான இடைவெளியின் தூரங்களைக் காட்டிலும் ஒன்றாய் இருந்து கொண்டே தூரமாகிப்போன மனப்பெயர்வுகளின் இடைவெளிகளின் தூரம் அதிகமாகி இருக்கிறது. கண்டங்கள் தாண்டியும் கடந்து செல்லக் கூடிய அளவுக்கு உறவுகளுக்குள்ளான மனிதமும், விசுவாசமும் மரணித்துக் கொண்டிருக்கிறது. அம்மா, அப்பா, அக்கா, தங்கை, அண்ணன், தம்பி என்று உறவு சொல்லி அழைத்த உயர்ந்த சொற்பதங்களெல்லாம் வெறுமனவே குறித்தளைக்கும் பெயர்ச்சொற்கள்போல் பெறுமதியற்றதாக மாறிக்கொண்டிருக்கிறது. அன்பு, ஒழுக்கம், அறநெறி என்கின்ற வலுவான திட்டமிட்ட சமூகத்தடங்களில் பயணித்துக் கொண்டிருந்த தமிழினம் சமீபகாலமாக பணம், பேராசை, போலித்தனம் என்கின்ற திட்டமிட்டு வடிவமைக்கப்படாத காலத்தேவைகளி னாலான சறுக்கல் தடங்களில் மிக நம்பிக்கை பொண்டு வேகமாக நடக்கத் தொடங்கியிருக்கிறது.

காலங்காலமாக பல வரலாறுகளும், இலக்கியங்களும் வாழ்க்கை நெறிகளை ஆணித்தரமாக வரையறுத்துச் சொல்லிக்கொண்டிருந்தாலும் அவற்றை அறிந்து கொண்டிருந்தும் அந்த உண்மைகளுக்கும், நெறிகளுக்கும் நாம் சம்பந்தமற்றவர்களாக வாழ வரிந்து முறைத்துக் கொண்டிருப்பதுடன் மிக வேடிக்கையானது. இற்றைக்கு கடந்த இரண்டாயிரம் ஆண்டு களுக்கும் இடையில் சமூக, சமய, பொருளாதார, விஞ்ஞான, அறிவியல்

தளங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் பூமி என்கின்ற தாங்கு தளத்தில் நின்று நிமிரந்து கொண்டுதான் தனக்கும் அப்பாற்பட்ட விசயங்யைக் கூட ஆய்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் நாம் அருகில் இருக்கும் ஒருவரை பற்றி அறிந்து கொள்வதற்குக் கூட ஒரு மனோதத்துவ விஞ்ஞானியின் அளவில் சிந்திக்க வேண்டியிருக்கிறது. முனிதன் என்ற மந்திரவாதியின் மனதுக்குள் வெளியில் பகிர்கொள்ளப்படாத நிறைய விசயங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதுான் உறவுகளினதும் தொடர்ச்சியான பரம்பரையினதும் விரிசல்களுக்கு வித்தாகி விடுகிறது.

உறவுகளுக்குளே ஒருவருக்கொருவர் ஒரே பாலாராயினும் விரும்பி வலித்து பேசிக்கொள்கின்ற மனோநிலை இல்லாதிருப்பது நாகரீகத்தின் ஒரு பரிணாம நிலை என்று நம்புகிறவர்கள் அதிகரித்துக் செல்வலும் உறவுகளுக்கான நிலை குறைகளை ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசி பரஸ்பரம் பகிர்ந்துகொள்கின்ற பக்குவம் இல்லாமை. அடுத்தவர் குறைகளை ஆனந்தமாக ரசிக்கத்தெரிந்த அளவுக்கு எமது குறைகளை அடுத்தவர் கட்டிக் கொட்டுகின்றபோது அவர்மீது ஆத்திரப்படுகின்ற நடுநிலையற்ற மனப்போக்கு, கல்வி, செல்வம் அல்லது இரண்டும் நிறைவாக இருப்பவர் தமது சுயவிபவரம் இல்லாது கருத்துரைக்கும் தன்மை அல்லது அவர்களது கருத்தை முகத்திற்கஞ்சி மீளாய்வற்று அப்படியே ஏற்றுக்கொள்கின்ற நிலமை, துறை சார்பற்ற அறிவுரைகளும் வழிகாட்டல்களுமென பல ஆதார அலகுகள் உறவுகளுக்குள்ளான பரம்பரை இடைவெளிகள் உருவாகக் காரணமாய் அமைந்துவிடகின்றன.

புலம்பெயர் தேசங்களில் தனித்திறன் தகுதிகளுக்கு அப்பாற்பட்டு பலரின் அடிப்படைத தேவகைள் தீர்வை எட்டிவிடுகின்ற காரணத்தினால் எல்லோரும் சமமே என்கின்ற ஒரு மேலோட்ட கருத்தோங்களுக்குள் தள்ளப்பட்டு அறிவு, ஆற்றல், திறமைக்கு உறவுகளிடையே சரியான அங்கீகாரம் கிடைக்காத விடத்தும் உறவுக் கூட்டங்கள் மனதளவில் மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்கின்றன.

மனிதனுடைய வாழ்க்கைக்க அர்த்தம் தருகின்ற அடிப்படை ஆதரவு அலகுகளான தேவை, தெரிவு, தேடல், தீர்வு என்ற நான் பரிமான கூட்டுக் கூம்பகத்தின் உயரத்திற்கும் தரத்திற்கும் அவனுடைய பொளாதாரமே முக்கியமானதாயும் பெரும்பாங்கையும் ஆற்றுகின்றது. குறிப்பாக புலம்பெயர் தேசங்களில் அல்லது புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்றவர் சம்பந்தப்பட்ட தாயக சூழலில் தெரிவும், தேடலும் இல்லாது தேவைகள் தீர்வுக்குள் விரைந்து விடக்கூடிய ஒரு இலகு தன்மையை உழைப்பற்ற பொருளாதா காரணிகள் நிறைவேற்றி விடகின்றன. இதனாலேயே பல சந்தர்ப்பங்களில் மனப் பகிர்வுகளுக்கான அடிப்படை மனிதப்பண்பு மறையத் தொடங்குகிறது. பின் அதுவே உறவுகளை பிரிந்தும் தனித்தும் இயங்கத் தயார்ப்படுத்தி விடுகிறது. இது இவ்வாறிருக்க சற்று பின் சென்று அறுபது எடுபதுகில் எமது தாயக உறவுகளை உற்று நோக்கினால் அவர்கள் மத்தியில் பொறுப்பேற்றல் அல்லது பொறுப்புக்கூறல் என்ற வலுமிக்க ஒரு மனிதநேயப் பண்பு பரந்து பட்டிருந்தது ஆனால் புலம்பெயர் தேசங்களில் பல தனிப்பட்ட

காரணங்களினால் இப்பண்பு பயன்படாமலேயே போனதும் உறவுகளுக் குள்ளான பரம்பரை இடைவெளிகளை வலுக்கொள்ளச் செய்கிறது.

பாரம்பரியமாக தமிழ் உறவுகளின் மேன்மைக்கும் சிறப்புக்கும் அவர்களின் பொருளாதார நிலையும் பொறுப்புணர்வுமே மிகப்பெரிய பங்கை வகித்திருந்தது. பொருளாதாரமில்லாத பொறுப்புணர்வும், பொறுப்புணர்வில்லாத பொருளாதார மும் உறவுகளை வலுப்பத்தியதாக இல்லை. இரண்டும் சரியான விகிதாசாரத்தில் சேரந்துகொண்டல் உறவுகளின் தன்மைக் கேற்றவாறு அவை வலுப்பெற்றக்கொள்கின்றன. விகிதாசாரங்களில் முரண்பாடுகள் காணப்பட்டால் உறவுகளின் நெருக்கத்தில் நலிவுத் தன்மை ஏற்பட்டு உறவுக ளுக்குள் இடைவெளிகள் தோன்ற ஆரம்பித்துவிடுகிறது. புலம்பெயர் தேசங்களைப் பொறுத்தவரையில் தமிழ் உறவுகள் இந்தத் தளத்திலிருந்தே தங்களுக்குள்ளான இடைவெளிகளை உருவாக்க ஆரம்பித்துக் கொள்கிறார்கள். குடும்பங்களுக்குள் அல்லது உறவுகளுக்குள் பரந்து பயன்பட்ட பொருளாதாரமும், பொறுப்புணர்வும் காலப்போக்கில் குறிப்பாக புலம்பெயர் சமூகத்தில் நாம் அல்லது நான் என்ற குறுகிய வட்டத்திற்கு மட்டும் பயன்படுத்தத் தொடங்கியது. ஆதன்காரணமாகவே உறவுக ளுக்குள் இறுக்கமாக இளைபோடியிருந்த விசுவாசம் என்கின்ற விறைப்பான பகுதிகூட விரிசல் கண்டதும், அதற்கு ஆதாரமாக அம்மா, அப்பா உறவுகளே தனித்தீவுகளாகி அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பதையும் காணலாம்.

குடும்ப உறவுகளின் உச்சமாக கருதப்பட்ட கூடிவாழுதல் என்ற கூட்டுக்குடும்பச் சூழல் இன்று இல்லாதபோதும் ஆங்காங்கெ நிகழ்கின்ற குடும்ப நிகழ்வுகளை, விழாக்களை உறவுகளுக்குள்ளான ஒரு பாலமாக கருதினாலும் அவற்றை உற்றநோக்குகின்றபோது பல சமயங்களில் நிகழ்வுகளின் கலகலப்பிற்கும் நினைவுப்பதிவுகளுக்குமான ஒன்றாகவே நிகழ்த்தப்படுவதாக இருக்கிறது. விதிவிலக்குகள் நீங்கலாக எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கின்றது என்ற புலம்பெயர் தமிழரின் பொதுவிதிப்படி சார்ந்திருந்தால் நிலை எல்லா மட்டங்களிலும் தடுமாற்றம் பெற ஆரம்பிக்கின்றது. இதுவே புலம்பெயர் தமிழர்களின் அடிப்படைத் தேவைகள் தீர்வாக முளைக்கின்ற முதலாவது முரட்டுக் கொம்புமாகும். பொறுப்பான பாரம்பரிப்பில்லாத எந்தக்கொம்பும் பயன் பெறாது என்ற உண்மையை எந்த உறவும் உணராத வரைக்கும் உறவுகள் என்பது திருமண மற்றும் வைபவ நிகழ்வுகளில் நிறைந்து புகைப்படங்கள் மற்றும் வீடியோ எடுப்பதற்கும், மரணச் சடங்குகள் பந்தம் பிடிப்பதற்கு மட்டுமே பயன்படும் என்பதில் ஐயமில்லை.

சும்மா கிடந்த கம்பிகளை சூலங்களாக்கியதும்
சூலங்கள் பின்னாளில் ஆடு, கோழி கேட்ட அவலங்களும்
புலம் பெயர் தமிழரின் முக்கிய பண்பாட்டு விழுமியங்களில் ஒன்றாகும்.

*நெடுந்தீவான்*

# நெடுந்தீவே வாழி

நாற்புறமும் அலையெழுந்து தாலாட்டுப் பாடி
நறுந் தமிழில் சரஞ்தொடுத்து மாலைகளாய் சூட்டி
பூக்களுடன் பாற்குடங்கள் பூ முனையில் ஏற்றி
பூசை செய்து ஈசன் கழல் புகழ் மாலை சாற்றி
நோற்பிருந்து புகழ்களித்த நூலோர்கள் வாழ்ந்து
நூற்றிருந்த தவத்திலொரு தனிநாயகம் தோன்ற
பூத்தமலர் முகம்செழிக்கும் மாவிலியின் முகப்பில்
புகழ்கொழித்துப் பெருமை கொள்ளும் நெடுந்தீவே வாழி

தென்னையுடன் பனைமரங்கள் தேன்சுரக்கும் இளநீரும்
தினைவரகு சாமையுடன் வரகு மெண்டி விளையும் நிலம்
ஆவோடு கன்றுதுள்ள அடல் ஏறும் குதிரை மேய
அருமருந்தாம் மூலிகைகள் நிறைந்திருக்கும் திருநாடே
அன்னியர்கள் ஆண்டிருந்த அழகுமிகும் கோட்டையும்
அரியபல புறாவினங்கள் அமைந்திருக்கும் கூட்டையும்
பொன்னின் நதி ஊற்றெடுக்கும் மணற்கேணி அருகில்
பொது மருத்துவ மனையமர்ந்த புகழ் கொண்ட எம்நாடு

தூண்காலை குதிரைலாயம் தூயலோறஞ்சியார் கோவில்
காண்இடுகாடு முனைக் கச்சதீவின் கொடிதெரியும்
வான்மழை பொழிந்த அமிழ்தில் வற்றாத சாறாப்பிட்டி
பூதம்பொழி கிணற்றினோடு புதுமைபல கொண்ட நாடே
ஆதிமனிதன் கால்பதித்த அடையாளம் அழியாதின்றும்
சாதி மதபேதம் இல்லா சமயங்களால் ஒன்றுபட்டோர்
நீதி கொண்ட பூதத் தம்பி நீண்டபெரும் சரித்திரத்தை
ஓதி ஓதி ஒன்றுபட்டே ஒற்றுமையாய் வாழும் நாடே

நெடும்பனங்காணி வளம் குறையா தெங்கள் பூமி
ஓடும் கால்நடையின் உறைவிடங்கள் தரவையெல்லாம்
பாடும் மீன்கள் துள்ளும் பரந்த மணல் வெல்லைப் பக்கம்
ஆடும்பெரு நாகங்களும் அணிதிரளும் முல்லை வனம்
கூடிமுயல் கூட்டம் வைக்கும் குயிந்தாவடி காட்டினிலே
ஆதி சிவனார் அமைந்த அழகான பூவரசம் காடு
ஆலமா வனம் அமர்ந்த ஆனைமுகனின் பெரும் பதியை
கோலமுடன் வந்து கும்பிடுவோர் குறைகளகற்றும் தீர்த்தக்கரை

காடுவரை பிள்ளை வந்த கடைசி கடன் கட்டிறாஞ்சல்லி
ஆட்டுநிரை மேய்ந்து வரும் அழகான பெருக்குமரம்
கொத்தி இரவதையும் குண்டு களம் தாமிளாப்பும்

வெட்டுக் களி கடந்தால் எட்டி வரும் ஊர்மனையும்
நெட்ட நெடு நெழுவினியான் நீண்டு பரந்த பனஞ்சோலைம்மா
ஐந்துவட்டுப்பனை கடந்தால் அழகன் கரம்பத்தை முருகன் பதி
ஏரி சுனைகள் கடந்து வந்து ஏறும் குருக்கள் மடத்தடியில்
நீடுபுகழ் பெரிய புலத்தையன் அருள் புரியும் நெடுந்தீவே

ஆடியமாவாசை தேடிவரும் எங்கள் ஆவூர்வாழும் அடியவர்கள்
காளிகோயில் சென்று தீர்த்தமாடி கடன் காணிக்கை தூவும் திருநாடே
கண்ணகி வாழ்ந்த வரலாற்றைக் காலங்கள் தோறும் அரங்கேற்றும்
பொன்னகர் தெக்காட்டு மாரியம்மன் பொங்கல் திருவிழா காண்போமே
வண்ண வண்ணப் பலகொடிகள் கட்டி வந்து போகின்ற அடியவர்கள்
கண்ணில் ஒற்றிக்கொள்ளும் யுதாதேயு கடற்கரையின் காவல் தெய்வமம்மா
அற்புதங்கள் பெற்ற திருநாடு அருள்வளம் பற்பல கொண்டிருந்தே
உற்பவங்கள் தரு திருநாடு உந்தன் பொற்பதங்கள் என்றும் வாழியம்மா

கீழ்க் கிழக்குக் கடற்கரையில் கேட்டவரம் தரும் அந்தோனியாரும்
மாவிலிகோட்டைச் சவேரியாரும் மாதா திருத்தாயின் பவனிகளும்
சஞ்சுவானியார் சந்தியோகுமையர் சூசையப்பர் திருப்பவனி
நெஞ்சுமறவாத சீக்கிரியாம் பள்ளம் நீண்டபுகழ்தரு திருநாடே
பாடசாலைகளும் கோவில்களும் பக்குவமான பரம்பரையை
நீடு புகழோடு ஆக்கி விட்ட நீள நெடுந்தீவு வாழியவே
உண்டு உழுது உழைத்தவர்கள் உறுதியுடனிங்கு வாழியவே
வீரபத்திரர் பிடாரியம்பாள் வீற்றிருக்கும் நெடுந்தீவே வாழி

*நெடுந்தீவகன்*

# தனிநாயக அடிகள் பற்றி மறக்கமுடியாத நினைவுகள் சில

ஒரு நாள் மாலை வேளையில் யாழ்ப்பாணத்தில் தனிநாயகம் அடிகளாருடன் போய்க் கொண்டிருக்கும்போது ஒரு பிரபல பாடசாலையின் பரிசளிப்பு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. சுமார் ஏழு மணியிருக்கும். "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் ..." எனும் பாரதியாரின் கவிதை ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. வண்டியை ஓரமாக நிறுத்துமாறு கூறி மோட்டார் வாகனத்தில் இருந்தவாறே நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

பாரதியாருக்கு எத்தனை மொழிகள் தெரியும்? எனக்கேட்டார் அதற்கு நான் விபரம் தெரியாது! தமிழ் தான் தெரிந்திருக்க வேண்டும் மாமா எனக் கூறினேன். தாரதியார் ஆங்கிலம், கன்னடம், பிரஞ்சு, தெலுங்கு, துளு, மலையாளம், தமிழ் போன்ற பல பாஷைகளில் பாண்டித்தியம் பெற்றவர். திறமை சார்ந்த புலவர் எனவே அவர் பல பாஷைகளைத் தெரிந்து படியினாலேதான் யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று கவிதை புனைந்தவர் எனவே பாரதியார் பாடியதில் அர்த்தம் உண்டு. எனவே பல மொழிகளைக் கற்றல் வேண்டும். அப்போதுதான் தமிழின் இனிமையும் அதன் சுவையும் புரியும். வேறு மொழி தெரியாது இவ்வாறு சொல்வதில் அர்த்தமில்லை என்றார்.

சிறு குழந்தைகளை பணியாளர்களுடனோ அல்லது வேற்று நபர்களுடனோ விட்டுவிட்டு தாய் வேலை பார்க்கச் செல்லுவது அக்குழந்தைகளைப் பாதிக்கும் என்பது அவரது கருத்து. சிறு வயதில் தாயின் அன்பும், அரவணைப்பும் ஆகக்குறைந்தது ஐந்து வயது வரை அவசியம் தேவை என்பார். அவர்களுக்கு வேண்டிய அன்பு வேலைக்காரர்களால் அளிக்கப்பட மாட்டாது. இதனால் பிள்ளைகள் மன வளர்ச்சியடைய மாட்டார்கள். அன்பு, அரவணைப்பு, ஆதரவின்றி குழந்தைகளின் நலம் பாதிப்புக்குளாக வாய்ப்புண்டு என்பார். எனவே தாயன்பு அவசியமானது என்பது இவரது விருப்பமும் கருத்துமாகும்.

நாம் உரையாடும்பொழுது வேற்று மொழச் சொற்களை கலந்து பேசுவது விரும்பாத ஒன்றாகும். ஆங்கிலத்தில் பேசினால் ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்றும் தமிழில் பேசினால் தூய தமிழில் பேசவேண்டும் என்பார். தவறி நாம் பேசினால் குறும்பாகச் சிரிப்பார்.

தமிழ் மொழியின் இனிமையையும் அதன் சுவையையும் தமிழ் மக்களுக்கும், உலகிற்கும் எடுத்துக் கூறியவர்களில் தனிநாயகம் அடிகள் ஒருவர். பாரதியாரின் கனவை நனவாக்கியவர். இவரின் தந்தையார் நாகநாதன் கணபதிப்பிள்ளை நெடுந்தீவைச் சார்ந்தவர். தாயார் கரம்பனைச் சார்ந்தவர். அடிகளாரின் தந்தையார் தனது பன்னிரண்டாவது வயதில் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக் கொண்டார். தனது இந்துப் பெயருடன் கென்றி ஸ்ரனிஸ்லஸ் எனும் பெயரையும் இணைத்துக் கொண்டார். கத்தோலிக்க சமய குருமார் நெடுந்தீவில் வேலையாற்றிய பொழுது

“திண்ணைக் குத்து” கல்வி முறை நிலவியது. பல சிறுவர்களை ஒன்று சேர்த்து கல்வி கற்பிக்கும் முறையே அது. பாடசாலை வழக்கத்தில் இருக்கவில்லை. குருவானவர்கள் இம்முறையைப் பின்பற்றி அங்குள்ள சிறுவர்களுக்கு கல்வி புகட்டி வந்தனர். இக்குருவானவர்களால் ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டது. சமய வேறுபாடு இன்றி சகலருக்கும் இக்கல்வி ஆரம்பிக்கப்பட்டது. இவரின் தந்தையாரும் இங்கு சென்று கல்வி கற்றார். இதனால் அங்கு பணியாற்றிய வனி. பிதா ஸ்ரனிஸ்லஸ் சந்திரசேகரம் என்பவருடன் தொடர்பு ஏற்பட்டது. குருவானவர்க்குப் பால் தேவைப்பட்ட போது சிறுவனின் உதவியை நாடினார். புட்டியில் இருந்து குருவானவருக்கு பால் அனுப்பி வைத்தார். குருவானவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் ஏற்பட்டது.

பிள்ளையார் கோவியில் தனது வழிபாட்டை முடித்துவிட்டு தினமும் கிறிஸ்தவக் கோயிலுக்கும் சென்று வழிபடத் தொடரங்கினார். இதைப் பெற்றோர் அறியவில்லை. தினமும் மலர் வைத்து விபூதி பூசியபடியே சென்று மாதாவின் சொரூபத்தின் முன்னின்று வழிபடுவார். இதனை அவதானித்த குருவானவர் கிறிஸ்தவ சமயத்தை தழுவும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் அவர் மறுத்து விட்டார். தனது கல்வியின் ஆர்வத்தினாலும் ஆங்கிலத்தின் மீது அதிக விருப்புக் கொண்டதனாலும் தன்னை யாழ்ப்பாணப் பாடசாலை ஒன்றில் சேர்ந்து விடும்படி கேட்டுக் கொண்டார். குருவானவர் மகிழ்வுடன் சம்மதம் தெரிவித்தார். இவர் சமயம் மாறுவதை பெற்றோர் விரும்பவில்லை. ஆனால் கல்வி கற்பதற்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தார். புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியை கற்பதற்கு அனுமதிக்கப்பட்டார். ஆறு மாதத்துக்கு ஒரு தடவையே அவரது பெற்றோரும், சகோதரரும் சென்று பார்த்து தேவைகளை பூர்த்தி செய்துவிட்டுப் போவார்கள். கடும் காற்று காரணமாக அடிக்கடி கடற்பிரயாணம் செய்ய முடியாது போனதே இதற்குக் காரணமாகும்.

மாதாவின் மேல் கொண்ட பக்தியினால் குடும்பத்தினருக்குத் தெரியாமல் தம் மாறிக் கொண்டார். இதை அறிந்த பெற்றோர் இவரை அழைத்துச் சென்று குருவானரவ் மீது வழக்குத் தொடர்ந்தனர். விசாரணையின் போது தன் சார்பில் தானே விடயத்தை எடுத்துக் கூறுவதாக நீதிபதியிடம் கூறினார். நீதிபதியும் சம்மதம் தெரிவித்தார். எந்த ஒரு குருவானவரின் வற்புறுத்துதலினாலும் நான் மதம் மாறவில்லை. நான் என் சொந்த விருப்பத்துடனும் முழு சம்மதத்துடனுமே தம் மாறினேன் எனக் கூறியதுடன் அதன் விபரங்களையும் எழுதிக் கொடுத்தார். வழக்கு தள்ளுபடியானது.

ஆங்கிலத்தில் திறமை மிக்கவராக விளங்கியதால் பயிற்றப்பட்ட ஆசிரியராக பயிற்சி பெற்றார். புனித பத்திரிசியார் கல்லூரியிலும், பேசாலை, நீர்கொழும்பு போன்ற இடங்களிலும் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றினார். மிருசுவில் எனும் கிராமத்திலும் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றினார். இவரது பெற்றோர் இவரது செய்கையால் கோபமடைந்தனர். இவருடன் தொடர்பு கொள்வதை நிறுத்திக் கொண்டனர். தான் ஒரு குருவாக வர விரும்புவதாக ஸ்ரனிஸ்லஸ் அடிகளாருக்கு கூறியபோது அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார். திருமணம் செய்ய வேண்டும் என ஸ்ரனிஸ்லஸ் அடிகள் அவரைக் கேட்டுக் கொண்டார். அடிகளாரின் தந்தை கிறிஸ்தவனாக மதம் மாறியதினால் இவரது உறவினர் பெண் கொடுக்க மறுத்து

விட்டனர். இதனால் இவர் மதம் மாறுவதற்கு உதவிய குருவானவரே தன் இனத்தவர்களுள் பெண் பார்த்து திருமணம் செய்து வைத்தார். இவர் கரம்பனைச் சார்ந்தவர். தன்னால் ஒரு குருவாக வரமுடியவில்லை என்று மிகுந்த கவலையடைந்தார் கணபதிப்பிள்ளை. எனினும் தமக்கு ஓர் ஆண் மகன் பிறந்தால் அவரை குருவாக்குவது என நேர்த்தி வைத்துக் கொண்டார். ஆண் மகன் பிறந்தபோது மட்டற்ற இன்பமடைந்தனர். அவர்தான் பேசியர். ஆனால் சேவியர் தான் குருவாவதை விரும்பவில்லை.

பெற்றோர், தான் பிறக்குமுன் வைத்த நேர்த்தியை தான் நிறைவேற்ற வேண்டியதில்லை எனக்கூறினார். பல குருக்களிடம் சென்று இது பற்றி ஆலோசனையை அறிந்து கொண்டார். குருக்களும் உமக்கு விருப்பமிலலை என்றால் நீர் குருவாகத் தேவையில்லை. அது உம் விருப்பம் எனக் கூறினார்கள். தன் ஓய்வு நேரங்களில் புனித பத்திரிசியார் கல்லூரியின் அருகிலுள்ள சேமக்காலைக்கு எதிரேயுள்ள பூவரசம் மரத்தடியில் நின்று யோசித்துக் கொண்டிருப்பார். ஒரு முறைதான் ஒருவர் இவ்வுலகில் பிறக்க முடியும். மீண்டும் மறுபடியும் வாழ்ந்து பார்க்க முடியாது என்று அடிக்கடி இவரது மனதில் அலை பாய்வதுண்டு. எனவே தனது முடிவை மாற்றிக் கொண்டார். தன் பெற்றோருக்கு தான் குருவாகப் போவதாக சம்மதம் கொடுத்தார்

புத்தருக்கு அரச மரத்தடியில் ஞானம் பிறந்தது. மாமா உங்களுக்கு பூவரச மரத்தடியில் ஞானம் பிறந்தது என்று ஒரு நாள் அவரிடம் சொன்னேன். அவரது அழகிய கனிர் என்ற சிரிப்பு பதிலாக வந்தது.

*திருமதி N. இராசரத்தினம்.*
*Dip. Montessari & Pre School*

# தாய் நிலத்து பிரசவம்

தாய் மண் கனவுகள்
தகர்க்கப்பட்ட புலத்துவாழ்வு
இயந்திரமாய்
ஏக்கங்களுடே நகர்கிறது
இரண்டு தசாப்தங்களின் வலி
காலடிவைப்பதற்கான காத்திருப்பாய்,
ஏது நிகழுமோவென்ற துயருடன்தான்
தரிசிக்கக் கிடைத்தது

எமது பூர்வீக நிலம்,
ஆறிவிட்டதாய் சொல்லப்பட்ட காயங்கள்
மூடிமறைக்கப்பட்டு
மௌனத்தில் உறைந்துபோயிருந்தது
கிராமத்து துறைமுகம்
அழகையும் அமைதியையும் காணாது
கடற்காற்று வருடிய கரைகள்
சுகத்தைத் இழந்திருந்தது

கலகலப்பாய் இயங்கிய மாவலி
நிரந்தர இருப்புக்காய்
அரண்களால் மூடப்பட்டு அந்நியமாகியிருந்தது.
உறவுகளின் இழப்பும் தேடுதலுக்கும் சாட்சியாய்
தலைமுறைகளைத் தாங்கிய அரசமரம்
வாசிகசாலையை தொலைத்திருந்தது

மக்களின் துயரத்தாங்கிய
நினைவுத்தூபி
கடற்படை முகாம்களால்
மீளவும் சுற்றிவளைக்கப்பட்டிருக்கிறது
நிலத்தை ஆக்கிரமிக்கும்
நுட்பமான தொடர் நகர்வுகளில்
சிறைப்படடுப்போனது வாழவைத்தமண்
இத்தனைக்குள்ளும்,
சொந்த நிலத்தை தாங்கி நிற்கும்,
மண்ணை நேசிக்கும்
உறுதியும் பற்றும் கொண்ட தலைமுறையை
எங்கள் தாய்மண்
பிரசவித்துக்கொண்டேயிருக்கிறது..

*சி.தி.கங்காதரன்*

# என்னவர்களுக்கு!



என்றென்றும் எம் உள்ளத்து உணர்வோடு ஒன்றிக்கலந் திருக்கும் எனை ஈன்றதாய் நிலம் சார்ந்த இனிய உறவுகளே!

புலம்பெயர்வாழ்வில் எங்களை, எம் நிலங்களை, அடையாளங்களை இழந்து மூலவேர் வெட்டப்பட்டு உலகின் பல்வேறு திசைகளில் வீசப்பட்டாலும் தொப்பிள் உறவுகள் பேணி அடையாளம் தந்து தமிழ்த்தாகம் தீராதோராய் எம்மைப் புடமிட்டுக் காட்டும் தொல்புரியாம் கல்வேலி (பகிர்)த்தீவை மறக்காது அந்தச் பெருமைகளைக் காப்பாற்றி எம்மாலான, சேவை செய்வோம் எனத் துடித்து "திரை கடல் ஓடித் திரவியம் தேடி" அந்தத் தேடல்களை வீணே சிதைப்பதற்கேற்ற சிந்தையில் மூழ்கிச் சீரழியும் இந்த வாழ்வியல் சுமையினுள்

தொலைவாய்க் கிடக்கின்ற எங்கள் இனிய தீவை அதன் சார்பு நேச உறவுகளையும் பேணுவோம் என்று பேரவாக்கொண்டு உதவத்துடித்து கூடவே கூட்டணியாய்ப் பயணிக்கின்ற எம் பிரித்தானிய தேசத்தின் ஒன்றிய செயற்பாட்டுக் குழுவினரே! பிரித்தானியா வாழ் தீவகப்பற்றுள்ள அனைத்து உறவுகளுக்கும் எம்மனம் நிறைந்த வணக்கத்துடன் கூடிய வாழ்த்துக்கள்.

இத்தகு தேடலின் விளைவாக பிரசவித்திருக்கும் இந்த மகத்தான கலை இரவாக கல்வேலிக் கலைமாலை சிறக்க உழைத்த உத்தமர்களின் கரங்களை இந்தக் கணக்கில் இறுகப்பற்றுகின்றோம்.

இந்துக் கடலின் முத்தென மிளிர்ந்து சில்லிட்ட காற்றும், சிரிக்கும் அலைகளும் அணைகொள்ள, பசு பரியோடு பனை, தென்னை பல்வேறு மலர்ச் சோலைகளும் பல்லின உயிரினங்களும் உலாவரும் அழகாபுரி எம் தீது.

இன்று அத்தீவையும் அதன்சார் மக்களையும் கொடும்போர் மென்று துப்பியுள்ளது. அண்மையில் நடந்த வன்னிப்போரில் வதைப்பட்டோரில் வகைப்படுத்தப்பட்டால் ஆறில் ஒரு பங்குக்கு மேலாக எம்மவர் உளர் என்பது எனது தனியான கணிப்பு. இதற்கு முன் நேரடியாக குமுதினிக் கொலையை நீங்கள் அறிவீர்கள்.

ஆண்டானின் ஆதிக்கப்பிடியினுள் சிக்கிச் சாதிக்கக் கூடிய இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள், கல்விமான்கள் அல்லலுற்றுத் தவிக்கின்றார்கள். மேலும் பசி, பட்டினிச்சாவு, கொடிய நோய், அங்கங்கள் பறிப்பு, தொழில்

வாய்ப்புப்பறிப்பு, வாழ்வது எப்படி? என்பன பெரும் சலாலாய் அவர்களை தினமும் துரத்துகின்றது.

வைத்தியம், கல்வி, குடிநீர்ப்பிரச்சினை, போக்குவரத்து சீரின்மை, கடலரிப்பு என்று பல்கிப்பெருகி நிற்கும் பல் பிரச்சினைகளால் அவர்கள் பாதையறியா பயணம் செய்து வருகின்றார்கள்.

தூரத்து உறவல்ல நாம். நேச உறவுகள் அவற்றைத் தீர்ப்பதற்கான பங்களிப்பில் நாமும் கட்டாயமாக இணையவேண்டிய தேவை, அவசியம், கடமை உள்ளதன்றோ. அதற்காய் இணைந்து பணியாற்ற உரிமையுடன் அழைக்கின்றோம்.

நெடுந்தீவு மண்ணின் தனித்தன்மையான அடையாளங்களை பதிவு செய்து பேணிப்பாதுகாக்கும் பெருநோக்கிலேயே கல்வேலி கலைமலர் உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

பிரித்தானிய பெருந்தேசத்தில் கால்கோள் கொண்டுள்ள இந்தப் பண்பாட்டுப் பதிவு கல்வேலி இதழோடு வருங்காலங்களில் உலகெங்கும் வாழும் எம்தீவக உன்னதர்களை இணைத்து வளரவேண்டுமென்பது எம் அவா.

மனிதம் நிறைந்த மானிடர்கள் நாம் புனிதம் நிறைந்த எம் மண்ணில் மதிப்புறு உள்ளத்தோடு போற்றப்படும் பணி செய்யவே, கடந்த 15.05.2013 குமுதினிப்படகு 28ம் நினைவு நாள் நேரம் கண்ட ஒன்றிய புதிய நிர்வாகம் - அன்று தொடங்கி இன்றுவரை உள்ள பத்து மாத இடவெளியில் மாதமொருமுறை ஒவ்வொரு அங்கத்தவர் இல்லங்களில் ஒழுங்குமுறையென சீரான கூடுகை நடாத்தி ஐக்கிய ராச்சியம், எம் தீவகம் இவை தவிர்ந்த நிலத்தில் வாழும் எம்மவர் தேவையறிந்து அவர் வாழ்வு வனப்புற உழைப்பதற்காய் உந்துதல் கொண்டு செயற்படுகின்றது. நிலம் கொண்டோர் யாவரும் நீள்கரம் கொண்டு நிலத்தினை நல்நிறைவுடையதாய் ஆக்குவோம் வாரீர்!

நம்பிக்கை என்பதே மனிதரின் மாபெரும் சக்தி

அன்புடன்
*கா.சாந்தலிங்கம்*
*செயலாளர்.*
*நெடுந்தீவு ஒன்றியம் ஐக்கிய இராச்சியம்*

# சங்க இலக்கியங்கள் (Sangam Literatures)

தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொடர்ச்சி கொண்ட உலகின் சிறந்த இலக்கியங்களில் ஒன்று. இவற்றில் சங்க இலக்கியங்கள் எனப்படுவது தமிழில் கிறிஸ்துக்கு முற்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட தொன்மையான இலக்கியங்கள் ஆகும். இச் சங்க இலக்கியங்கள் 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் பல தரப்பட்ட தொழில் நிலையுள்ளோரும் பெண்களும், நாடாளும் மன்னரும் உண்டு. சங்க இலக்கியங்கள் அக்காலகட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளைப் படம்பிடித்துக் காட்டுவதாய் உள்ளன. பண்டைத்தமிழரது காதல், போர், வீரம், ஆட்சியமைப்பு, வணிகம் போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப்பாடல்கள் அறியத்தருகின்றன.

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான சி. வை. தாமோதரம்பிள்ளை, தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத அய்யர் ஆகியோரது முயற்சியினால் சங்க இலக்கியங்கள் அச்சுருப் பெற்றன. சங்க இலக்கியங்களை எட்டுத்தொகை நூல்கள், பத்துப்பாட்டு நூல்கள்,பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனப் பெரும்பிரிவுகளாகத் தொகுத்தடக்கப்பட்டுள்ளன

### எட்டுத்தொகை நூல்கள்

- 1.நற்றிணை (**Narrinai**)
- 2.குறுந்தொகை (**Kurunthokai**)
- 3.ஐங்குறுநூறு (**Ainkurunooru**)
- 4.கலித்தொகை (**Kalithokai**)
- 5.அகநானூறு (**Agananooru**)
- 1.பதிற்றுப்பத்து (**Pathirruppattu**)
- 2.புறநானூறு (**Purananooru**)
- 1.பரிபாடல் (**Paripadal**)

### பத்துப்பாட்டு நூல்கள்

- திருமுருகாற்றுப்படை (**Thirumurugatrupadai**)
- பொருநராற்றுப்படை (**Porunaratrupadai**)
- சிறுபாணாற்றுப்படை (**Sirupanatrupadai**)
- பெரும்பாணாற்றுப்படை (**Perumpanatrupadai**)
- மலைபடுகடாம் (**Malaipadukadam**)

- மதுரைக்காஞ்சி (Maduraikanchi)
- குறிஞ்சிப்பாட்டு (Kurinjipattu)
- பட்டினப்பாலை (Pattinapalai)
- முல்லைப்பாட்டு (Mullaipattu)
- நெடுநல்வாடை (Nedunalvaadai)

**பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**

- நாலடியார் (Naaladiyar)
- நான்மணிக்கடிகை (Naanmanikadikai)
- இனியவை நாற்பது (Iiniyavainarpadhu)
- இன்னா நாற்பது (Innanarpadhu)
- திரிகடுகம் (Thirikadugam)
- ஆச்சாரக் கோவை (Acharakovai)
- சிறுபஞ்சமூலம் (Sirupanchamoolam)
- முதுமொழிக்காஞ்சி (Mudhumozhikanchi)
- பழமொழி நானூறு (Pazhamozhinaanooru)
- ஏலாதி (Elathi)
- திருக்குறள் (Thirukural)
- கார் நாற்பது (Kaarnarpadhu)
- ஐந்திணை ஐம்பது (Iiynthinaiiympadhu)
- திணைமொழி ஐம்பது (Thinaimozhiiympadhu)
- ஐந்திணை எழுபது (Iynthinaiezhupadhu)
- திணைமாலை நூற்றைம்பது (Thinaimaalainootruiympadhu)
- கைந்நிலை (Kainilai)
- களவழி நாற்பது (Kalavazhinarpadhu)
- இன்னிலை (Innilai)

- கேஆர்.சக்தி வேல்

# தமிழகப் பண்டைய அளவை முறைகள்



பண்டைய தமிழகத்தில் ஏழு வகையான அளவை முறைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. அவை பற்றி பண்டை நிகண்டுகளும் இலக்கிய நூல்களும் பேசுகின்றன. அவை:

**1. எண்ணல்**

ஒன்று, இரண்டு, மூன்று என்ற எண்ணாகவோ வீசம், அரைக்கால், கால் என்ற இலக்கமாகவோ, அல்லது பதாதி சேனாமுகம், குமுதம் எனத் தொகையாகவோ எண்ணிக் கணக்கிடுவது எண்ணல் அளவை ஆகும்.

**2. நிறுத்தல்**

குன்றிமணி, வராகனெடை, பலம், வீசை, துலாம் என படிக்கல் கொண்டு தராசிலிட்டு நிறுப்பது நிறுத்தல் அளவை ஆகும்.

**நிறுத்தல் அளவு**

நிறுத்தல் அளவுக்கான தராசு ஆறு வகைப்படும்.

- மணித்தராசு - இது இரத்தினம் முதலியவற்றை நிறுக்கும் மிகச் சிறிய தராசு
- பொன் தராசு - தங்கம் போன்றவைகளை நிறுக்கும் சிறு தராசு
- உலோகத் தராசு - செம்பு, பித்தளை முதலியவற்றை நிறுக்கும் பெருந் தராசு
- பண்டத் தராசு - பலசரக்குகளை நிறுக்கும் தராசு
- கட்டைத் தராசு - விறகு அல்லது மூட்டைகளை நிறுக்கும் தராசு. இது இரு புறமும் சதுர மரப்பலகைகளைத் தட்டுக்களாகக் கொண்டிருக்கும்.
- தூக்கு - காய்கறிகளை நிறுக்கும் தராசு. இது மரக்கம்பாலான துலாக் கோலின் ஒரு பக்கத்தில் மட்டும் தொங்கும் கூடைத் தட்டால் ஆனது.



# நன்றி நவிலல்

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு - திருக்குறள்

நமது ஒன்றியம் சார்பான கல்வேலி கலைமாலை நிகழ்வுகளுக்கும், கலை மலர் ஆக்கத்திற்கும் மட்டுமன்றி எமது ஆரம்ப கால செயற்பாட்டில் இருந்து இன்று வரை வெவ்வேறு வகைப்பட்ட செயற்பாடுகளுக்கு குறிப்பாக எமது முதற் தேவையான அங்கத்தவர் பற்றுச்சீட்டு தயாரிப்பதற்கு தன் பங்களிப்பை அன்பளிப்பாக வழங்கியவர் முதற்கொண்டு இன்று வரையான செயற்பாடுகளுக்கு எம்மோடு சேர்ந்து ஒத்துழைத்த செயற்குழு உறுப்பினர்களுக்கும், மற்றும் எம்மவர்களுக்கும் சிறப்பாக எமது ஊரைச் சேரா ஊராய் இருந்து எமக்கு உதவியர்களுக்கும் மலருக்கு ஆக்கங்கள் வழங்கியவர்களுக்கும் விளம்பரங்கள் தந்துதவி யவர்களுக்கும், இன்னும், வெவ்வேறு விதமாகவும் ஒத்துழைத்தவர்களுக்கும், குறிப்பாக இம்மலரினை ஏற்ற சிறப்போடு ஆக்கியவர்கள், அச்சுப்பதிவு செய்து வெளியிட்டுதவிய ஜே ஆர் அச்சக உரிமை யாளர், பணியாளர்களுக்கும் மற்றையோருக்கும் எமது அன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெடுந்தீவு ஒன்றியம்
ஐக்கிய இராச்சியம்

# JR Print

www.jrprint.com

59-61, Hoe Street,
Walthamstow
London E17 4QR

T : 020 8503 6643
F : 020 8521 3967
M : 07939 998 730
E-mail : ravi@jrprint.com

## 25 Years Experience In the Printing World

* Arangetram Books
* Stickers, Labels
* Bill Books, Invoices
* Colour Leaflets
* Rich Cakes & Boxes
* Raffle Tickets
* High Speed Copier
* Rubber Stamps
* Lamination
* Translation Services
* Birthday Cards
* Letter Heads
* Wedding Cards
* Perfect Binding
* Photocopying
* Comb Binding
* Short eat Bags
* Gold Blocking
* Visiting Cards
* Colour Printing
* Invitation Cards
* Souvenirs & Invoices
* Fast, Reliable & Friendly Service





## DJ Service Available


For Small Parties Like Birthdays
Meetings, Puberty Ceremonys



**Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost.**

**Call For Free Quotation**


AKILAN ENTERPRISES
அகிலன் எண்டர்பிரைசஸ்
Handicrafts, Fancy Goods, Pooja ltems, Indian Magazines,
Tamil Navals, Bharathanatyam Costumes & Jewells And
Pooja Temple for Homes
Tamil, Telugu & Hindi Video's Audio CD's
MP3 CD's, DVD &
VCD & DVD for Rental
einthusan.com
274, High Street North, Manor Park, London E12 6SA
Tel: 020 8548 0033 Fax: 020 8548 0300
web: www.akilanenterprises.com E-mail: seliyan24@hotmail.com



Asian, Oriental & Afro-Caribbean food speciality
Veena's
Cash & Carry
CASH & CARRY
LENTILS & SPICES
HALAL BUT
FROZEN FO
All Your Favourites
Under One Roof
Asian beauty, cosmetics & hair care products
Asian fruits & vegetables
Frozen fish & sea food
Afro-caribbean food items
Oriental food & spices
Ready to eat, snacks and pickles
Frozen food, processed food
Pooja items
House hold goods, Kitchenware
Halal Meat
International Money transfer - BFC
Audio/Video CD, DVD
Veena's
Branded Products
77-79 High Street, Barkingside, IG6 2AF
020 8550 2700, www.veenas.com

***Mob: 07865068554  Tel: 02084234501***

# **R. S. N Builders**

Building contractors:



- ***Roofing***
- ***Extension***
- ***Flooring***
- ***Wiring***
- ***Plumbing***
- ***Central heating***
- ***Carpentry/Brick Works***
- ***Driveways***
- ***Decoration & painting & Kitchen & Bathroom fitting***



***Mr Ravi***

***1 Alexandra Avenue***

***Harrow***

***HA2 8PQ***



SURIYA JEWELS
"உண்மை வெல்லும்"
சூரியா ஜுவெல்லர்ஸ்
விதவிதமாய்,
வித்தியாசமான
டிஸைன்கள் உங்கள்
அழகிற்கு அழகூட்டிடும்.
உங்கள் பழைய பவுண்களை கொடுத்து
புதிய நகைகளை வாங்கலாம்
அது மட்டுமல்ல நீங்கள்
செய்யும் Orderகள் குறித்த நேரத்தில்
செய்து தருவதில் வல்லுனர்கள்
மலிவான விலையில் தரமான தங்கத்திற்கு Eastham இல்
292 HIGH STREET NORTH, LONDON E12 6SA
Tel: 020 8552 2224
Fax: 020 8821 9435


THANALAKSHME JEWELLRS
தனலக்ஷ்மி ஜுவலர்ஸ்
பழைய தங்கம் நியாயமான விலைக்கு வாங்கப்படும்.
முறைப்படி பொன்னுருக்கி வைரத்தாலிக்கொடி, மின்னல்கொடி என்பன செய்து தரப்படும்.
பொன்னுருக்கல் இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.
சகல நகைகளும் சிங்கப்பூர் விலைக்கே வழங்கப்படும்
தொலைபேசி
T: 020 8551 1153
முகவரி: 82 High Street,
Barkingside, Ilford, Essex IG6 2DJ

# SAKTHI CASH & CARRY






## Fresh fruits and vegetables available for direct pickup

***Specialist in:***
Indian & Sri Lankan groceries
Fancy Items & Bureau de Change

***We offer a wide range of***
groceries Fresh & Frozen,
Soft drinks, Confectionery & Snacks,
licensed products, Health, Home & Beauty.

**Head Office**
Sakthi Cash & Carry
245-247, High Street North,
Manor Park,
London, E12 6SJ
Tel: 02084714713
Fax : 02084710318

**Branch office**
Swathi Cash & Carry
306-308, High Street North
Manor Park,
London, E12 6SA
Tel: 02085867648

**Paris Office**
Sakthi Cash & Carry
104, Av.Paul Vallant Couturier,
93120, La Courneuve
Paris
Tel: 0141699425
Fax: 0141699426

R

# Ragu Estate Agents





- Sales
- Lettings
- Mortgages
- Constructions
- Property Management

நம்பிக்கையான நாணயமான மற்றும்
தரமான சேவைக்கு இன்றே நாடுங்கள்

258 High Street North, Manor Park
London E12 6SB

Tel: 020 8586 2323, Fax : 020 3490 9187
E-mail: ragu_travels@hotmail.com




# BM Coaches









**Contact:**

BM Coaches & Rental Limited
BM House, Silverdale Road, Hayes, Middlesex,
UB3 3BH. United Kingdom.
Tel: 0208 848 7711 Fax: 0208 848 7722
Web: www.bmcoaches.co.uk E-mail: info@bmcoaches.co.uk


www.chennaispice.com
TAKE AWAY & HOME DELIVERY
Chennai Spice
Restaurant and Banqueting
Chennai Spice opens
new Banqueting Suite.
For your party needs, book in advance and
get a discount!
"Small parties to big events, Chennai Spice offers two Banqueting Suites, one venue for the small parties and the other for larger events"
"Large modern Banqueting suite available for up to200 people"
Restaurant and Banqueting is open 7 days a week
Chennai Spice offers authentic Srilankan & South Indian cuisine
Live Music on Thursdays and Fridays
Home Delivery
up to 3 miles radius
(Order over 15)
London's premier Outdoor Caterers for Srilankan & South Indian food.
We cater for a variety of events such as Weddings, Engagements, Arangetrams, Birthday parties, conference to name a few.
Chennai Spice Restaurant and Banqueting, 213-217 Hertford Road, London, N9 7ER,
Tel: 020 8805 9944, 020 8805 8215, Mob: 07932 059 553
email: info@chennaispice.com


GANA
RESTAURANT
Sri Lankan & Indian Cuisine
Specialists in Spicy Food
Restaurant & Bar
Take aways
Mon - Sun: 12:00 - 23:00
Ganauk
www.ganarestaurant.co.uk
Tel: 020 8429 8447
13, Village way East, Rayners Lane
Harrow Middx HA2 7LX




Private Coach



Corporate Coach



VIP Coach



Events Coach Hire



Transfers



School Tours



Theme Park Tours



UK / Europe Tours





Contact:
BM Coaches & Rental Limited
BM House, Silverdale Road, Hayes, Middlesex,
UB3 3BH. United Kingdom.
Tel: 0208 848 7711 Fax: 0208 848 7722
Web: www.bmcoaches.co.uk E-mail: info@bmcoaches.co.uk

வளர்ந்துவரும் தமிழ் கலைஞர்களுக்கான முதன்மை ஊடகம்

www.Tamilithal.com

விமர்சனம்
REVIEW

www.Tamilithal.com

எங்கட
கலைஞர்

Tamilithal

ANDROID APP ON
Google play

Available on the
App Store

www.Tamilithal.com
Media for Tamil Emerging Artist

eMail: tamilithal@thamilithal.com

Articles - News - Reviews - Events

JANANAM
WWW.JANANAMMEDIA.COM

Film Production
Video - Photo
Album making
Event Management
Web Designing

Contact us - 07446160789

# LINKS LEGAL
SOLICITORS

*Today's legal solutions*

## We've been helping thousands with the law, how can we help you?



IMMIGRATION • RESIDENTIAL CONVEYANCING • COMMERCIAL CONVEYANCING
GENERAL LITIGATION • COMMERCIAL LITIGATION • FAMILY & CHILDREN
CRIME • LANDLORD & TENANT • WILLS & PROBATE • EMPLOYMENT LAW

*Jeevah Daniel Haran and others at Links Legal congratulate Delft Society (UK) for its efforts and send their best wishes for the Society to go from strength to strength in its service to the community.*

CELEBRATING 10 years

ACCREDITED MEMBERS OF THE LAW SOCIETY'S CONVEYANCING QUALITY SCHEME

42 Redbridge Lane East, Ilford, Essex, IG4 5EX | Tel: 0208 551 0999 | Fax: 0208 551 2979 | Email: info@linkslegal.co.uk

WWW.LINKSLEGAL.CO.UK

THE MARK OF EXCELLENCE FOR THE HOME BUYING PROCESS. Conveyancing Quality

# HEATHROW GATES & RAILINGS

**For a free quotation call Michael on:**

**T: 02033725514  Fax: 02087515726  M: 07983487392**




*GATES / ROLLER SHUTTERS / GRILLS / RAILINGS / METAL WORK / REPAIRS & MAINTENANCE*

We specialise in all aspects of quality wrought iron work custom made gates and railings with more than 20 years experience we can design and fabricate all your needs.




**Michael**

*Director*

**298 Stains Road**
**East Bedfont**
**Middlesex**
**TW14 9HD**

**email: anan76@ymail.com**
**web: www.heathrowgatesandrailings.co.uk**


நெருழுவினியான்
துணையோடு
நெடுந்தீவு ஒன்றிய மலர்
சிறப்புற வாழ்த்துகிறோம்
BARANIS

# EDMONTON SAYAS

## ALWAYS FRESH ! ALWAYS CHEAP

FRESH VEGETABLES AND FRUITS

SRILANKAN AND INDIAN FOOD PRODUCTS

FROZEN FISH


OFF LICENCE

**CUSTOMERS BEST CHOICE AS ALWAYS**

**SPECIALIST IN SRI LANKAN PRODUCTS**

219 - 221 HEARTFORD ROAD EDMONTON LONDON N9 7ER

TEL / FAX: 02088059529



Maruthi
Express
Take away and Catering
Tel: 020 3719 9686
14, Queensbury Station Parade, Queensbury
Edgware, HA8 5NR London

# JOTHY ஜோதி

**Healthy Mind**
**Happy Life**

நலமான உள்ளம் மகிழ்வான வாழ்வு

## HELP-LINE & COUNSELLILNG SERVICES

0203 371 0 006

1.00PM - 9.00PM

உடலுக்கு மட்டுமல்ல
உள்ளத்திற்கும்
நெருக்கடிகளுண்டு!!!
விபரீதம் ஏற்படுமுன்
உதவியை
நாடுங்கள்!!!

## HELP-LINE & COUNSELLING SERVICES

The memory of unhappy experiences and painful feelings can result in emotional, mental and physical health problems

**SEEK HELP BEFORE IT'S TOO LATE!**

# 020 3371 0006

**This is a FREE & CONFIDENTIAL service**

AHILAN FOUNDATION
Charity NO:1134912

**1.00PM - 9.00PM**
Monday to Saturday

இது ஒரு இலவச அந்தரங்க சேவை

**Ahilan Foundation, Charity Number:1134912**

# Lycamobile

Call the world for less

# Sri Lanka



**5 p/min** Landline

**5 p/min** Mobile

## Text "ACT SAVE" to 2525

**For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322**

Top-up your SIM online or where you see the following signs:

TESCO Martin McColl phones 4u Sainsbury's WHSmith Carphone Warehouse

Offer valid for new and existing Lycamobile customers. The above special rates are applicable for those customers who joined on or after 08.02.2014. Existing customers who joined before 08.02.2014 should opt-in by texting ACT SAVE to 2525. If you are a National plan / UK PLAN 10,12,20,30 & 40 customer, you will eligible for the Special discounted international rate. Existing customers who joined before 08.02.2014 who do not opt in will be charged at the standard rate. Promotion valid from 08.02.2014.

Lyca mobile
Call the world for less

Printed @JR Print Tel: 020 8503 6643 www.jrprint.com